# தகவலில் தெரிந்தவை!



எஸ். ஜெகதீசன்

உ

# தகவலில் தெரிந்தவை


**எஸ்.ஜெகதீசன்**

*வாசித்து நேசித்ததை நேசித்து வாசிக்க*

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# *தகவலில் தெரிந்தவை*

***எஸ்.ஜெகதீசன்***




**இலவசமாக இந் நூலின் மின் நூல் வடிவினை பெற்றுக் கொள்ள விரும்புவோர் S.Jegatheesan14@gmail.com என்ற மின் முகவரியில் தொடர்பு கொண்டால் அனுப்பி வைக்கப்படும்.**

முதலாது பதிப்பு: 2020.07.01 கனடா தினம்.

***வெளியீடு:***


இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

...

முது பெரும் பத்திரிகையாளர்

**திரு. ஈ.கே.ராஜகோபால்**

பிரதம ஆசிரியர் புதினம் இங்கிலாந்து



***நினைவில் நிலைக்கும் இதயவுரை.***

*ஜெகதீசன் எனது பரம ரசிகன் என்றே தொன்று தொட்டுச் சொல்லிக் கொள்வதுண்டு.*

*நானும் ஜெகதீசனின் பரம ரசிகன் என்பது யாருக்கும் தெரியாது.*

*ஜெகதீசனின் எழுத்துகளைப் படிக்கிற போது நெஞ்சு நிறையும்.பேசும் போது இளமை என்னை அரவணைப்பது போன்ற உணர்வு ஏற்படும்.*

*'ராஜி ' என்று விழித்துப் பேசுகின்ற பாங்கில் வாஞ்சை மிளிரும்.*

*பல பத்திரிகைகளைப் படிக்கிறேன். அனைத்துப் பக்கங்களையும் புரட்டிப் பார்த்து விட்டுப் பின் படிப்பேன்.*

*ஆனாலும் அந்த ஒரு சஞ்சிகையில் மட்டும் முதலில் படிப்பது ‘பத்தாம் பக்கம்’ தான்.*

*கொடூரர்களின் கொலை வெறிக்கு தன் ஒரே மகனைப் பலி கொடுத்து கனடா மண்ணில் தஞ்சம் வழங்கப்பட்டு அங்கு வாழும் ஊடகவியலாளர் நண்பர் திருச்செல்வம்.*

*இளம் வயதிலே யாழ்ப்பாணத்தில் இரண்டு பத்திரிகைகளை ஆசிரியராக இருந்து நடத்தியவர்.*

*கனடாவில் ஆரம்பித்த தனது தமிழர் தகவல் சஞ்சிகையில் எந்த ஒரு எழுத்தாளருக்கும் வழங்காத ஒரு மதிப்புத்தான் அந்தப் ‘பத்தாம் பக்கம்.’*

*பன்முகத் தன்மைகளை தன்னகத்தே கொண்டு தனித்துவமாக இயங்குபவர் களைத் தன்னோடு இறுக அணைத்துக் கொள்ளும் சக்தி படைத்தவர் தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் எஸ்.திருச்செல்வம்.*

V

*அவ்விறுக்கமான அணைப்பில்*
*ஜெகதீசனும் ஒருவர் என்பதனை*
*‘ஊடகத்திரு’ சாட்சியம் கூறும்.*

*ஜெகதீசனை எனக்குப் பிடிக்கிறது.*

*எதை எழுதினாலும் எப்படி*
*எழுதினாலும் எனக்குப் பிடிக்கிறது.*

*ஏன்?*

*எனக்குள்ளேயே கேட்டிருக்கிறேன்.*
*பல முறை கேட்டிருக்கிறேன்.*

*எடுத்த விஷயத்தை மட்டும் விபரமாக*
*எழுதுகிறார்.எளிமையாக எழுதுகிறார்.*
*அளவாக எழுதுகிறார்.நிறைவாக*
*எழுதுகிறார்!*

*அவரது வசீகரத் தமிழ் எழுத்து*
*நடையுடன் தகவல்கள்*
*நிறைந்திருக்கும்.*

*அவ்வளவுதான்!*

*எந்தப் பரம ரகசியமும் இதில்*
*இல்லை.*

*நூறுக்கும் மேலான கட்டுரைகளை தமிழர் தகவல் மாத இதழ்களிலும் அதன் ஆண்டு மலர்கள் பலதில் சிலதையும் எழுதியுள்ளார்.*

*2007ம் ஆண்டுக்கும் 2016க்குமிடையே ஆண்டு மலர்களில் வந்திருந்த ஐந்தோ ஆறோ கட்டுரைகள் உட்பட மாத மலர்களில் பத்தாம் பக்கத்தில் வெளி வந்திருந்த கட்டுரைகளுடன் 25 ஆக்கங்களை தெரிந்து எடுத்து இங்கு கண்ணெதிரே உலாவ விட்டுள்ளார்.*

*இதில் உள்ள சில கட்டுரைகள் புதினம் இதழிலும் வெளிவந்துள்ளன.*

*வாசிப்பில் விருப்பமுள்ளவர்கள் சகல கட்டுரைகளையும் ஒரே முறையில் வாசிக்க கூடிய சுவாரசியம் நூல் முழுக்க விரவியுள்ளது.*

*இந்தக் கட்டுரைகளுடன் சேர்ந்து எனது நினைவுகளும் பயணித்தன. அவற்றையும் உங்களுடன் பகிர்வது பொருத்தமாகும்.*

*நட்பு தெரியும்.ஆனால் பட்பு என்றொரு சொல் நடைமுறையில் உள்ளது தெரியுமா? இப்படி ஒரு கேள்வி யாவரும் கேளிர் என்ற கட்டுரையில் உள்ளது.*

*இதே போன்ற தொரு கேள்வியை பத்திரிகைத்தொழிலை நான் ஆரம்பித்த விவேகி சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த போது யாரோ கேட்டதும் 'கண்டறியாத நட்பு' என அதற்கு நான் சங்க இலக்கியங்களிலிருந்து பதிலளித்ததும் நினைவில் வந்தது.*

*ரொரன்ரோ நகரின் அதி உயர்ந்த கனடிய தேசிய கோபுரத்தின் உச்சியில் கை வீசியபடி நடந்து ரொரன்ரோ நகரை முழுமையாகப் பருந்துப் பார்வை பார்ப்பது தமிழ் மாணவர்களுக்கு சட்ட பூர்வமாக ஒரு வீர தீர விளையாட்டு. விளிம்பு நடை என்ற கட்டுரையின் ஒரு பந்தி இது.*

*சாதனை சாதனை சாதனை என தமிழனின் வீர தீரத்தை உலகறிச்*

*செய்த என் காவிய நாயகன் ஆழிக்குமரன் ஆனந்தன் என்னுள் சஞ்சரித்தான்.ஆழிக்குமரன் ஆனந்தன் என நான் எழுதி பெரும் வரவேற்பை பெற்றிருந்த நூல் சிலிர்த்தெழுந்து என்னுள் சாகசம் புரிந்தது.*

*தீபாவளிக்கென விசேட நாணயமும் தபால் தலையும் வெளியிட்டது கனடா என்பது மனதில் மகிமை பெறும் புதுத் தகவல்.*

*ஆஹா! வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்களுக்கும் இது தானே நடந்தது என இதயத்தில் முத்திரை குத்தியது அதே பெயரில் நான் எழுதிய புத்தகம்.*

*கௌரவ குடியுரிமை என்பது வெறுமனே கௌரவம் மட்டும்தான். வேறெதுவும் கிடையாது.*

*பாராளுமன்ற வளாகத்தில் பறக்கும் தேசீயக் கொடிக்கும் இதற்கும் வித்தியாசம் இல்லை.*

*அழகான பூ மரம் ஒன்றிற்கு மேலும் அழகு சேர்க்க தங்கமுலாம் பூசிய சங்கிலியை அணிவிப்பது போன்றது.*

*இந்த வரிகள் என்னை இழுத்துச் சென்றது வி.பொன்னம்பலத்திடம்!*

*வி.பொன்னம்பலம் ரஷ்ய கௌரவ குடியுரிமை பெற்றதும் வி.பியின் சோவியத் பயணக் கதை என நான் தத்ரூபமாக எழுதி நூலாக்கியதும் அதனை வாசித்தவர்கள் வி.பி.ரஷ்யா சென்றாரா? ராஜகோபால் சென்றாரா என வினவியதும் என் இளமைக் கால நினைவுகள்.*

*தேன் நிலவின் தலை நகர் என்ற கட்டுரையில் நயாகராவை புனலின் பூச்சரம் என்கிறது ஜெகதீசனின் அழகு தமிழ்.*

*நடுக்கமுறாத மீன்கள் சாரமாரியாய் எம்மீது வீழ்ந்து எம்மை உதற வைக்கும்.*

*குகைக்குள் உள்ள சிறு ஏணி ஒன்றில் ஏறினால் முழு அருவியும் எம் மீது விழும் திகிலை ஏற்படுத்தும்.*

*உலகில் வேறெந்த அருவியின் அடிவாரத்தையும் இவ்வளவு நெருக்கமாக பார்க்க முடியாது என்பது இதன் சிறப்பு.*

*ஜெகதீசனின் இந்த வார்த்தைகளில் லயிப்போர் அடுத்த முறை நயாகரா செல்லும் போது மலையைகுடைந்து சிறு பொந்து போல் காணப்படும் காற்றின் குகை என்ற பகுதிக்குள் செல்லாமல் திரும்ப மாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்.*

*சென்றால் மட்டும் திரும்பவா போகின்றார்கள் என்ற உங்கள் 'மைன்ட் வோயிஸ்' துல்லியமாக கேட்கின்றது.*

*எனினும் இதைத் தானே பருத்தித் தீவில் ஒரு ராஜா என்ற எனது தொடர் கட்டுரையை வாசித்தவர்களும் முன்னர் செய்ததும் அனலைதீவுக்கு அதன் பின்*

*சென்ற பலர் அங்காலை பருத்தி தீவையும் ஓர் எட்டு எட்டிப் பார்த்தே மீண்டதும் மனக்கண்ணில் விரிகின்றது.*

*வாகனத்துக்கும் மோட்சம் உண்டா? இதென்ன விண்ணாணம் என்கிறீரகளா! உண்டெண்கின்றது ஒரு கட்டுரை.*

*கனடாவின் சுவையில் கனடாவின் உணவையும் காணலாம். கனடாவின் உணர்வையும் காணலாம்.*

*இந்திய சுவையில் மண்பானை விறகு போன்றன ஒரு சிலரால் பயன்படுத்தப் பட்டு என்பது வரை பிரச்சினை இல்லை.*

*பாரம்பரியத்தைச் சூடாக்கும் எனத் தொடர்வது வார்த்தை விளையாட்டு.*

*ஈழத் தமிழரின் வீதி விழாவில் நோண்டி நொங்கெடுப்பவர்களையும் காணலாம்.*

*ஏன் வேறெங்கும் அவர்கள் இல்லையா என்று கேட்கத் தோன்றிடினும்*

*ஜெகதீசனின் வார்த்தைகளில்*
*மயங்குது மனது!*

*திறந்த கூண்டிலிருந்து கிளி*
*நளினமாய் மெள்ள நடை பயின்று*
*வெளியே வந்து அடுக்கப்பட்ட*
*சீட்டுகளை அங்குமிங்கும் புரட்டி*
*அதிலிருந்து ஒரு சீட்டை அலகினால்*
*கவ்வி சோதிடன் கையில் கொடுக்க*
*நல்ல காலம் எப்போ வரும் என*
*அவன் கூற 'வெள்ளை' உள்ளங்கள்*
*அதனை கேட்கும் காலம் என்றாவது*
*கனடாவிற்கும் பறந்து வரும்.*

*எதிர்காலத்தை எதிர்பார்பவர்கள்*
*என்ற கட்டுரையில் ஜெகதீசன்*
*குறிப்பிடும் வெள்ளை உள்ளங்கள்*
*யார்?*

*அப்பாவிகளா? வெள்ளை இனமா?*

*சாத்திரம் பார்ப்பதற்கும் கனடா*
*சளைத்ததல்ல என்ற வியப்பிலும்*
*கூடுதலான வியப்பு எத்தனை விதம்*

*விதமான சாத்திரங்கள் அங்கே உண்டு என்பதில் தோன்றுகின்றது.*

*நாணயம் என்றால் நேர்மை என்று பொருள்.கொடுப்பவரும் பெற்றுக் கொள்பவரும் நாணயத்தோடு இருக்க வேண்டும் என்பது 2020 ம் ஆண்டு வெளிவந்த 29 வது ஆண்டு மலரில் நாணயங்கள் பற்றி அவர் எழுதிய கட்டுரையின் இறுதிவரிகள்.*

*அந்த நாணயத்தின் பெறுமதியை எமது மக்களுக்கு உணர்த்தியவர் மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ!*

*இறக்குமதிக்கு தடை விதித்து உற்பத்தியை ஊக்குவித்ததில் நாணயம்.*

*கறுப்புப் பணத்தை நீக்க தடாலடி நடவடிக்கை எடுத்ததில் நாணயம்.*

*மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ எனது முதலாவது நூல் என்பது மாத்திரம் நினைவிற்கு வரவில்லை. நாட்டின் வடிவில் நாணயம் வெளியிட்ட*

*முதலாவது நாடு கனடா என்பதும் நினைவில் வந்தது.*

*அவுஸ்திரேலியா இதில் முந்திக் கொண்டதாகக் கருதப்படினும் அது வெறுமனே புறவடிவை மட்டுமே கொண்டிருந்தது.கனடா புற வடிவுடன் அதன் மாகாணங்களையும் உள்ளடக்கி இருந்தது.*

*ஆண்டவா அவர்களை காப்பாற்று என்பதே உலகின் பிரார்த்தனை! என்று முடிகிறது பந்தாடிய குகை.*

*ஆரம்பமானது என்ற அடுத்த கட்டுரை கூட இவ்விதமே ஆரம்பித்திருக்கலாம் என்ற ஏக்கம் மனதை குடைகின்றது.*

*தகுந்த தலைப்பு கட்டுரைக்கு உயிரூட்டும் என்ற சாமர்த்தியம் கைதேர்ந்த பத்திரிகையாளனிடம் உண்டு.*

*அதற்கு நல்ல உதாரணம் நுரை மகுடம்!*

*பத்திரிகைத்துறையை ஓரளவாவது படிப்பிக்கின்ற வாய்ப்பை எனக்கு அளித்த ஈழநாடு நிறுவனத்தில் உதவி ஆசிரியராக ஜெகதீசன் இணைந்த போது நட்பு ஆரம்பித்தது.*

*எந்த மனிதனையும் இலகுவாக கவர்ந்து விடுகின்ற அடக்கமான பண்பியல்பு எமக்குள் நெருக்கத்தை ஏற்படுத்தியது.*

*அந்தச் சமயத்தில் ஈழநாட்டில் பேட்டிகள் கட்டுரைகள் புதிய புதிய அம்சங்கள் என்று என்னுடைய ஆக்கங்கள் சரமாரியாக வந்து கொண்டிருந்தன.*

*அவை அனைத்தையும் அவ்வப் போதே வாசிப்பதுடன் பாராட்டு மழை யாகப் பொழிவது ஜெகதீசனின் சுபாவம்.*

*அது எனது ஆற்றலுக்கு மிகுந்த உற்சாகம் தந்ததுடன் மேலும் மேலும் சிறப்பாக எழுதும் ஆர்வத்தையும் அதிகரித்திருந்தது.*

*அப்போது முகிழ்ந்த ஒரு நேச உணர்வு சுமார் ஐம்பது ஆண்டுகளை அண்மித்திருப்பினும் இன்னமும் இதயத்தில் கமழ்கின்றது.*

*அந்தக் காலத்திலேயே ஜெகதீசனின் எழுத்தின் தனித்துவத்தை மிகவும் ரசித்துள்ளேன்.*

*வாசகர்களை நாடி பிடித்துப் பார்த்து எழுதுவதில் வல்லவர் என்றே கணித்துள்ளேன்.*

*கலை இலக்கிய இதழியல் பரப்பில் கால் பதிக்க விரும்பிய ஈழநாடு அவரை தேர்ந்தெடுத்து கமலம் என்று சஞ்சிகைக்குப் பெயரிட்டு கோபுவின் வழிகாட்டலில் தயாரிப்புப் பணிகளில் முழு மூச்சுடன் மும்முரமாக ஈடுபட வைத்தது.*

*ஜெகதீசனின் அன்றாட அலுவல்களை அருகிருந்து அவதானிக்க நேர்ந்தது.*

*பல இதழ்களை அடுத்தடுத்து வெளியிடக் கூடிய வகையில் மிக்க*

*கடமையுணர்வுடன் முக்கிய விஷய தானங்களை நேர்த்தியாக அழகாகத் தயாரித்திருந்தார்.*

*இங்கிலாந்தில் முதலாவது தமிழ் இதழாக வெளிவந்த லண்டன் முரசு வின் ஆசிரிய குழுவில் அவர் பணியாற்றிய காலத்தில் ஒரு நாள் அலுவலகத்துக்கு என்னை அழைத்துச் சென்று தமிழ்ப் பெரியார் சபாபதிப் பிள்ளையின் மகனான ஆசிரியர் சதானந்தனை எனக்கு அறிமுகப் படுத்திய நினைவுகளை மறக்க முடியாது.*

*லண்டன் தமிழ் இதழ் ஒன்றில் ஆற்றுகின்ற பணிகளை நேரில் பார்த்துப் பெருமைப்பட்டேன்.*

*ஆயிரத்துக்கு மேலானவர்கள் திரண்டி ருந்த கனடாவில் தமிழர் தகவல் ஆசிரியர் தலைமையில் நடந்த எனது ஆழிக்குமரன் நூல் வெளியீட்டு விழாவில் வெளியிட்ட சிறப்பு மலரைச் சிறப்புறத் தயாரித்தவர் ஜெகதீசன்.*

XVIII

*என்னைப் பற்றி அவர் எழுதியுள்ள அறிமுகக் கட்டுரை என் நெஞ்சில் வாழும் வரிகளாக இன்று வரை பவனி வருகின்றது.*

*அந்த விழாவின் வெற்றியில் அவரின் பங்களிப்பை நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.*

*இளவாலை எஸ்.ஜெகதீசன் என்ற எனது நண்பனின் பார்வை என்றுமே வித்தியாசமானது.சுவை நிறைந்தது.*

*இந்நூலினை விரித்தவுடன் தென்படும் வாக்கியம் அர்த்தமுள்ள தெரிவு.*

*வாசித்து நேசிக்க வைத்தவர் திருச்செல்வம்.*

*நேசித்து வாசிக்க வைத்தவர் ஜெகதீசன்.*

*இதயத்தால் வாழ்த்துகின்றேன் ஜெகி!*

*வாழ்க!*



முது பெரும் ஊடகவியளாளர்
திரு. திரு எஸ்.திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர் தமிழர் தகவல் கனடா



### வரமாகப் பெற்ற வாழ்த்துரை!

ஊடக உலகம் பரந்து விரிந்தது. ஆழமும் அகலமும் கொண்டது. சில சமயம் எல்லைகளைக் கடந்து விசாலித்துச் செல்லும்.

இத்தனை சிறப்புக் கொண்ட ஊடக வாழ்வில் ஐம்பது ஆண்டுகளாக நன்கறிந்த, நாற்பது ஆண்டுகளாக கூடிப்பழகிய, முப்பது ஆண்டுகளாக இணைந்து பணியாற்றிய நண்பர் எஸ். ஜெகதீசனின் நூலுக்கு வாழ்த்துக்கூற கிடைத்த வாய்ப்பு இதயத்தைக் குளிர வைக்கிறது.

நாம் இருவரும் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகைப் பண்ணையில் பிரசவமானவர்கள். அங்கு எனது ஐந்தாண்டை முடித்துவிட்டு கொழும்பு தினகரனுக்குச் சென்ற வேளையில் ஜெகதீசன் அவர்கள் ஈழநாடுவில்

*கால் பதித்தவர். இருவரதும் பணிக்காலம் முன்னுக்குப் பின்னாக அமைந்திருப்பினும், ஊடக ஆளுமையிலும் அனுபவத்திலும் திறமையிலும் அவர் இளையவரல்ல.*

*பின்னர் இங்கிலாந்து, நோர்வே நாடுகளில் அவர் வாழ்ந்த வேளையில் உலகின் பல பாகங்களிலிருந்தும் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பணியாற்றிய அனுபவஸ்தர். இது அவரது ஊடக வளர்ச்சிக்காலம்.*

*1983க்குப் பின்னர் யாழ்ப்பாணம் ஈழமுரசு மற்றும் முரசொலி பத்திரிகைகளில் பிரதம ஆசிரியராக நான் கடமையாற்றிய சமகாலத்தில், இவர் அங்கு வெளிவந்த உதயன் நாளேட்டின் வார வெளியீடான சஞ்சீவியின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றியவர். இது அவரது ஊடக எழுச்சிக்காலம்.*

*தாயகத்தின் போர்க்காலம் எங்கள் இருவரையும் நாடோடிகளாக மாற்றியது. இதன் விளைவு நாங்கள் கனடியத் தமிழரானோம். இக்காலத்தை நண்பர் ஜெகதீசனின் ஊடக முதிர்ச்சிக் காலம் என்று கூறலாம்.*

*1991ம் ஆண்டு தமிழர் தகவல் கனடாவில் வெளிவர ஆரம்பித்த காலத்திலிருந்து அதனுடன் இணைந்தும் பிணைந்தும் பணியாற்றி வருபவர் ஜெகதீசன். தகவலின் முதலாவதாண்டு மலரின் ஒரு முழுப்பக்கத்தில் தமிழர் தகவலின் மூலவேர்கள் என்ற மகுடத்தில் பன்னிருவரின் ஒளிப்படங்கள் இடம்பெற்றன. அவர்களுள் ஒருவர் ஜெகதீசன் அவர்கள் என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் தகவலில் தொடர்ந்து எழுதிவரும் இவர் இதன் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர்.*

*தமிழர் தகவலின் ஒரு பக்கத்துக்குரியவராக இதுவரை திகழ்ந்த ஒரேயொருவர் இவரேதான். எஸ்.ஜெகதீசனின் பத்தாம் பக்கம் என்ற தலைப்பில் தொடர்ச்சியாக நூறுக்கும் அதிகமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இதனால் இவருக்குக் கிடைத்த வாசகக் காதலர் பல்லாயிரம்.*

*தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் எப்போதும் ஆழமான அர்த்தமுள்ள கட்டுரைகளை எழுதி மலருக்கு மணம் கூட்டி அழகாக்கி அரங்கேற்றுவார். இக்கட்டுரைகளின் ஆக்கத்துக்கான தேடல் மாதக்கணக்காக இருக்கும். இவரது எழுத்துநடை வித்தியாசமானது. அதற்கான பார்வை தனித்துவமானது. கட்டுரையின் விடயதானம் மீள்வாசிப்புக்குரியது.*

*“பேனாவும் ஈருருளியும் அலுவலகத் தொலைபேசியும் ஊடகக் கருவிகளாகவிருந்த புராதன*

*காலத்தில் இவ்வாழ்க்கையில் நுழைந்தேன். கணினியும், விமானமும், இணையமும், செல்லிடத் தொலைபேசியும் கோலோச்சும் நவீன யுகம்வரை கனடாவில் எனது ஊடகப் பரிச்சயம் தொடர்கிறது" என்று நண்பர் என்றோ ஒருநாள் சொன்னது ஞாபகம் இருக்கிறது. அவரது இந்த வாக்குமூலமே அவரது ஊடக வாழ்வின் சிறப்பை எடுத்தியம்புவது.*

*சமூகத்துக்காகப் பேசுவதும், சமூகத்தைப் பேச வைப்பதுமே ஓர் ஊடகவியலாளனின் தலையாய பணி என்பதை நன்கறிந்து அவ்வழித்தடத்தில் நடைபயின்று வரும் நண்பர் ஜெகதீசனின் அறிவும் ஆற்றலும், ஆழ்ந்த ஞானமும் காலத்தின் பதிவுக்குரியவை.*

*கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழர் தகவல் மாத இதழ்களின் பத்தாம் பக்கத்திலும், ஆண்டு மலர்களிலும் வெளிவந்த பல கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து நூலாக்கியுள்ளார்.*

*பத்தாண்டுகளுக்கு முன்னர் (2010) ஊடகத்துறைக்கான தமிழர் தகவல் விருதையும், தங்கப்பதக்கத்தையும் பெற்றவரான இவரது இந்நூலுக்கு வாழ்த்துக் கூற வார்த்தைகள் போதாது. என் இதயம் மகிழ்வால் நிரம்பி வழிகிறது என்பேன்.*

*மொழியைத் தவமாகவும் எழுத்தை வரமாகவும் கொண்டியங்கும் நண்பர் எஸ். ஜெகதீசனின் மற்றைய கட்டுரைகளும் வெவ்வேறு நூல்களாக வெளிவர வேண்டுமென்ற விருப்பினைத் தெரிவிப்பதோடு, இவரது ஆர்ப்பாட்டமற்ற ஊடக - எழுத்துப் பணிக்கு அர்ப்பணிப்புடன் பங்காற்றி வரும் இவரது அன்புத் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆழ்ந்த நன்றி.*



முது பெரும் மருத்துவ அதிகாரி
டாக்டர். கதிர் துரைசிங்கம்
ஓய்வு நிலை பதிவு பெற்ற மருத்துவ அதிகாரி இலங்கை



## அரவணைக்கும் அறிமுகவுரை!

எஸ். ஜெகதீசன் எழுதிய கட்டுரை ஒன்றை, 1995இல் வெளிவந்த அதிபர் கனகசபாபதி அவர்களின் மணிவிழா மலரிற்தான் முதன்முதலாக வாசிக்கக் கிடைத்தது. அதில் மேன்மையுறும் மேடைகள் என்ற தலைப்பில் அவர் எழுதியிருந்தார். பொதுவாக வாசிப்பதில் அதிகம் நாட்டம் இல்லாத என்னையே அவரது சொல்லாடல், வார்த்தை ஜாலம் என்பன மிகவும் கவரக்கூடியதாக இருந்தன.

"... தொட்டு விட வேண்டியவற்றை அவர் விட்டு விடுவாரா? அல்லது விட்டு விட வேண்டியவற்றை அவர் தொட்டு விடுவாரா?..."

"...அவை அடக்கமும் அவருக்குத் தெரியும். அவையை அடக்கவும் அவருக்குத் தெரியும்..."

போன்ற சொற்றொடர்கள் இன்னும் நினைவில் உள்ளன.

அவரைப் பாராட்ட விரும்பி, அவரின் தொலைபேசி எண்ணை அறிய, அதிபரை நாடியபொழுது, அவரைப் பற்றி மேலும் அறிய முடிந்தது. எனது பன்னாலையின் அயல் இளவாலை தான் அவர் பிறந்த பதி. நான் படித்த மகாஜனாவிற் தான் அவரும் கற்றார். இலங்கையில் ஈழநாடு

பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றியவர். லண்டன் சென்று ஊடகத்துறையில் பட்டம் பெற்றவர். அங்கும் லண்டன் முரசு என்னும் மாசிகை நிருபராக, இணை ஆசிரியராக பணியாற்றியவர். இங்கு வந்தும் பொதிகை சஞ்சிகை ஆசிரியராக இருந்து வெளியிட்டவர். கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதில் முன்னின்று உழைத்தவர். இவை அனைத்துமே அதிபர் வாயிலாக அறிந்து கொண்டவை.

நான் எவ்வளவு சிறிய வட்டத்துள் இருந்தேன் என்பது கவலையாக இருந்தது. எழுத்துத்துறை, ஊடகத்துறை பற்றி எதையும் எவரையும் தெரியாமல் எப்படி அவருடன் கதைப்பது என்று தயங்கிக் கொண்டிருந்த எனக்கு ஜெகதீசனிடம் இருந்து அழைப்பு வந்தது. "எனக்கு உங்களைத் தெரியும். அதிபரின் மணிவிழா மலரில் உங்கள் கட்டுரை, அதிபருடன் உங்கள் நெருங்கிய தொடர்பை எடுத்து இயம்பியது. அருமையான நடை" என்றார். இது எனது மூன்றாவது கட்டுரை என்றாலும் ஊடகத்துறை சார்ந்த ஒருவரால் பாராட்டுப் பெற்ற முதல் கட்டுரை இதுவே.

1995 இறுதியில் ஆரம்பமான அறிமுகம் இன்று இறுக்கமான நட்பில்

நடைபோடுகிறது. இருவரும் பணிபுரிந்த "பாதுகாப்பான" தொழில் எங்கள் கருத்துப் பரிமாற்றங்களுக்கு உதவியது. தமிழர் தகவலின் நேர்த்தியான வடிவமைப்பில் பத்தாம் பக்கம் ஆக 2007 முதல் ஒழுங்காக வந்தன ஜெகதீசனின் ஆக்கங்கள். அவ்வப்போது நடக்கும் விடயங்களைத் தாங்கி, ஒரேயொரு பக்கத்தில் இலகு நடையில், அழகு தமிழில், அடுக்கு மொழியில் வரும் அந்த ஆக்கங்கள் எனது அவசர வாசிப்பில் முதல் இடம் பிடிக்கும். ஆண்டு மலரில் வரும் ஆக்கங்கள், தகவல் பொதிந்து, வாசிக்கத்தூண்டும் நடையில் அமைந்திருக்கும். அவற்றுள் அழகான துப்பாக்கிகள் (கனடா தமிழ் அச்சு ஊடகங்கள்), நினைவில் வாழ்வோர் (தமிழர் தகவல் விருதாளர்கள்), புலம்பெயர்ந்த புராதன சமயம் (கனடா - இந்து ஆலயங்கள்), கனடிய பல்சுவை (எம்மவர் உணவு), நாணயம் நாடு (கனடிய நாணயங்கள்) என்பன மூலம் பல முழுமையான தகவல்களை அறியமுடியும்.

ஜெகதீசன் பற்றி அவரிடம் கேட்டு அறிவது என்பது கடுமையான விடயம். தன்னைப் பற்றித் தம்பட்டம் அடிக்கும் சுபாவம் அற்றவர். இவரைத் தெரியாதவர்கள் ஊடகத்துறையிலோ, இலக்கிய வட்டத்திலோ இருக்கமாட்டார்கள் என்பதை

போகப்போக தெரிந்து கொண்டேன். இரசனை மிக்கவர், விமர்சகர். இயல், இசை, நாடகம் எதுவாயினும் நுணுக்கமாக ஆராய்ந்து விமர்சிப்பார். பாராட்டுவது அவரின் சுபாவம். அதுவும் உடனே பாராட்ட வேண்டும் என்பது அவரது கொள்கை. அவரது நேர்மை, நேரம் தவறாமை, பட்டதைக்கூறும் பண்பு என்பன என்னைக் கவர்ந்த விடயங்கள். முடியுமானதைச் சொல்வார். சொன்னதைச் செய்து முடிப்பார். உதவி செய்ய முன் நிற்பார். உதவி பெறப் பின் நிற்பார்.

அவரது தமிழர் தகவல் பத்தாம் பக்கத் தொடர்களும் ஏனைய சில ஆண்டுமலர்க் கட்டுரைகளும் நூல் உருப்பெறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்படியான முயற்சிக்கு அறிமுக உரை ஒன்றை எழுத முதற்தடவையாக கிடைத்த வாய்ப்பு, நண்பர் ஜெகதீசன் மூலம் எனக்குக் கிடைத்தமை, இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருவதோடு, எமது நட்புக்குக் கிடைத்த கௌரவமாகவும் கருதுகிறேன்.

இந்நூலில் உள்ள இருபத்தைந்து கட்டுரைகள் மட்டுமன்றி அவரது ஏனைய ஆக்கங்களும் மின் நூலாகவோ, அச்சுப்பிரதி யாகவோ வெளிவர வேண்டும் என்பது எனது விருப்பு.



மூத்த எழுத்தாளர்

எஸ்.ஜெகதீசன்

நூலாசிரியர் வடிவமைப்பாளர் வெளியீட்டாளர்



***உங்களுக்காகவோர் என்னுரை!***

*இனிக்கும் இதயத்துடன் வாசிக்க வந்திருக்கும் உங்களை வரவேற் கின்றேன்.*

*இருபத்தெட்டு வருடங்களுக்கு முன் 1992 ம் ஆண்டு முதன்முதலாக முதலாவது ஆண்டு பூர்த்தி மலராக வெளிவந்த தமிழர் தகவல் ஆண்டு மலரிலும் எழுதியுள்ளேன்.*

*இருபத்தொன்பதாவது ஆண்டு பூர்த்தி மலராக இவ் வருடம் 2020 ம் ஆண்டு இறுதியாக வெளிவந்த தமிழர் தகவல் ஆண்டு மலரிலும் எழுதியுள்ளேன்.*

*2007 ம் ஆண்டிலிருந்து வருடத்துக்கு 12 கட்டுரைகள் என 2016 ம் ஆண்டு வரை தொடர்ந்துள்ளமை உங்களு*

க்கு மலைப்பைத் தருகிறதோ இல்லையோ எனக்குத் தருகின்றது.

அவற்றுள் முதலிரு கட்டுரைகளைத் தவிர ஏனையவை தமிழர் தகவலின் பத்தாம் பக்கத்தில் நிலைத்தன.

2007 ம் ஆண்டுக்கும் 2020 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தமிழர் தகவலில் வெளிவந்த எனது கட்டுரைகளில் இருபத்தைந்தை தெரிந்து எடுத்ததில் தகவலில் தெரிந்தவை என்ற தலைப்பு வந்தது.

இந் நூலுக்கு பத்தாம் பக்கம் என்றே தலைப்பிடலாம் என ஆரம்பத்தில் உத்தேசித்தேன்.

அடுத்தடுத்த தொகுப்புகள் வரும் ஆயின் பத்தாம் பக்கம் மற்றவை நேரில் எனப் பெயர் வைக்கலாமா என்றோர் எண்ணமும் அடிமனதில் உண்டு.

*‘வரிக்கு வரி ஒரு தகவலை புகுத்த எத்தனிப்பது ஜெகதீசனுக்கு நன்கு பிடித்தமானது. கனடாவின் சுவை நயாகரா நாணயம் நாடு கௌரவ குடியுரிமை போன்ற பல அதற்கு நல்ல சான்று’ என படித்தவர்கள் சொல்வது மூளையின் முக்கியமான பகுதிக்குள் முகாமிட்டுள்ளது.*

*2020 ம் ஆண்டு ஜனவரி மாத பிற் பகுதியில் கொரோனா பேரிடருள் ஆழ்த்துவது உலகிற்கு தெரிந்தது. பெப்ரவரி மாத நடுப்பகுதியில் சீனாவின் சினமாக அது எனக்குத் தெரிந்தது. மார்ச் மாத முற்பகுதியில் தமிழர் தகவலில் அது தெரிந்தது..*

*ஆரம்பமானது என்ற தலைப்பில் சில மாற்றங்களுடன் அக் கட்டுரை இந்நூலில் இடம் பெற்றுள்ளதைப் போலவே வேறு சில கட்டுரைகளும் சின்னச்சின்ன மாறுதல்களுக்கு இங்கு உள்ளாகி உள்ளன.*

*ரொறன்ரோவில் வாசிக்கும் ஆர்வம் உள்ளவர்கள் ஏலவே அச்சுருவில் பார்த்திருப்பார்கள் என்பதால் இதனை மின் நூலாக மட்டும் வெளியிடும் அபிப்பிராயம் மேலோங்கியது.*

*ஆவணமாக்கல் அவசியம் என்ற உள் மன உந்துதல் அதற்கு ஊக்க சக்தி ஆயிற்று.*

*எழுத்துகள் சற்றே பெரிதாக அமையின் மின் நூல்களை வாசிப்பதில் சங்கடம் இராது என இதர மின் நூல்களை வாசித்த பெரியவர்கள் சொல்லக் கேட்டதில் கிஞ்சித்தேனும் எழுத்துருவை பெரிதாக்குவதில் கணிசமான அளவு தெண்டித்துள்ளேன்.*

*இது வரை கட்டுரையாளனாகவும் இருந்துள்ளேன்.நூலாசிரியராகவும் இருந்துள்ளேன்.*

*இந் நூல் மூலம் வடிவமைப்பாள ராகவும் வெளியீட்டாளராகவும் புதிய அவதாரம் எடுத்துள்ளேன்.*

*முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை இருக்கும் எனது உழைப்பு கர்வம் ஊட்டவில்லை.மாறாக நடை பயில்கையில் முதல் அடி எடுத்து வைக்கும் குழந்தையின் மகிழ்வைப் போல்... சொல்ல முடியாதது.*

*கட்டுரைகளின் தொகுப்பு அச்சு வடிவ நூலாவது சர்வ சாதாரணம்.*

*ஆனால் மின் நூல் ஆவது...இதுவே முதற் தடவை என்ற என் கற்பனை நிஜம் எனின் கற்பனையில் கூட மகிழ்வேன்.*

*பிரத்தியேக பாவனைக்கென சொற்ப அளவில் அச்சிலும் இந் நூல் உளது.*

*ஊடகவியலாளர்களும் மருத்துவர்களும் மற்றவர்களின் மனோ நிலையை நன்கு அறிந்தவர்கள்.*

*என்னையும் தெரிந்து எனது எழுத்து களையும் தெரிந்த பெரியவர்கள் மூவரிடமும் இருந்தது* வயது வித்தியாசம் பாராத நட்பு!

பத்திரிகை உலகின் ராஜன் திரு ஈ.கே.ராஜகோபால் எனக்காக தன் *இதயத்தையே தந்துள்ளார்.*

*சம காலத்தை எழுத வைத்த திரு எஸ்.திருச்செல்வம் எனக்காக ஒரு சரித்திரமே தந்துள்ளார்.*

*என் முகத்தை அறிய வைத்தது டாக்டர் கதிர்.துரைசிங்கத்தின் அறிமுகம்.*

*பிறவி பயன் பெற வைத்த மூவருக்கும் நன்றி! நன்றி! நன்றி!*

*தொழில் நுட்பத்துடன் எனக்கு மிக்க உதவி புரிந்த தீபனும் வதனனும் எனது பிள்ளைகள்.*

*நான் ஒரு மணித்தியாலத்தில் முடிக்கும் வேலையை ஒரு நிமிடத்தில்*

முடித்து வியக்க வைத்தது அவர் களிடம் இருந்த நுட்பமான தொழில்.

இங்கிலாந்தில் புதினம் ஜேர்மனியில் வெற்றி மணி இலங்கையில் தினக்குரல் ஆவுஸ்திரேலியாவில் அக்கினிக் குஞ்சு இந்தியாவில் மல்லிகை மகள் ஆகியவற்றில் சிறு மாற்றங்களுடன் சில கட்டுரைகள் வெளி வந்திருந்தன.

அவற்றின் ஆசிரியர்களுக்கும் நன்றி.

என்னை வாழ்த்தும் அன்பு உள்ளங் களுக்கும் நன்றி!


அழகாக தெரிவதெல்லாம் மனதுக்கு பிடிக்கும் என்று சொல்ல முடியாது.

ஆனால் மனதுக்குப் பிடித்த தெல்லாம் அழகாகத் தெரியும்!

கனடாவின் 153 ஆவது தேசிய தினம் 01.07.2020.

அன்று கனடா தரும் எனக்கான பரிசு இது!






1.கனடாவின் சுவை ............................................ 1

2.தேன் நிலவின் தலை நகரம் .................... 21

3.தீபாவளி ................................................... 29

4.சமணம் ....................................................... 37

5.யாத்திரைக்கு வருவார்கள் ............................. 45

6..நனிசைவம்.................................................. 67

7.அறிதுயில் ................................................... 75

8. யாவரும் கேளிர் ......................................... 83

9.யதார்த்தவாதி ............................................... 93

10.தேசமே தெய்வமாய் .................................. 107

11.சாயங்கால சந்தோசம் ............................... 123

12.எதிர்காலத்தை எதிர்பார்ப்பவர்கள் ............. 131

13.வாழும் சுவர்கள் ........................................ 149

14.கடவுள் துகள் ........................................... 157

15.கௌரவ குடியுரிமை .................................. 165

16.நுரை மகுடம் ........................................... 185

17.பீட்ஸா ..................................................... 195

18.பயணிகள் கவனத்திற்கு ............................ 203

19.விளிம்பு நடை .................................... 213

20.நாணயம் நாடு ........................................ 223


21.வாகனங்களுக்கு மோட்சமுண்டு ................. 253

22.பந்தாடிய குகை ......................................... 259

23.ஆரம்பமானது .......................................... 269

24.சுவிஸ் வங்கி ........................................... 279

25..கனடாவில் கல்யாண வைபோகம் ............. 287

## *கனடாவின் சுவை!*

*தமிழரின் பாரம்பரிய உணவுகளை வெள்ளையர்,கறுப்பர்,சீனர் விரும்பி உண்டு கண்ணீர் வடிப்பதும்,எமது நாவில் நுழைய மறுக்கும் அவர்களின் உணவுப் பெயர்களுக்கு எமது நாக்கு நீள்வதும் கனடாவில் சர்வசாதாரணம்.*

*பசியோடும் ருசியோடும் உலக உணவை சுவைக்க விரும்புபவர் களுக்கு உகந்த நாடு கனடா.இங்கு இல்லாத உணவு வேறு எங்கும் இருக்காது என்பவர்களுக்கு விருந்தாவதும் கனடா.*

*பலவிதமான வாசனைகள் ஒரே நேரத்தில் படையெடுத்து வந்து மூக்கைத் தாக்கும் வகையில் விருந்து வைப்பதும் கனடா.*

*உலகில் 195 நாடுகள் உள்ளன. அவற்றுள் கனடாவில் 'சாப்பாட்டுக்*

*கடை' வைத்திருக்கும் அனைத்து நாடுகளும் தமக்கான உணவு விழாவை வருடத்தில் ஒரு நாளாவது பரிமாறுகின்றன.*

*வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர் களுக்கு அவரவர் உணவு வகைகள் பிடிக்கும். அடுத்தவர்களுக்கு அந்த உணவில் சில சுவைக்கும். சில மிரட்டும். சில விரட்டும்.*

*ஷக்ஷுகா(Shakshuka), லஜானியா (Lajaniya), கூமுஸ்(Hummus), கம்புசா(Kombucha), ரெட்ரைஸ் என விநோதமாக நீளும் பட்டியல்.*

*சர்வதேச உணவு தினம் அக்டோபர் மாதம் 16 ம் திகதி ஆகும்.*

*கனடா பூராவும் மாதம் தோறும் உணவு விழா என்ற பெயரில் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு நாட்டவர்கள் தத்தமது நாடுகளின் அடுப்படிப்புகையை நகர வீதிகளில் புகைய விடுகின்றார்கள்.*

இந்தியர்கள் தனி அழகுடன் உண்பது
ஆகஸ்ட் மாத உணவு விழாவான
இந்திய சுவையில்! (Taste of India)

மண்பானை,விறகு போன்றனவும் ஒரு
சிலரால் பயன்படுத்தப்பட்டு
பாரம்பரியத்தை சூடாக்கும்.

கிரேக்கர்களின் உணவு விழாவான
Taste of Danforth, ஆகஸ்ட் மாதத்தில்
Souvlaki, Soanakopita என பல உணவு
வகைகளுடன் மொழி புரியாத சுவை
தெரியாத மக்களையும் மயக்கும்.

மத்திய கிழக்கு நாட்டவர்களின்
உணவு விழா மார்ச் மாதம்
நடைபெறும்.அதில் கலந்து
கொள்பவர்களின் பெரு விருப்பம்
அங்கு கிடைக்கும் டூண்டா கபாப்
(Tunde de Kebab).

எருமைக்கறி மற்றும் ஆட்டுக்கறியில்
எலும்புகளை அகற்றிவிட்டு
கொத்துக்கறி போல் செய்து
கொள்வார்கள்.

*பிறகு அதில் மசாலா வகைகளை தடவி வடை போல் செய்து எண்ணெயில் பொரித்து எடுத்தால் கபாப் தயார்.*

*ரொட்டி அல்லது பரோட்டாவுடன் சேர்த்து சாப்பிடுகின்றவர்கள் உலகையே மறப்பர்.*

*இதன் இன்னொரு வகை கிரில் கபாப் (Grilled Kebab).ஒரு செ.மீ.சதுர வடிவம் உள்ள நீளமான இரும்பு கம்பிகள் மீது மசாலா நிறைந்த கறியை தடவி நெருப்பில் வாட்டி எடுப்பது.மரக்கறி கபாப் கேட்டால் (கருவாடு கலந்து) கிடைக்கும்.*

*ஈழத்தமிழர்களுக்கு வீதிவிழா( Street Fest), கொத்துவிழா(Kottu Fest) என இரு நிகழ்ச்சிகள் வருடாவருடம் வீதியில் கடை விரிக்கின்றன. உறவோடு உண்ட திருப்தியையும், ஊரோடு உண்ட பிரமையையும் ஊட்டுகின்றன.*

*மசாலாதோசை, யாழ். தோசை, சென்னைத்தோசை, பிட்டு, இடியப்பம் , ரொட்டி, கொத்து ரொட்டி, இட்டலி, அப்பம் , பூரி, உப்புமா, சப்பாத்தி, கூழ் , பிரியாணி, சோறு போன்ற தமிழருக்கு பிடித்தமான உணவு வகைகளையோ மோதகம், லட்டு, வடை, சமோஸா, முறுக்கு, போண்டா, சூசியம் , வாய்ப்பன் போன்ற இன்னோரன்ன சிற்றுண்டிகளையோ வீதிவிழாவில் வீதியோரங்களில் இனசனத்துடன் கூடி உண்பது ஒரு தனிச்சுவை.*

*கனடாவில் நோண்டி நொங்கெடுப்பவர் களையும் அங்கு காணலாம்.*

*இளநீர் , கரும்பு, ஊர் மாம்பழம் போன்றனவும் கிடைக்கும். ஊர் கோழி ஊர் ஆடு ஊர் மான் பிரியர்கள் அங்கு திரளாக ஊர்ந்து திரிவதையும் பார்க்கலாம். வாழை இலைக்கு முன்பாக சம்மணமிட்டு ஒரு பிடி பிடிப்பவர்களுக்கும் குறையில்லை.*

*கொத்துவிழாவில் கொத்து ரொட்டி மட்டுமே ஏகப்பட்ட வகைகளில் சுடச்சுடக் கிடைக்கும்.*

*எல்லாவற்றிக்கும் துட்டு!*

*ஆனால் இலவச உணவு விழா ஒன்றும் கனடாவில் பிரசித்தம்.*

*தாயகத்தில் தமிழர் வாழும் பகுதிகளில் ஆலய திருவிழா காலங்களில் 10 -15 நாட்கள் அமைக்கப்படும் தண்ணீர்பந்தல்களில் சர்க்கரைத்தண்ணீர், ஊறுகாய்தண்ணீர், மோர் தண்ணீர், சுக்கு கோப்பி போன்றவற்றை இலவசமாக பருகாதவர்கள் குறைவு.*

*அதே போலவே கனடாவிலும் அல்பேட்டா மாகாணத்தின் தலைநகரமான கல்கரியில் வருடந்தோறும் ஜூலை மாதத்தில் 10 நாட்களுக்கு ஸ்டாம்பிட் (Stampede) கொண்டாட்டம் நடைபெறும்.அதனை அண்மித்த பகுதிகளில் அப்பொழுது*

*தெருவோர பந்தல்களில் இலவச காலை உணவு வழங்கப்படும்.*

*உலகிலே மிகப் பெரிய திறந்த வெளியரங்கில் 10 நாட்கள் நடை பெறும் ஸ்டாம்பிட் கொண்டாட்டங் களுக்காக வரும் உள்ளூர், வெளியூர், வெளி நாட்டுப் பயணிகள் சுடச்சுட பான் கேக்குகளை(Pan Cakes), ஹொட் டோக்களை(Hot Dogs), சான்விச்சுகளை (Sandwiches), ஹாம்பேர்கர்களை (Hamburgers) திண்டுதீர்ப்பதும் ஒரு கொண்டாட்டம் போலவே அமையும்.*

*கண்களுக்கு எட்டிய தூரமெங்கும் அடுப்புகள் வரிசையாக நெருப்பெடுக்கும்.*

*ஸாசேஜ்கள், முட்டைப் பொரியல்கள், பழரசங்கள், கோப்பி, தேநீர் என எல்லாமே இலவசம். 2017 ம் ஆண்டு மட்டும் நான்கு லட்சம் பான் கேக்குகள் விநியோகிக்கப்பட்டன.*

*உணவை உண்கின்றோம்.அதுவும் அதனை உணர்வுடன் உண்கின்றோம்.*

*அதனால்தான் அறுசுவைகளை அடையாளம் காண முடிகின்றது.*

*இனிப்பு தசையை வளர்க்கின்றது. கசப்பு நரம்புகளைப் பலப்படுத்து கின்றது. புளிப்பு கொழுப்பினை வழங்குகின்றது.கார்ப்பு எலும்புகளை வளர்க்கின்றது.உவர்ப்பு உமிழ் நீரைச் சுரக்க வைக்கின்றது. துவர்ப்பு இரத்தத்தைப் பெருக்குகின்றது.*

*வேகமாக நாம் கனடா வந்தபின் வேகமாக இலங்கை சென்ற பிரபல உணவு வேகப்பம் (பீட்ஸா).*

*சிறுவர் இளையோர் முதியோர் என சகல தரப்பினராலும் விரும்பப்படும் உணவு.*

*மாணவர்கள் பலருக்கு படிப்பது பிடிக்காவிடினும் பீட்ஸாவை 'ஒரு வெட்டு வெட்டுவது' நன்கு பிடிக்கும்.*

*வேகப்பத்தின் பூர்வீகம் இத்தாலி. அது மட்டுமல்ல மாச்சேவை (பாஸ்ரா) மாச்சுருள் (மக்ரோனி) மாவடை (லசான்யா) நூலப்பம் (ஸ்பெகற்றி) நூலடை(நூடுல்ஸ்) போன்ற இத்தாலிய உணவுகள் கூட தமிழுக்கு சுவை சேர்த்து தமிழருக்கு ருசியூட்டுகின்றன.*

*ஆனால் தமிழரின் எந்தச்சுவையகங் களிலாவது இப்படிக் கேட்டால் 'மொழி' விளங்காது உரிமையாளர்களே திணறக்கூடும்.*

*வேகமாக இங்கு நாம் வந்தபின் வேகமாக இங்கே வந்து பிரபலமானது: மதிவெடி!*

*பலர் வாயில் வைத்தனர்:சிலர் வாயால் வைதனர்.*

*இதன் காரமான தாக்கத்தில் மோட்சம் அடைபவர்களும் இருக்கின்றார்கள். மிதிவெடி தரும் ஏப்பம் கூட அயலில் உள்ளவர்களை சிதறடிக்கும் சக்தியுள்ளது.*

மெதுவாக இங்கு வந்தவர்களால் மெல்லமெல்லமாக இங்கு வந்து படுவேகமாக பிரபலமடைவது கோழிப்புக்கை. கோடை காலங்களில் கிராமங்களின் ஒன்று கூடல் நிகழ்வுகளுக்கு சுவையூட்டுவது அது!

ரொரன்ரோவை அண்மித்து 168 உணவகங்கள் தமிழர்களால், தமிழருக்காக நடத்தப்படுகின்றன.இந்த கணிப்பீடு சரிதானா என்பதும் சரியாததுதானா என்பதும் தெளிவில்லை.

கொஞ்சம் கூடியிருந்தால் புதிதாக கடைகள் திறந்திருக்கலாம்.சற்றே குறைந்திருந்தால் இருந்த கடைகளை இழந்திருக்கலாம்.

அமர்ந்து உண்ணும் வசதியுடன் கூடிய உணவகங்கள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவை. அவற்றிலும் சில அளவற்ற சாப்பாட்டை(Buffet)

வழங்கும். வீட்டுக்கு விநியோகிக்கும் சில கடைகளும் உண்டு.

நனிசைவ உணவு,தனிசைவ உணவு, மாமிச உணவு,மச்ச உணவு,ஹலால் உணவு என தனித்தனி கடைகளும் உண்டு.ஒரு கடை வாசலில் காணப்பட்ட வாசகம்:மீன் சாப்பிட வேண்டாம் என நினைப்பவர்களே.... மீனவன் சாப்பிட வேண்டாமா?

அனேகமானவை பகல் பதினொரு மணி முதல் இரவு பதினொரு மணி வரை திறந்திருக்கும். சில கடைகள் அதிகாலை ஆறு மணி முதல் நள்ளிரவு பன்னிரண்டு வரை திறந்திருக்கும்.

சீனர் , கறுப்பர் , வெள்ளையர் என மாற்று இனத்தவர் வாசலில் நின்று வேடிக்கை பார்ப்பதில்லை.உள்ளே புகுந்து உள்ளே தள்ளுவார்கள்.

*பரிசாரகர்களுக்கு 15–20%*
*பணிக்கொடையாக (Tips)*
*உபகாரமாக்குவது சம்பிரதாயம்.*

*ஒரே கடைத் தொகுதிக்குள் ஒன்றுக்கு*
*மேற்பட்ட உணவுக் கடைகளை*
*அமைப்பது தமிழரிடம் சாத்தியம்.*

*ஆனால் அத்தனை கடைகளிலும்*
*அமோக விற்பனையை நிகழ்த்தி*
*வியக்க வைப்பது தமிழரின்*
*சாமர்த்தியம்.*

*கனடாவில் சுகாதார பிரிவினரின்*
*நடவடிக்கை ஆரோக்கியமானது.*
*உணவக வாசலில் பச்சை நிற*
*சான்றிதழ் காணப்படின் அந்த*
*உணவகம் சுத்தம் பேணுவதாக*
*அர்த்தம்.மஞ்சள் எனின் சில*
*சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய*
*எச்சரிக்கப்பட்டுள்ளதை குறிக்கும்.*
*சிவப்பு எனின் மறு பரிசீலனை வரை*
*செயலிழந்திருப்பதை குறிக்கும்.*

*எந்த நாட்டின் எந்த உணவு அந்தந்த மக்களால் பெரிதும் விரும்பப்படு கின்றது என்பதை எவ்விதம் அறிலாம் என்ற கேள்வி மூளையை குடைவது அல்லது வயிற்றை பிசைவது சகஜம்.*

*பிரபலமான உணவின் பெயருடன் ஆகக் குறைந்தது ஒரு கடையாவது அந்தப்பிரதேசத்தில் அமைந்திருந்தால் அந்த உணவு நல்ல உணவு என ஊகிப்பவர்களும் உள்ளனர். உதாரணமாக:சுசி(Sushi) ஜப்பானியரின் பிடித்த உணவும் உணவகமும்.அதே போலவே ஷங்காய் நூடில்ஸ் சீனருக்கு. தாமோதர விலாஸ் என்று யாழ்ப்பாணத்தில் பெயர் வைத்தார்கள். அதனை தயிர் வடை கடை என்றே அழைத்தது எமது பழைய தலைமுறை.*

*தற்பொழுது இளைஞர்களாக இருக்கும் புதிய தலைமுறை சகல நாடுகளின் உணவுகளையும் ருசி பார்ப்பதற்கு*

*போன ஜென்மத்தில் ஏதாவது புண்ணியம் செய்திருக்க வேண்டும். கூகிளில் பார்த்து தமக்கான விருப்புகளை தெரிவு செய்து கொள்கின்றனர்.*

*ஊர்வன,நடப்பன,நீந்துவன,பறப்பன என ஒன்றையும் விட்டு வைப்பதில்லை.*

*ஒரு பிடி சோற்றுக்கு மேலாக சமைக்கப்படாத மீன் துண்டு ஒன்றை வைத்துச் செய்யப்படும் சுசி(Sushi): சமைக்கப்படாத கடல் உணவுகள் கொண்ட சசிமி(Sashimi):சூப் நூடுல்ஸ் வகையான றாமென்(Ramen):முழுச் சோளத்துடன் கலந்து தயாரிக்கப்பட்ட சோபா (Soba): போன்ற ஜப்பானிய உணவுகளாகட்டும் மிகவும் மெலிந்த பொரித்த நூடுல்ஸ் சவ் மின் (chow mein):மாட்டிறைச்சி அல்லது பண்டியிறைச்சியுடன் அதிக அளவில் வெங்காயமும் கலந்த நன்கு தடித்த*

*வறுத்த நூடுல்ஸ் - ஷங்காய் நூடுல்ஸ் (Sanghai Noodles): பொரித்த கலவை சோறு மற்றும் மரக்கறி கலந்த சோப் சோய் (Soap Soy) என வயிறு வளர்க்கும் சமாசாரங்கள் பலதை இயங்கலை(On Line) மூலம் இருக்கும் இடத்துக்கே வரவழைத்து மெல்வது அவர்களுக்கு பிடித்தமானது.*

*நத்தை,ஓனான்,உடும்பு,ராட்சத பல்லி, அட்டை என விதம் விதமான ஜந்துகள் கண்ணாடி கூண்டுக்குள் நாளைய ஏக்கத்துடன் காட்சியளிக்கும் வியட்நாமிய உணவகத்துள் நல்லதாக ஏதாவது கொண்டு வரச் சொன்னால் போ(Pho) என்பார்கள்.*

*நுழையும் புதிய தமிழ் தலைமுறை கொண்டு வா என்னும். நுழையும் பழைய தமிழ் தலைமுறை மூக்குச்சிவக்க வெளியேறும்.*

*போ என்பது வியட்நாமியரின் பெரு விருப்பமான ஆரம்ப உணவு.*

*பாம்பு,பூச்சி,புழு,பூரான் ,கரப்பொத்தான் போன்றன உணவாக விற்கக் கூடாது என்று கனடாவில் சட்டமிருப்பினும் அவற்றுடன் வெளவால் ,அணில் , எலி,நாய் போன்ற பல ஜீவராசிகள் இரத்தம் சிந்துவது தாய்லாந்து, கொரியா, பிரேஸில் ,மெக்ஸிகோ, கானா நாடுகளின் உணவகங்களில் என விச(ய)ம் கக்குபவர்களும் ரொரன்ரோவில் இல்லாமல் இல்லை!*

*பாம்பு,பூச்சிக்கு பயந்தவர்கள் Pinyin,Shea Wang போன்ற பெயர்களுக்கும் பயப்படுவது பாதுகாப்பானது!*

*உடன் மான் இறைச்சி கிடைக்கும் என இதுவரை அறிவிக்காத தென் கனடிய வட அமெரிக்க உணவகங் களை துருவ கரடிகளும் ,கடல்*

*சிங்கங்களும், திமிங்கலங்களும் காய்ந்து கருவாடாக எட்டிப்பார்ப் பதுமுண்டு.*

*நான் பிடித்தால் நீ எனக்கு: நீ பிடித்தால் நான் உனக்கு என்ற சித்தாந்தம் தென்னமரிக்காவின் அனகொண்டா உணவகங்களின் ஜீவ வாக்கு.*

*ஆபிரிக்கர்கள் இறைச்சிப்பிரியர்கள். அவர்களது உணவகங்களை விட்டு 'வெளியேற்றப்படுபவர்களின்' வயிறு, மலைப்பாம்பு உள்ளே சுருண்டு படுத்திருப்பது போல புடைத்து தென்படும்.*

*அவுஸ்திரேலியர் கங்காருப்பிரியர்கள். காலாக நினைத்து அதன் வாலைக்கடிப்பவர்கள் கனடாவிலும் உண்டு.*

*ஐரோப்பியருக்கு காரமும் பிடிப்பதில்லை.சாரமும் பிடிப்பதில்லை.*

*அவர்களது உணவில் காரசாரமும் இருப்பதில்லை. பேர்கரை(Burger) ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி உண்ணும் அவர்களுக்கு - வாய் பெரிசு!*

*தள்ளு வண்டிலில் உணவு விற்கும் தாய்லாந்துக்காரர்களையும் கனடா வீதி ஓரங்களில் ஆங்காங்கே காணலாம்.*

*இட்டலியின் தாயகம் இந்தோனேஷியா என்பது  வரலாற்றின் சுவை. ஆனால் கேட்லி (Kedli) என்ற அவர்களது உணவை பெயர் மாற்றி,இட்டலி எமதென்று நாம் ...அவிக்கிறோம்!*

*உணவை உட்கொள்ள பல சொற்கள் தமிழில் உள்ளன.(ஏனைய மொழிகளிலும் உள்ளன.) அருந்துதல்:மிகச் சிறிய அளவே உட்கொள்ளல்.உண்ணல்:பசி தீர உட்கொள்ளல்.உறிஞ்சல்:வாயை*

*குவித்து நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல்.குடித்தல்: நீரியல் உணவை உட்கொள்ளல்.தின்றல்: தின்பண்டங்களை உட்கொள்ளல். துய்த்தல்:சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளல்.நக்கல்: நாக்கினால் துளாவி உட்கொள்ளல். நுங்கல்: முழுவதையும் ஈர்த்துறிஞ்சி உட்கொள்ளல். பருகல்: நீரியற் பண்டத்தை சிறுக குடிப்பது.மாந்தல்: பெரு வேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளல்.மெல்லல்: கடிய பண்டத்தை பல்லால் கடித்து துகைத்து உட்கொள்ளல்.விழுங்கல்: பல்லுக்கும் நாக்குக்கும் இடையே தொண்டைவழி உட்கொள்ளல்.*

*சாப்பாட்டு ராமன் என்று ஏன் சொல்வார்கள்? தெரியுமா? ராமன் ஓர் ஏக பத்தினி விரதன்.மனைவியைத் தவிர வேறு எவரையும் ஏறிட்டும் பாராதவர்.அதே போல்தான் சாப்பாட்டைத் தவிர வேறு எதனையும்*

ஏறிட்டுப் பார்காமல் இருப்பவன்
சாப்பாட்டு ராமன் ஆகின்றான்.

மாமிச உணவிலிருந்து சீனர் பலர்
மரக்கறி உணவாளர்களாகின்றனர்
என்ற புதிய செய்தி புனிதமா?
புதுமையா?

தமிழர்கள் பலர் கனடாவில்
வெள்ளையரின் நிர்வாகத்தில் உள்ள
முன்னணி உணவகங்கள் பலவற்றில்
பிரதம சமையற் கார்களாக (Chief
Chef) மேலைத் தேச சமையலுக்கு
சுவை ஊட்டுகின்றனர்.சர்வதேச
போட்டிகளில் பலவற்றில் கலந்து
நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும்
விருதுகளால் ஊட்டமளிக்கின்றனர்.

சீரான உணவுகளை உட்கொள்வது
உடல் ஆரோக்கியத்துக்கு முக்கிய
காரணியாகும்.

# *தேன் நிலவின் தலை நகரம்.*

*கனடா என்றதும் பலரது நினைவில் எழுவது நயாகரா.*

*உத்தியோகத்துக்காக - உல்லாசத்துக் காக - உறவினருக்காக என எந்தக் காரணத்துடனும் கனடா வரும் எவரை யும் தவறவிடாது பரவசத்தில் வீழ்த்து வதும் அதே நயாகரா.*

*திருமணத்தம்பதிகளின் தேன்நிலவுக்கு உலக மக்களால் பெரிதும் விரும்பப் படுவது நயாகரா.*

*1950 ஆண்டு முதல் உலக தேன் நிலவு தலை நகரம் என்ற பெயரை தக்க வைத்துள்ள நயாகரா நீரில் எதிர்மறை அணுக்கூறுகள் (Negative Ions) செறிந்து நிறைந்திருப்பதால் இயல்பாகவே காம இச்சையை தூண்டும் ஆற்றல் அப்பகுதிக்கு அதிகம் என கூறுவார்கள்.*

*500 நீர்வீழ்ச்சிகள் உலகினை பிரமிப்புடன் அண்ணாந்து பார்க்க வைத்தாலும் நயாகரா என்ற புனலின் பூச்சரம்  மட்டும் வருடந்தோறும் 30 கோடி மக்களை குனிந்து பார்க்க வைக்கின்றது.*

*எரிக் ஏரியின் (Lake Erie) நீரெடுப்பு ஒன்ராரியோ ஏரியில் கலப்பதே நயாகரா ஆகும்.*

*அது மலையின் வீழாறு அல்ல.*

*கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தையும் அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தையும் எல்லைகளாக்கி சமதளத்தில் ஓடி கால் மட்டத்துக்கு கீழாக ஒவ்வொரு விநாடியும் 2800 0000 லீட்டர் நீரை வெள்ளை நிறத்தில் 165அடி ஆழாத்துக்கு பெரும் பள்ளத்தில் ஓயாமல் கொட்டுகின்றது இயற்கை.*

மூன்று நீர்வீழ்ச்சிகளை கொண்டது நயாகரா.அவற்றுள் சிறியது மணமகள் முக்காடு (Bridal Veil)·அடுத்தது அமெரிக்க வீழ்ச்சி(American falls). கனடாவில் உள்ள குதிரை லாடன் வீழ்ச்சியே (Horseshoe falls) பெரியதும் ரம்மியமானதும் ஆகும்.

ஒரு மண்ணும் தெரியாது என்பதற்கான புது அர்த்தத்தை உங்கள் ஒரு சோடி கண்களுக்கு மட்டுமல்ல பார்க்கும் பல கோடி கண்களுக்கும் கற்பிப்பது நயாகரா.

நயாகராவை முதன்முறை பார்வையிடும் பலர் இதென்ன நீரின் இடியோசை போலுள்ளதே என சொல்வார்கள்.

அதனையே பழங்குடி மக்களும் மோகாக் (Mohawk) என்ற தமது பாஷையில் அன்று சொன்னார்கள்.

*அவர்களது பாஷையில் நயாகராவின் அர்த்தம் நீரின் இடியோசையாகும்.*

*பிரகாசமான நாட்களில் நிதமும் மதியம் முதல் சூரிய அஸ்தமனம் வரை நீர்வீழ்ச்சியின் ஒளித்தெறிப்பால் அருவிக்கே வந்து வர்ணஜாலம் காட்டும் - வானத்தில் தெரியும் வானவில்!*

*அண்ணளவாக இரவு ஏழு மணியிலிருந்து நள்ளிரவு வரை வர்ண விளக்குகளின் ஒளிவீச்சால் நிறம் மாறும் நயாகரா.*

*மே மாதம் 15ம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 7ம் திகதி வரை வெள்ளி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காற்று ஒத்துழைத்தால் வாணவேடிக்கை குதுகலமூட்டும்.*

*காலநிலை எப்படியிருப்பினும் நயாகராவின் படகு பயணம் மட்டும் உறைவதில்லை.*

புகாரின் கன்னி (Maid of mist) என்ற படகில் அருவிக்கு மிக மிக அருகில் நுழைந்து,சாரலில் குளித்தாலும் குழம்பாது,விழி அதிர,கோப ஆறு கொப்பளித்து வீழும் பிரவாகத்தை, பிரளயத்தை பார்த்துப் பிரமிக்கலாம்.

நிர்மலமான ரகசியமாய்,அம்பலமான அதிசயமாய் அருவிக்கு அருகிலேயே அது விழும் வேகத்துடனேயே மேலிருந்து கீழிறங்கும் சாகஸம் அனுபவிக்லாம்.

நமக்கும் மேலே ஒரு சக்தி இருப்பதை நாஸ்திகரும் நம்பக் கூடிய ஒரு தருணத்தை உணரலாம்.

மலையைகுடைந்து சிறு பொந்து போல் காணப்படும் காற்றின் குகை (Cave of the winds) என்ற பகுதிக்குள் சென்றாலோ வெளிப்பார்வைக்கு எட்டாத சிறிய அருவியின் (Bridal Veil) பின்புறத்தைப் பரவசத்துடன் பார்க்க

*மற்ற இரு அருவிகளும் புயல் வேடமிட்டு எம்மை அள்ளிச் செல்வது போல் பதற வைக்கும்.*

*நடுக்கமுறாத மீன்கள் சாரமாரியாய் எம்மீது வீழ்ந்து எம்மை உதற வைக்கும்.*

*குகைக்குள் உள்ள சிறு ஏணி ஒன்றில் ஏறினால் முழு அருவியும் எம் மீது விழும் திகிலை ஏற்படுத்தும்.*

*உலகில் வேறெந்த அருவியின் அடிவாரத்தையும் இவ்வளவு நெருக்கமாக பார்க்க முடியாது என்பது இதன் சிறப்பு.*

*உள்ளே குகையின் சுவர்களில் சாதனை புரிந்தவர்களின் பெயர்களும் ஈரமாக உண்டு.செத்தவர்களின் பெயர்களும் காயாமல் உண்டு.*

*காலநிலை சீராயிருந்தால் வருடம் பூராவும் உலங்குவானுர்தியில்*

*நயகராவின் ஆதிஅந்தம் பார்க்கலாம். புதிய பரிணாமத்தில் அதன் வியாபகம் பார்த்து விக்கித்து நிற்கலாம்.*

*நயாகரா ஆற்றில் குதித்தாடி ஓடும் மீன்களை குறி வைத்துக் கவ்வும் நீர்பறவைகள் இதயத்தில் இறக்கை விரிக்க -ஆட்டுத்தீவு, சந்திர தீவு, மூன்று சகோதரிகள் தீவு, பெரும்தீவு, கோபுரத் தீவு, கடற்படைத்தீவு, பறவைத்தீவு, மான்தீவு உள்ளிட்ட பல தீவுகளையும் திடல்களையும் மேற்பார்வை இடலாம்.*

*எந்த வயதினருக்கும் ஏற்ற ஏதாவது எப்பொழுதும் இருக்கும் கேளிக்கை பிரதேசமாக நயாகரா வர்ணிக்கப் படுகின்றது.*

*கடல் தேசம்(Marine land),வண்ணாத்திப் பூச்சிகள் சரணாலயம்(Butterfly conservatory), பறவைகள் ராஜ்ஜியம் (Birds kingdom), நீரின காட்சியகம்*

*(Aquarium), தண்ணீர் பூங்கா(Water park), மெழுகு நூதனசாலை (Wax Museum), கின்னர்ஸ் சாதனை நூதன சாலை(Guiness world records museum), பளிங்குக் குகை (Crystall caves),கூரை கீழாக மாறியவீடு (Upside down hose), அசகாய வீடு (Daredevil gallery), வேடிக்கை வீடு(Fun house) போன்ற சில பகுதிகளுக்கு சென்று வந்தவர்களுக்கு –*

*அன்றைய தினமாவது வயதை மறந்த மகிழ்ச்சி கரைபுரளும்!*

*ரொரண்ரோவிலிருந்து 78 மைல் (126கி.மீ) துாரத்தில் உள்ள நயாகராவை மகிழுந்தில் சென்றடைய சுமார் ஒன்றரை மணி நேரம் தேவை.தினசரி பேருந்து தொடருந்து வானூர்ந்து சேவைகளும் உண்டு.*

## *தீபாவளி.*

*தீபாவளிக்கென விசேட நாணயமும் தபால் தலையும் வெளியிட்ட மகிமை கனடாவிற்கு உண்டு.*

*இந்து சமண சீக்கிய பௌத்த சிந்தி மக்கள் கனடாவில் தீபாவளி பண்டிகையை வருடா வருடம் கொண்டாடுகின்றனர்.*

*பல காரணங்களுடன் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை தீபாவளி.*

*அகத்தில் விளக்கு எரிந்தால் புறத்தில் வெளிச்சம் பரவும் என்பது நம்பிக்கை.*

*பொறாமை,அகங்காரம் , அகம்பாவம், தலைக்கனம் போன்ற மன இருட்டுகள் எரிந்து இதயத்தில் ஒளி ஏறும் என்பது தத்துவம்.*

*ஆவளி எனின் வரிசை என்பது அர்த்தம்.*

*ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு,தீபாவளி கொண்டாடும் தெய்வம் என்ற தனித்துவம் உண்டு.*

*தீபாவளியன்று அதிகாலை எண்ணெய் காப்பிட்டு, மஞ்சனம் கண்டு, பட்டாடை தரித்து,மலர் அலங்காரங்களுடன் அருள் புரிவது - திவ்வியம்.*

*தீபாவளி ஏன் கொண்டாடப்படுகின்றது என்ற கேள்விக்கு இரண்டு பிரதம கதைகள் கற்பனையில் கலக்கின்றன.*

*வராக அவதார மூலம் பூமாதேவிக்கு மகனான நரகாசுரன் - கடும் தவ வர பலனால் பிரமதேவரிடம் நிபந்தனை யுடன் சாகாவரம் பெற்றதாகவும், அவனின் அத்துமீறிய அட்டூழியத்தால் கிருஷ்ணரின் சக்ராயுதம் அவனை சங்கரித்ததாகவும் , தன் ஒழிவில்*

*ஒளிவீச எண்ணிய அவன் அந்நாளில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, விளக்கேற்றி வழிபட்டு, பட்டாடை அணிந்து, பட்சணங்கள் சுவைத்து பட்டாசு கொளுத்தி அனைவரும் கொண்டாட வேண்டினான் என்பது முதலாவது கதை.*

*ராவண வதம் முடிந்து அயோத்திக்கு ராமர் மீண்ட வேளை நகரவாசிகள் ஏராளமான விளக்குகள ஏற்றிவைத்து சீதாராமரை தரிசித்து மகிழ சீதாபிராட்டி அரண்மனை முழுதும் வரிசையாக தீபங்களை ஏற்றி ஒளி வீசச்செய்த நாள் என்பது இன்னொரு கதை.*

*இந்தக்கதைகள் பிடிக்காதவர்கள் பின்வரும் 14 நாட்களில் ஒன்றுதான் தீபாவளி என ஒளிமயமாக்கிக்கொள் கின்றார்கள்.*

*பார்வதிதேவி கேதாரகௌரி விரதத்தைப் பூர்த்தி செய்து அர்த்தநாரீஸ்வர் ஆகிய நாள், மகாலட்சுமியை மகாவிஷ்ணு திருமணம் செய்துகொண்ட நாள், துர்காதேவி மகிஷாசுரனை வதம் செய்த நாள், லட்சுமி பூஜைக்குரிய நாள்,குபேர பூஜைக்குரிய நாள், நரகாசுரனை வதம் செய்ய கிருஷ்ண பரமாத்மா புறப்பட்ட பொழுது பாணசுரன் தலைமையில் அசுரர்கள் லட்சுமியை கவர முற்பட தீபச்சுடரில் லட்சுமி ஐக்கியமான நாள், ராவணனை வதம் செய்த நாள், சமணர்களின் ஆதார குருவான வர்த்தமான மகாவீரர் முத்தி அடைந்த நாள், ஜஹாங்கீரின் சிறையிலிருந்து ராஜபுத்திரர் 52 பேருடன் ஆறாவது குருவான கோவிந்தசிங் தீரத்துடன் தப்பியதற் காக பொற்கோவிலை வர்ண விளக்கு களால் அலங்கரித்து வரவேற்ற நாள்,*

சத்ரபதி சிவாஜி எதிரிகளிட மிருந்து கோட்டையை கைப்பற்றிய நாள், உஜ்ஜயினி மன்னரான விக்கிர மாதித்தன் பகைவர்களான ஷாகாஸை வென்று முடி சூட்டிக் கொண்ட நாள்,சாம்ராட் அசோகன் தனது திக்விஜயத்தை முடித்த நாள்,மாபலி முடி சூடிய நாள், ஆதிசங்கரர் ஞானபீடங்களை நிறுவிய நாள்.

-என மகிழ்வுடன் ஒளிர்வது அவரவர் வாழ்வு!

விளக்கு விழாக்கள் தீபாவளிக்கு நிகராக இதர சமூகங்களிலுமுண்டு.

தாய்லாந்தவர்கள் Lam Kriyongh என்ற பெயருடன் கொண்டாடுகின்றனர். வாழையிலையில் மெழுகுவர்த்தியும் ஊதுவத்தியும் ஏற்றி நாணயங்களுடன் நீரில் மிதக்க விடும் சம்பிரதாயம் தவிர ஏனைய அனைத்தும் எமது தீபாவளிக்கு ஒத்தவை.

ஜப்பானியர்கள் *Toro nagashi* என்ற பெயரில் விளக்குகள் ஏற்றி கொண்டாடுவர். முன்னோர்கள் அத்தினத்தில் ஆசி வழங்குவார்கள் என்பதும் அவர்களை வரவேற்கவே விளக்குகள் என்பதும் அவர்களது ஐதீகம்.

சீனர்கள் வீடுகளுக்குள்ளும் கடைகளுக்குள்ளும் வளம் பெருகட்டும், லாபம் அதிகரிக்கட்டும், நன்றாக வாழ் போன்ற வாசகங்களால் சுவர்களை அலங்கரித்து விளக்குகளை வரிசையாக ஏற்றிவைத்து வழிபடும் *Yuanxiao Festival* என பெயர்பெற்ற விழாவை தீபாவளி போல் கருதலாம்.

உலகின் ஒரே ஒரு இந்து சம்ராஜ்ஜியமான நேபாளத்தில் மிகவும் சிறப்பான பண்டிகை தீபாவளியாகும்.

*Thikar* என்ற பெயரில் ஐந்து நாட்கள் விளக்குகளுடன் வெகு விமரிசையாக

*கொண்டாடுவர். முதலாவது நாள் காகத்துக்கும் இரண்டாம் நாள் நாய்க்கும் மூன்றாம் நாள் பசுவுக்கும் நான்காம் நாள் எருமைக்கும் விசேட வழிபாடு செய்து வியக்கவைப்பார்கள்.*

*தீபாவளித் திருநாளுக்கு சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் சிறப்பும் உள்ளது.*

*சிவனுக்கு உகந்த மாதசிவராத்திரி கிருஷ்ண பட்ச சதுர்த்தியிலேயே மாதந்தோறும் வரும்.அதே கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் ஐப்பசி மாதமொன்றில் கிருஷ்ண பகவான் நரகாசுரனை வதம் செய்தார்.*

*தீபாவளிக்கு முதன் முதல் தபால் தலை வெளியிட்ட நாடு சிங்கப்பூர், என்பது மனசெங்கும் மிச்சமில்லாது ஒட்டிக்கொள்கின்றது!*

*இந்தியாதான் தீபாவளியின் தாய்நாடு எனினும்அதன் கோலாகலம் இலங்கை,*

*இந்தியா, நேபாளம், மியன்மார்,
தாய்லாந்து, மலேஷியா, சிங்கப்பூர்,
இந்தோனேஷியா, சீனா, ஜப்பான்,
அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிஜி,
கயானா, சூரிநாம் , அமெரிக்கா, கனடா,
இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி,
சுவிஸ்லாந்து, டென்மார்க், நோர்வே,
சுவீடன், இத்தாலி, கென்யா, தன்ஸானியா,
தென் ஆபிரிக்கா, மொரிஷியஸ் என
உலகம் முழுவதும் விசாலமாய்
விரிந்து எத்திக்கும் தித்திக்கின்றது.*

*தீபாவளி தினம் இலங்கை, இந்தியா,
நேபாளம், மியன்மார், மலேஷியா, பிஜி,
சிங்கப்பூர் ஆகியநாடுகளில் அரச
விடுமுறையாகும்.*

*கனடாவில் எவருமே "கங்கா ஸ்நானம்
ஆச்சா" என இதுவரை கேட்டதில்லை.
நயாகரா ஸ்நானம் ஆச்சா என்று
கேட்கும் வாய்ப்பும் என்றுமே இருக்கப்
போவதுமில்லை.*

## *சமணம்.*

*எல்லாம் உள்ள கனடாவில் சமண சமயமும் உண்டு.சமணருக்கான மிகப் பெரிய கோவிலும் உண்டு.*

*மிகப்புராதன வழிபாட்டுக்குரிய சமயம் சமணம் (Janism). சிரமணர் என்ற சமஸ்கிருத சொல் தமிழில் திரிவுபட்டு சமணமாகிற்று.*

*ஆடை அணியாதவர்கள் அமணர்கள். அதுவே காலக்கிரமத்தில் சமணர் என்றாகியது என்போரும் உளர்.*

*சமணர் என்றால் ஐம்புலன்களையும் இருவினைகளையும் வென்றவர் என்பது அர்த்தமாகும்.*

*அன்பும் அருளும் மிகுந்தவர் இன்பத்தையும் துன்பத்தையும் சரிசமனாக கருதுபவர் பிறப்பையும் இறப்பையும் பற்றி அக்கறை அற்றவர் போன்ற அபிப்பிராயங்களும் உண்டு.*

*சமண சமயத்தை பெயரளவில் மட்டும் தெரிந்த எமக்கு அதற்கு ஜைனமதம்,*

*நிகண்டமதம், ஆருகதமதம், பிண்டியர்மதம் போன்ற வேறு பெயர்கள் இருப்பதும் சமணரை சாவகர், ஜைனர், ஜீனர், நிக்கந்தர், நிகண்டர், ஆருகதர், ஆசீவகர், பிண்டியர் என குறிப்பதும் நினைவிலிருக்க நியாயமில்லைத்தான்.*

*அகம் என சமணரின் புனித நூல் அழைக்கப்படு கின்றது.*

*சமண சமயத்தில் அருவ வழிபாடும் உண்டு.உருவ வழிபாடும் உண்டு.*

*அருகனை தியானிப்பவர்கள் அருவ வழிபாட்டில் முக்தியடைகின்றனர். சிநனை (ஜீனனை) நிர்வாண உருவில் கண்டு லயிப்பவர்கள் அதில் பேரின்பம் பெறுகின்றனர்.*

*கடவுள் இல்லாத சமயம். மௌனம்தான் பிரார்த்தனை.*

*சமண ஆலயங்களில் தீர்த்தங்கரை (புனிதரை) தெய்வங்களாகத் தொழுகின்றனர்.ஆன்மாவை பிறவிப் பெருங் கடலிலிருந்து ஈடேற்ற*

*வல்லவர்கள் தீர்த்தங்கரர்கள் என ஆராதிக்கின்றனர்!*

*ஆதிபகவன் என்றும் ஆதிநாதர் என்றும் அழைக்கப்படும் முதலாவது தீர்த்தங்கராகிய விருஷிபதேவரால் வேத காலத்துக்கும் முற்பட்டதாக சமண சமயம் தோற்றுவிக்கப்பட்டது.*

*வர்த்தமான மகாவீரர் இருபத்தி நான்காவது தீர்த்தங்கராவர்.*

*மகாவீரர் சமண கொள்கைகளை சீரமைத்தார்.*

*மேலும் 24 தீர்த்தங்கரர் தோன்றுவர் என்பது சமண நம்பிக்கை.*

*அருகர்,சித்தர், ஆசிரியர், ஆச்சாரியார், துறவிகள் என்பவர்கள் வழிபாட்டுக்கு உரியவர்கள்.*

*அவர்களை பஞ்சப்பரமோட்டிகள் என்கின்றது சமணம்.*

*நல்லறிவுடனிரு!நன்னம்பிக்கையுடனிரு! நன்னடத்தையுடனிரு!*

*என்ற மகாவீரரின் போதனை சமணரை வழிநடத்துகின்றது.*

*சமணர்களில் திகம்பரர், ஸ்வேதம்பரர் என இரு பிரதான பிரிவுகள் உள்ளன.*

*சம்பிரதாயதுறவிகளான ஸ்வேதம்பரரில் ஆண்கள் வெள்ளை நிறத்திலும் பெண்கள் சிவப்பு நிறத்திலும் ஆடை அணிவர். திகம்பர சாதுகள் உடுப்பு உடுப்பதில்லை.*

*அஹிம்சை, தர்மம், கர்மம், மோட்சம், பிரம் மச்சரியம், சஞ்சாரம், சத்யம் ஆகிய கோட்பாடுகளை தீவிரமாக கடைப்பிடிப்பது சமண சமயம்.*

*அவற்றுடன் அவாவறுத்தல், கள்ளாமை, வாய்மை, சதா தெய்வ சிந்தனை, உயிர்வதையின்மை போன்ற அனுவிரதங்களை மேற்கொள்பவர்கள் இல்லறத்தார்.*

*இவை அனைத்துடன் ஒரு வேளை மாத்திரம் உண்பது, அதனையும் நின்றவாறே உண்பது, பல் துலக்காமை, நீராடாமை, ஆடை அணியாமை, நிலத்தில் உறங்கல், லோசம்(மயிர் களைதல்), ஐம்பொறி*

*அடக்கம், ஆவஸ்யகம் (தியானம்) போன்ற மகாவிரதங்களை அனுஷ்டிப்பவர்கள் சமணத்துறவிகள்.*

*செப்டம்பர் மாதத்தில் எட்டு நாட்கள் உபவாசமிருந்து கொண்டாடப்படும் பெரிய உற்சவம் (Paryushan) சமணரின் விசேட பண்டிகையாகும்.*

*நவம்பரில் மகாவீரர் முத்தி அடைந்த தினமாக தீபாவளியையும் அதற்கு மறு நாள் புதுவருடப்பிறப்பையும் சிறப்பாக கொண்டாடுவர்.*

*சூரிய பொங்கல், மகாவீரர் ஜெயந்தி, கார்த்திகை தீபம்,பூர்ணிமா, சரஸ்வதி பூஜை,ராக்கி,அட்ஸய திருதியை, ஜினராத்திரி, ஸ்றுத பஞ்சமி ஆகியவையும் வருடந்தோறும் சமணர் கொண்டாடும் இதர பண்டிகைகள்.*

*சுமார் 10 கோடி மக்களை கொண்டது சமண சமயம்.அவர்களுள் 43 லட்சம் சமணர் இந்தியா முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.*

*தமிழ் நாட்டில் சமணரை சென்னை காஞ்சிபுரம் மதுரை திருவண்ணாமலை*

*தஞ்சாவூர் பகுதிகளில் இன்றும் காணமுடியும்.*

*கடல் கடக்கக் கூடாது என்ற சமணக் கோட்பாடு நெகிழ்வுற்றதில் இந்தியா விற்கு அடுத்ததாக பிரமாண்டமான சமணாலயம் பெல்ஜியத்தில் உருவானது.*

*இலங்கை,மியன்மர்,தாய் லாந்து, ஹொங்கொங்,ஜப்பான், ஆவுஸ்திரேலியா, இந்தோனேஷியா, சிங்கப்பூர் ,மலேஷியா, பாகிஸ்தான், கென்யா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் சமணாலயங்கள் உள்ளன.*

*150 சமணக்குடும்பங்கள் சேர்ந்து சமணசபையை 1974ல் ரொரன்ரோவில் ஆரம்பித்தனர்.1988ல் கிறீஸ்தவ தேவாலயம் ஒன்று கைமாறி முதலாவது சமணாலயமானது.*

*வட அமெரிக்காவில் மிகப்பெரிதாக ஸ்காபரோவில் நிர்மாணிக்கப்பட்ட ஆனந்த பகவான் சமணாலயம் 2016ல் கதவுதிறந்தது.*

*ஒன்ராரியோவுடன் அல்பேட்டா, கியுபெக்,பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய மாகாணங்களிலும் சமணாலயங்களுள.*

*இந்தக் கொல்லா விரதிகள், ஜீவராசிகளுக்கு தீங்கு செய்யக் கூடாது என்பதில் எச்சரிக்கையுணர் வுடன் இருப்பர்.*

*தமது கால் பட்டு மண்ணுயிர்கள் நசுங்கக் கூடாது என்பதற்காக தாம் செல்லும் பாதையை துப்பரவு செய்தபடியே நடப்பர்.*

*தமது சுவாசம் நுண்ணுயிர் களை வதைக்கக் கூடாது என்பதற்காக வாயையும் மூக்கையும் துணியால் கட்டியிருப்பர்.*

*இரவு விளக்கில் பூச்சிகள் மரிக்கலாம் என்பதால் இரவில் சாப்பிடுவதில்லை.*

*தலையில் படிந்துள்ள பூஞ்ஞைகளுக்கு ஊறு என்பதால் மழிப்பதில்லை. ஒவ்வொன்றாக பிடுங்குவர்.*

*வேள்வியும் கிடையாது.வேட்டையும் கிடையாது.*

*தொல்காப்பியர்,திருவள்ளுவர்,இளங் கோ அடிகள்,திருத்தக்க தேவர் உட்பட தொன்று தொட்டே கல்வியறிவில் சிறந்தவர்கள் சமணர்கள் என நிறுவுவோர் உளர்.*

*சீவகசிந்தாமணி, வளையாபதி, நாலடியார், நன்னூல், பழமொழி நானூறு,ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, சூளாமணி,யசோதர காப்பியம், நான் மணிக்கடிகை, யாப்பருங்கலக்காரிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம்,சூடாமணி,நிகண்டு போன்ற பற்பல நூல்களை யாத்து தமிழன்னை க்கு அணி சேர்த்துள்ளனர் பண்டைக் கால சமணப்புலவர்கள்.*

*அண்மையில் வெளிவந்து வசூலில் சாதனைபுரிந்த பாகுபலி நிஜவாழ்வில் ஒரு சமணத்துறவி என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மைசூரில் வானளாவும் சிலை அவருக்கு உள்ளது.*

## *யாத்திரைக்கு வருவார்கள்*

*பிள்ளையார் முருகன் துர்க்கை என தெய்வத் திருவுருவங்களை ஓரடியிலும் ஈரடியிலும் இலங்கையில் தரிசித்து வந்த எமக்கு ஆறடி ஏழடி என உருவில் உயர்ந்து பிரமாண்டமாக அனேக ஆலயங்களில் கனடாவில் காட்சி தருகின்றன.*

*பூலோகவாசிகளுக்கு அள்ளி அள்ளி கொடுக்கும் பகவானுக்கே அள்ளி அள்ளி கொடுப்பவர்கள் நிறையவே ரொண்ரோவில் இருக்கின்றார்கள். அதனால்தான் எங்கெங்கு நோக்கிலும் ஆலயங்கள்.கடவுள் எங்கும் பரந்துள்ளான் என்பதற்கு சான்றுகள்.*

*பெருவாரியான ஈழத்தமிழர்கள் வரப்போகின்றார்கள் - வழிபடப் போகின்றார்கள் என்ற ஞானதிருஷ்டி*

*யுடன் 1984 ம் ஆண்டு ஆற்றங்கரை தேடி செல்வமலையில்(Richmondhill Sri Ganesha Temple) விநாயகப்பெருமான் நீரோடையின் அருகே உறைந்த கோவில்தான் ரொரண்ரோவின் முதற் கோவில்.*

*பஞ்சாப்,குஜராத்தி மக்கள் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பாகவே இந்து சமய ஆலயங்களை ரொறன்ரோவில் ஆரம்பித்திருந்தாலும் அவை திராவிட வழிபாட்டு ஆகமவிதி முறைகளுடன் பெரும்பாலும் ஒத்திருக்கவில்லை.*

*ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று கூறிப் போந்த ஔவையார் மட்டும் இப்ப வந்தால் பேருவகை கொள்வார்.*

*மதம் மாற வழி தெரிந்தவர்கள் - மனிதனாக மாற வழி தெரியாதவர்கள் திரும்பும் பக்கம் எல்லாம் நீக்கமற நிறைவதால் ஆலயங்களும் நீக்கமற நிறைகின்றன.*

*பக்தியுடன் வந்தவர்கள் ஆலயம் அமைத்தார்கள்.சக்தியுடன் வந்தவர்கள் ஆலயம் அமைத்தார்கள். புத்தியுடன் வந்தவர்கள் ஆலயம் அமைத்தார்கள்.கத்தியுடன் வந்தவர்கள் ஆலயம் அமைத்தார்கள்.*

*அறங்காவலர்களால் பரிபாலிக்கப்படும் ஆலயங்களும் இங்குள.அந்தணரால் நிர்வகிக்கப்படும் ஆதீனங்களும் இங்குள.*

*அங்கு குபேரனுக்கு கோவில் கட்டுபவர்கள் அதிகரிக்கின்றார்கள் என்பது வெறுங்கதை.*

*இங்கு கோவில் கட்டுபவர்கள் குபேரனாக அதிகரிக்கின்றார்கள் என்பது புனைகதை.*

*தாயகத்திலிருந்தே ஆலய வழிபாடு ஆரம்பித்தவர்களை பழைய தலை முறை எனவும் கனடாவில் ஆலய வழிபாடு ஆரம்பித்தவர்களை புதியதலைமுறை எனவும் கருதி*

*இந்து சமயம் பற்றி எழுத இது சமயம் ஆகும்.*

*பழைய தலைமுறை இறைவனுக்கும் கைகூப்பும்.மனிதருக்கும் கைகூப்பும். வரவேற்பதற்கும் கைகூப்பும்.விடை கொடுப்பதற்கும் கைகூப்பும்.*

*ஆனால் புதிய தலைமுறையோ இப்ப இப்பதான் கடவுளுக்கே கரங்களை ஒன்று சேர்க்க ஆரம்பித்துள்ளது.*

*இந்து சமயத்தின் வேதமும்,ஆகமமும் பழைய தலைமுறைக்கு ஆழமாகத் தெரியாது.தேவாரமும்,திருவாசகமும் புதிய தலை முறைக்கு மேலோட்டமாகவும் தெரியாது.*

*தமிழை நன்கு உச்சரிப்பது பழைய தலை முறை. தமிழை ஆங்கிலத்தில் எழுதி படிப்பது புதிய தலைமுறை.*

*ஒழுங்காக ஆலயம் செல்வது பழைய தலை முறை. புதிய தலைமுறை*

*கிரமமாக ஆலயம் செல்வது கிடையாது.*

*தேவாரம்,திருவாசகம்,திரு விசைப்பா,திருப்பல்லாண்டு,பெரிய புராணம் என்பன பஞ்ச புராணங்கள் என்பது பழைய தலைமுறையில் பலருக்கும்,புதிய தலைமுறையில் சிலருக்கும் தெரிந்துள்ளது.*

*பழைய தலைமுறையிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு தகுந்த விளக்கமளிக்க அவர்களால் முடிவதில்லை.அது கூட புதிய தலைமுறை கிரமமாக ஆலயம் செல்லாதிருப்பதற்கு காரணமாகின்றது.*

*அமெரிக்காவில் உள்ள ரோசெஸ்டர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ருத்ர ஹோமம்,சண்டி ஹோமம் உட்பட அனைத்து பூஜைகளுக்கும் புனஸ்காரங்களுக்கும் தெளிவான, இலகுவான,விளக்கமான விளக்கங்களை உடனுக்குடன ஆங்கிலத்திலும் தமிழிலும்*

*சொல்வதனால் கவரப்படும் புதிய தலைமுறையினர் பெருவிருப்புடன் அங்கு திரள்வதும் திருவிழாக்களை பெருவிழாக்களாக்குவதும் நல்ல உதாரணமாகும்.*

*லிங்கத்துக்கும் நந்திக்கும் இடையில் செல்லக் கூடாது என்பதை பழைய தலைமுறை அறிந்தோ அறியாமலோ மீறுகின்றது. கொடிமரம்,நந்தி,பலி பீடம் இவைகளின் நிழலை மிதிக்கக் கூடாது. கோவிலில் நந்தியையோ வேறு எந்த மூர்த்தங்களையோ தொடக்கூடாது.விளக்கு எரியாத பொழுது வணங்கக் கூடாது. அபிஷேகம் நடக்கும் பொழுது சுற்றி வரக் கூடாது. கோவிலுக்கு சென்று திரும்பிய உடனே கால்களை கழுவக் கூடாது போன்றவிதி முறைகள் கூட அவர்களது நினைவிலிருக்குமோ தெரியாது.*

*ஆலயங்களில் முதலில் பிள்ளையாரையும், நிறைவில்*

*சண்டேஸ்வரரையும் வழிபட வேண்டும் என்பது பொது விதி.*

*சிவன் கோவில் சென்றால் நந்தியை சேவித்த பின்னர் சிவனையும் அடுத்து உமாதேவியாரையும் வணங்க வேண்டும்.*

*பெருமாள் கோவில் சென்றால் பெரிய திருவடியை சேவித்து பின்னர் தாயாரையும் அடுத்தே பெருமாளையும் வணங்க வேண்டும்.*

*எந்தக் கோவிலிலும் மூலமூர்த்தியையும் பிரகார மூர்த்தங்களையும் வழிபட்ட பின்புதான் நவகிரகங்களை துதிக்க வேண்டும்.*

*சிவன் கோவிலில் அமர்ந்து வரவேண்டும்.பெருமாள் கோவில்களில் அமராது திரும்ப வேண்டும் போன்ற விதிகளை பழைய தலைமுறையில் கடைப்பிடிப்பவர்கள் எத்தனை பேர்?*

*ஆனால் கோவிலில் செய்யக் கூடாதவை என சொல்லிக் கொடுத்தவற்றை மிக நேர்த்தியாகக் கடைப்பிடிக்கின்றது புதிய தலைமுறை. பெரும் சத்தமாக பேசுவதில்லை.சிரிப்பதில்லை.சினேகித ரை அழைப்பதில்லை. உருவச்சிலை களுக்கு முதுகு காட்டி அமர்வ தில்லை. கடவுள் வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் அடுத்தவரை தொந்தரவு செய்வதில்லை.அர்ச்சனை வேளையில் பின்னாலுள்ள பக்தர்களும் வணங்க வேண்டும் என்பதை உணர்ந்து ஆடாமல் அசையாமல் நிற்பதிலும் அவர்களுக்கு மறைக்காதவாறு நிற்பதிலும் புதிய தலைமுறைக்கு அதிக அக்கறை உண்டு.*

*எந்தக்கோவிலானாலும் கருவறை சிலைகள் கருங்கல்லிலும், எழுந்தருளும் விக்கிரகங்கள் தாமிரத்திலும் அமைவது மரபு.*

கோவிலில் சிற்பங்கள் கண்ணை கவர்கின்றன.பழைய தலைமுறை அதன் சாமுத்ரிகா லட்சணத்தில் லயிப்பதுடன் நின்று விடுகின்றது.

ஆனால் அவற்றைப் பற்றி அற்பமாக நினைக்காத புதிய தலைமுறை அணுவணுவாக அவற்றை ஆராய்ந்தறிவதில் ஆர்வம் கொள்கின்றது. பாத விரல்களில் பலவிமான மெட்டிகள்,கால்களில் கொலுசு,தண்டை,சிலம்பு இடையில் மேகலாபரணம்,ஒட்டியாணம் கரங்களில் கங்கணம்,காப்பு,கல்வளையல்கள், கைவிரல்களில் பலவகைமோதிரங்கள், கரங்களில் வைரவங்கிகள்,தோளில் சேயூரம்,கழுத்தில் சங்கிலிகள், ஆரங்கள்,அட்டிகைகள்,காதுகளில் தொங்கட்டான் அல்லது குண்டலம் மூக்கில் மூக்குத்தி,நத்து புல்லாக்கு, நெற்றியில் சுட்டி என இவ்வளவு அரிய ஆபரணங்களை அக்காலத்து சிற்பிகள் எப்படித்தான் உருவாக்கினார்களோ என வியப்பதற்கும் மேலாக அவற்றை

*அறிந்து வைத்திருக்கும் இளைய தலைமுறையின் அறிவு வியக்க வைக்கின்றது.*

*கனடாவில் மாகாணரீதியாக இந்து ஆலயங்களின் எண்ணிக்கை எத்தனை என்றால் 'கூகிளை' தட்டிப் பார்த்து தகுந்த பதிலளிப்பது புதிய தலைமுறை. அல்பேட்டாவில் பத்து, பிரிட்டிஷ் கொலம்பியாவில் பதினான்கு, மனிட்டோபாவில் நான்கு, நியூபுரன்ட்ஸ்விக்கில் ஒன்று, நியூபவுண்ட்லாந்தில் ஒன்று, நோவாஸ்கோஷியாவில்ஒன்று, ஒன்டாரியோவில் எண்பத்தியிரண்டு, கியூபெக்கில் ஏழு, சஸ்காட்டுவானில் இரண்டு என மொத்தம் நூற்றியிருப்தியிரண்டு இந்து கோவில்கள் கனடாவில் அருள்பாலிக்கின்றன என புள்ளி விபரம் காடடுவது அவர்களுக்கு இலகு.*

*பரந்து அகண்ட ரொரண்ரோ பெரு நிலப்பரப்பில் உள்ள கோவில்கள் எவை என்றால் எவ்வித தங்குதடையுமின்றி இங்குள்ள ஆலயங்கள் அனைத்தையும் சொல்லும் வல்லமை பழையதலைமுறையிடம் உண்டு.*

*இவ்விதம் பழையதலைமுறை சொல்லச்சொல்ல இவ்வளவு ஆலயங்களா என பிரமிப்போடு பார்க்கும் புதிய தலைமுறையும் இங்கு உண்டு.*

*செல்வமலை விநாயகர் கோவில்; கனடா கந்தசாமி கோவில், துர்க்கேஸ்வரம் துர்க்கை அம்மன், கோவில் கனடா ஸ்ரீ ஐயப்பன் கோவில்; ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில், முத்து விநாயகர் கோவில், ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் ஆலயம், சிவா – விஷ்ணு ஆலயம்; மகாமாரி அம்மன் கோவில், சக்தி துர்க்கா அம்மன்*

*கோவில், ஆதி பராசக்தி அம்மன் கோவில்; பத்திரகாளி அம்மன் கோவில், புவனேஸ்வரி அம்மன் கோவில்; பெரிய சிவன் ஆலயம், நயினை நாகபூசனி அம்மன் கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில், நல்லூர் சிவன் - முருகன் ஆலயம், திருப்பதி வேங்கடேஸ்வரர் தேவஸ்தானம்; திருச்செந்தூர் முருகன் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில்; சிவா – விஷ்ணு – ஐயப்பன் ஆலயம், கிப்பிளிங் சிவன் ஆலயம், பிரம்டன் கற்பக விநாயகர் கோவில்; மஸிஸாகா ஜெயதுர்கா அம்மன் கோவில்; மிஸிஸாகா முத்துமாரி அம்மன் கோவில், மிஸிஸாகா கணேஷ துர்க்கா கோவில் என்பன 2006 ம் ஆண்டுக்கு முன்னரே பக்தியூட்டியபள்ளதை புதிய தலைமுறை தேடிப்பிடிக்கும்.*

*கணபதீஸ்வரம் செல்வ விநாயகர் கோவில்; திருமுருகன் கோவில், சிதம்பர ஆதி நடேசர் ஆலயம்; நாகபூசனி ஸமேத நாகலிங்கேஸ்வரர் ஆலயம், கனடா ஸ்ரீ ஸத்ய நாராயணசுவாமி திருக்கோவில், அனலை ஐயனார் கோவில், கனடா சபரி பீடம் ஸ்ரீ ஐயப்பசுவாமி கோவில் ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில் அல்பியன் வீத் முத்துமாரியம்மன் அஜெக்ஸ் பிள்ளையார் கோவில் என்பன அதிகரித்த பக்தர்களுக்கு 2006 ம் ஆண்டுக்குப்பின் வழிபட வழிகாட்டுகின்றன என்பதையும் எப்படியாவது கண்டு பிடிக்கும்.*

*பின்னர் விடுபட்டவை மேலதிகமாக உள்ளனவா எனவும்அறியத்துடிக்கும்.*

*கிட்டங்கி கோவில்கள் கிட்டக்கிட்ட உள்ளது ரொரண்ரோவில் மட்டும்தான். அவை அனைத்தும் வாஸ்த்துசாத்திரப்படி அமைக்கப்*

*படுகின்றனவா என சந்தேகிக்கும் பழைய தலைமுறை தம் முன்னோர்கள் விவசாய விஞ்ஞானிகள் என்பதை நினைவு கூரும். அறிவியல் வளர்ந்துவிட்டது எனவே தங்கள் வசதிக்காக எதையும் செய்ய முடியும் என்பவர்கள் தமது பாட்டன் பூட்டன் கடைப்பிடித்தன வற்றை விட்டுவிட்டதேன் என விடை காணது தவிக்கும்.*

*அந்த நாட்களில் ஒரு விவசாயி ஓர் இடத்தை வாங்கும் முன் ஒரு சேவலோடு முதல் நாளே அங்கு போய் தங்குவாராம்.*

*விடியற்காலையில் சேவல் கூவினால் மண்ணில் உயிர் உள்ளதாக அர்த்தம்.கூவாவிட்டால் சத்து இல்லை என்பது அர்த்தம்.*

*சேவல் கூவினால் மட்டுமே அந்த இடத்தை வாங்குவார்.சேவல் மண்ணைக் கிளறி புழுக்களைத் தின்றால் தென்பாகக் கூவும்.புழு*

*அதிகம் உள்ள நிலம் விவசாயத்துக்கு ஏற்றது.புழு கிடைக்கவில்லை எனின் சேவலின் கூவும் சக்தியும் வலுவிழந்தே வெளிப்படும்.*

*அதே போல் கிணறு வெட்ட உள்ள நிலப்பகுதியை நான்கு பக்கமும் அடைத்து விட்டு பால் சுரக்கும் பசுக்களை அங்கு மேய விடுவார்களாம்.*

*மேய்ந்த பின் குளிர்ச்சியான இடத்தில் அவை படுத்து அசை போடுமாம்.அப்படி அவை படுக்கும் இடங்களை நான்கைந்து நாட்கள் கவனித்தால் அவை தொடர்ந்து ஒரே இடத்தில் படுக்குமாம்.*

*அந்த இடத்தைத் தோண்டினால் வற்றாத நீரூற்று கிடைக்குமாம்.என தாம் அறிந்தவற்றை அருகில் உள்ளவரிடம் கூறும்.*

*வீடு கட்டும் நிலங்களையே பார்த்துப் பார்த்து வாங்கிய எமது சமுதாயம் இப்பொழுது கோவில்களை நிர்மாணிக்க மட்டும் அவசர அவசரமாக கிட்டங்கிகளை நாடுவதேன் என அங்கலாய்க்கும்.*

*பின் அது தற்காலிகம் என அமைதியுறும்.*

*பல தடவைகள் பலர் அவதானித்த ஒரு சுவையான சம்பவமும் உண்டு. சண்டேஸ்வரர் சந்நிதியில் கண்மூடிப்பிரார்த்தித்த பின் உடுப்பிலிருந்து நூலிழை ஒன்றை எடுத்து பீடத்திற்கு முன்பாக வைக்குமாறும் பின்னர் கைகளை தட்டி கரவொலி எழுப்பி வேண்டுதலை நிறைவு செய்யுமாறும் வலியுறுத்தும் பழைய தலைமுறை, அதற்கு காரணமாக அந்தச் சாமி செவிட்டுச்சாமி என்றும் கூறி வைக்கும்.*

*அது மகா தவறு என்று மறுக்கும்*
*கூகிளைப் பார்த்த புதிய தலைமுறை.*

*அவர் செவிட்டுச்சாமி அல்ல!*
*சிவனையே எப்பொழுதும்*
*தியானித்த வண்ணம் இருப்பவர்.*
*சண்டேஸ்வரது நிஷ்டையை கைதட்டி*
*இடைஞ்சல் செய்வது மகா பாவம்.*
*சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்த*
*பின் பூமாலை,பரிவட்டம்*
*முதலியவற்றை அவர்*
*பீடத்தில்வைத்து மௌனமாக*
*வழிபடுவதே உகந்தது என்று*
*ஆணித்தரமாக விளங்க வைக்கும்.*

*- போடா..போ! கனக்கப் படித்தால்*
*உப்படித்தான் என உண்மையையும்*
*பொய்யாக்கும் பழைய தலை முறை.*

*ராஜ கோபுரங்கள் ஆங்காங்கே*
*வானுயர்ந்து கோவில்களின் நிலமான*
*ரொரண்ரோவில் வரலாறு தொடங்க*
*63 நாயன்மார்களும் 12*
*ஆழ்வார்களும் சில ஆலய பிரகார*

*சுவர்களில் வீற்றிருந்து வரலாற்றில் தொடர்கின்றார்கள்.*

*ஞாயிறு: சிவன் காளி பைரவர் சூரியன் திங்கள்:அம்பிகை நடராஜர் சந்திரன் செவ்வாய்:விநாயகர் முருகன் துர்க்கை நரஸிம்மர் புதன்:விஷ்ணு சரஸ்வதி ஹயக்ரீவர் வியாழன்:தட்சிணாமூர்த்தி வெங்கடேஸ்வர் வெள்ளி:லட்சுமி ரங்கநாதர் மாரி சனி:சனீஸ்வரர் ஆஞ்சநேயர்.*

*என கிழமைவாரியாக ஆலயம் செல்லும் பக்தர்களும் இங்குளர். அவ்வளவு வசதி. அவ்வளவு பக்தி.*

*தலைவர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், கணக்கியலாளர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், நவீன சிந்தனையாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஓவியர்கள், தொழிலாளர்கள், வணிக விற்பன்னர்கள், மாணவர்கள் என*

*ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அவ்வப்பொழுது எவ்வித பேதமுமின்றி அன்னதான வரிசையிலும் நிற்கின்றார்கள். இறையால் உதிரமும் இரையால் உதரமும் புத்துணர்வு பெறுகின்றார்கள்.*

*பொதுவாக அன்னதானமெனின் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல்,சாம்பார் சாதம், புளிச்சாதம்,தயிர்சாதம் என்பனவற்றுள் ஏதாவதொன்று இருந்து உணவுக்கும் - உணர்வுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை புலப்படுத்துவது மரபு.*

*ஆனால் இங்குள்ள ஆலயமொன்றில் கோந்தடை,குழைமா,கட்டிகை,முறுகி, பாற்கன்னல்,மாவேச்சி,செழும்பம்,மார்சில்,உழுந்தை, கோளினி, முறுக்கினி, மென்குழம்பு போன்றனவும் அவ்வப்பொழுது கிடைக்கும் என்று எழுதப்பட்டிருந்தது.*

*அதனை பார்த்த பலர் கடவுளை கைவிட்டுவிட்டு அவை என்னென்ன*

*என ஆராய்ந்ததததையும் அவதானிக்க முடிந்தது.*

*(அவை முறையே சப்பாத்தி, நூடுல்ஸ், கேக் , சமோசா, பாயாசம், பஜ்ஜி, கேசரி, பிஸ்கட், போண்டா, லட்டு, ஜாங்கிரி, சாம்பார் என்பனவாகும்)*

*தோசை, இட்டலி, உப்புமா, பூரி, அப்பம், புட்டு, இடியப்பம் என தினத்துக்கு ஒன்றென இரவுணவை இலவசமாக வழங்கும் சில ஆலயங்களை ரொறண்டோவில் மட்டும்தான் பார்க்கமுடியும்.*

*- முடியாத முதியவர்களுக்குத்தான் அன்னதானம் என்பது முடிந்துவிட்டது!*

*ஷீர்ரடிசாய்பாபா, சத்யசாய்பாபா, அமிர் தானந்தமயி, மேல் மருவத்துார் பங்காரு அடிகள், அம்மா பகவான், சற்குரு ஜக்கி வாசுதேவ், நித்தியா னந்தர், சரவணபவர், பரமஹம்சர், ரமணர், வள்ளலார், ரஜ்னீஷ், அரவிந்தர், யோகிரா*

*ம்சரத்குமார்,தயானந்த சரஸ்வதி, குடைசுவாமி,யோகர்சுவாமி,என அங்கு அவதாரமெடுத்த யோகிகள் இங்கும் பக்தர்களால் அவதாரமெடுத்துள்ளனர்.*

*பத்து வயதுக்குட்பட்டவர்கள் திருவிழா காலங்களில் பரிக்கிரம வேளைகளில் ஆலயங்களின் உள் வீதி வெளி வீதிகளில் காவடி எடுக்கின்றார்கள்.இருபது வயதுக்கு மேற்பட்ட ஒருசிலர் பறவைக் காவடி, துலா காவடி என பிரதான வீதிகள் வழியே காவற்துறையின் பாதுகாப்புடன் நேர்த்திக்கடன் முடிக்கின்றாரகள்.*

*இங்கு நாதஸ்வர கலைஞர்கள் அதிகரித்துவிட்டனர்.சிற்பாசாரிகள் அதிகரித்துவிட்டனர்.பூக்கடைகள் அதிகரித்து விட்டன.*

*ஆலயங்கள் சிலவற்றில் சிறார்க்கென பாடசாலைகள் உருவாகி பண்ணோடு பாடப் போதிக்கின்றன.பண்பாட்டைப்*

*புகட்டுகின்றன.தமிழ் கல்வி படிப்பிக் கின்றன.ஒழுக்கத்தை ஒழுங்காய் ஓதுகின்றன.கலைகள் கற்பிக்கின்றன. சமூக சேவைகள் பயில்விக்கின்றன. நம்பிக்கையூட்டுகின்றன.*

*ஆலயங்கள் ஆத்மாவையும் உள்ளத்தையும் வாழ்க்கையையும் உன்னதமாக்கின்றன.ஆனந்தமயமான பொன் பொருள் மிக்க வாழ்வையும் வளத்தையும் மீண்டும் வந்து பிறவாத பேரின்ப முத்தியையும் உண்டாகின்றன.*

*இங்கு ஆலயங்கள் நிறைய நிறைய!*

*ஒவ்வொரு ஆலயத்துக்குள்ளும் உருவச்சிலைகளும் நிறைய நிறைய!*

*அந்தணர்களும் நிறைய நிறைய!*

*பக்தர்களும் நிறைய நிறைய!*

*கோவிலுக்குள் நுழைய முடியாதவர் என்று இங்கு எந்த கடவுளும் இல்லை!*

## *நனி சைவம்.*

*ஆனி மாத இறுதி தொடங்கி புரட்டாதி மாத ஆரம்பம் வரை கனடாவில் விமானங்கள் நிரம்ப பறக்கும் காலம்.*

*தனிச் சைவம் பற்றி பூரண அறிவுடன் பயணத்தை மேற்கொள்ளும் ஒருசிலருக்காவது நனி சைவம்(Vegan) என்ற வார்த்தையை தற்பொழுதெல் லாம் அறிமுகம் செய்து வைப்பது பல விமான பயணங்கள்:பல நாடுகள்:பல உணவகங்கள்.*

*பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என பாரதியார் கூறிச் சென்றதை அறிந்தது தவிர நனி என்ற சொல்லை வேறு எங்குமே எம்மில் பலர் பயன்படுத்துவது அபூர்வம்.*

*முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர் என*

*நற்றிணையில் வருவதாக கூறுவர் பண்டிதர்.*

*நனி என்றால் மேன்மையானது சாலச்சிறந்தது தனித்துவமானது மிகுந்தது பெருக்கமானது என்று பொருள்.*

*சால, உறு, தவ, நனி , கூர் , கழி ஆகிய ஆறு சொற்களும் அதே கருத்துடையவை.*

*நனி சைவ முறையே அனைத்து உணவுமுறைகளிலும் சாலச்சிறந்தது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவர்க்கும் ஏற்றது.*

*மனித உடல் நலத்தை பாதிக்கும் பல்வேறு வியாதிகளை குணப்படுத்தவும் அத்தகைய வியாதிகள் வராதிருக்கவும் மாமருந்தது என்பார்கள் உணவியல் நிபுணர்கள்.*

*மாமிசம் உண்பவர்களைவிட அதிக வீரியமுள்ள வெள்ளை அணுக்கள் நனி சைவர்களது இரத்தத்தில் அதிகமாக உற்பத்தியாகின்றன என்பது அவர்களின் ஆய்ந்த முடிவு.*

*மதத்துக்காக – மருத்துவத்துக்காக – மகத்துவத்துக்காக - மிருக வதை எதிர்ப்புக்காக – வாழ்வு முறைக்காக – வாழ்விட வசதிக்காக என நனி சைவ உணவை உட்கொள்பவர் களுக்கான காரணங்கள் வேறுபடும்.*

*பழங்கள் உலர் பழங்கள் கீரைகள் காய்கறிகள் தானியங்கள் வித்துகள் என்பன உலகெங்கும் நனி சைவர்களை சுகதேகிகளாக வைக்கின்றது.*

*தேங்காய்ப் பால் சோயாப் பால் பாதாம் பால் வேர்கடலைப் பால் போன்றவை மிருகங்களிலிருந்து பெறப்படும் பாலுக்கு நிகராகின்றன.*

அவற்றிலிருந்தே தயிரும் மோரும் தயாராக எள் நிலக்கடலை பாதாம் பருப்பு கஜூ போன்றவற்றிலிருந்து வெண்ணெயும் நெய்யும் பனீரும் பாலாடைக்கட்டியும் பெறப்படுகின்றன. காளான் வகைகள் சோயா டோ.ஃபூ ஆகியவை இறைச்சிக்கும் முட்டைக்கும் பிரதியீடாகின்றன.

புற்று நோய் இருதய நோய் நீரழிவு இரத்த அழுத்தம் உடல் பருமன் ஒவ்வாமை சில சரும நோய்கள் மலச்சிக்கல் சிறு நீரகக் கல் போன்றவற்றின் தாக்கத்தை கணிசமான அளவு குறைக்க இந்த உணவு முறை சிபார்சு செய்யப்படுகின்றது.

சமண சமயம் (ஜைனம்) பிற உயிர்களுக்கு இம்சை கொடுக்காத கோட்பாட்டை தீவிரமாக பின்பற்றுவதால் பூரண நனி சைவ உணவை உட்கொள்பவர்கள் நிறைந்த ஒரே ஒரு மதமாகின்றது.

*சைவம் வைஷ்ணவம் பௌத்தம் சீக்கியம் போன்ற சமயங்களில் மாமிசம் அனுமதிக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை.ஏனையவை ஊனுண்ணிகள்.*

*மேற்குலக தமிழர் மத்தியில் இன்று தாவர பட்சணி என்பதும் மாமிச பட்சணி என்பதும் தெரியாமலே நீர்த்துப்போயிற்று. மரக்கறியா மாமிசமா என்றால் மயங்கும் புதிய தலைமுறை சைவமா அசைவமா என்றால் கூட சமயத்தில் மூளைக்குள் அசை போடாது வேறென்ன செய்யும்? வெஜிடேரியன் (Vegetarian) அல்லது நொன் வெஜிடேரியன் (Non Vegetarian) என்ற வார்த்தையே சர்வ சாதாரணமாய் அவர்களது வாயை நிறைக்கின்றது.*

*தாவர உணவுடன் (Vegetarian) பாலையும் தேனையும் சேர்த்துக்*

கொள்ளும் உண்முறை உலகெங்கும் உண்டு.

அதற்குள்ளும் பால் தயிர் மோர் வெண்ணெய் பாலாடைக்கட்டி முட்டை மாமிசம் மீன் தேன் போனறவற்றை நிராகரிப்பவர்கள் நனி சைவ (Vegan) உணவாளர்கள் எனப்படுகின்றார்கள்.

பழங்களை மட்டுமே சுவைப்பவர்கள் (Fruitarian) சிலர்.

பால் முட்டை சேர்த்துக் கொள்ளலாம் தப்பில்லை என்பவர்கள் (Eggetarian) சிலர்.

இலங்கையின் சிங்கள பகுதிகளிலும் வங்காளத்திலும் கருவாடு மீன் என்பனவும் சத்தியமாக மரக்கறி உணவேதான் என்பவர்களையும் (Peskatarian) காணலாம்.

கோழி இறைச்சியில் அலாதி பிரியம் கொண்டு இதர புலால் வகைகளை

*தவிர்ப்பவர்கள் (Pollotarian) வேறு சிலர்.*

*அட போங்கப்பா! வாரத்தில் ஆறு நாட்கள் மரக்கறி உணவும் ஞாயிறு கிழமை மட்டும் மாமிசமும் தின்கின்றோம் என்பவர்களும் (Flexitarian) உளர்.*

*பூண்டு வெங்காயம் போன்றவற்றை உணவில் அதிகம் விரும்புபவர்கள் (Lustarian) இச்சை மிக்கவர்கள்.*

*மரக்கறி உணவு முறை மிகவும் தொன்மையானது.*

*பைதகரஸ் பிளோட்டோ போன்ற கிரேக்க தத்துவ ஞானிகள் பலர் நனி சைவர்களாக அக்காலத்தில் திகழ்தனர் என்கின்றது வரலாறு.*

*எனினும் பிரித்தானியரான டொனால்ட் வாட்ஸன் என்பவரே வீகன் என்ற*

ஆங்கிலப் பெயரை 1944 ம் ஆண்டு உலகிற்குஅறிமுகப்படுத்தினார்.

ஆரோக்கியத்துக்கும் விலங்குகளுக்கும் சூழலுக்கும் தீங்கற்ற நனி சைவ உணவை அதிகளவில் உட்கொள்பவர்கள் உள்ள நாடு இஸ்ரேலாகும். பூச்சிகளின் எச்சிலான தேனும் பட்டும் நனிசைவர்களால் புறக்கணிக்கப்படு கின்றன.

புரதம்( protein) நார்சத்து(Fiber) தாது உப்புக்கள்(Mineral salts) மாச் சத்து (Carbohydrate) உயிர்சத்துகள் (Vitamins) அன்ரி அக்சிடன்ட் (Antioxidants) பைட்டோ நியூட்ரியன்ட் (Phytonutrients·) போன்ற பல ஊட்டச் சத்துகள் நனிசைவ உணவில் நிறைந்துள்ளததை உணரும் சீனர்கள் ஊர்வன எல்லாம் உண்பதற்கு உகந்தவை என்ற தமது உணவு முறையில் அஜீரணமடைகின்றனர்!

# அறிதுயில்.

அறிதுயில் என்றால் என்ன என்றறியும்
ஆர்வம் கனடாவில் அகதி நிலை
கோரிய பலரது மனங்களுக்குள்ளும்
அவ்வப்பொழுது எட்டிப்பார்த்ததுண்டு.

அகதி நிலை கோரிக்கையாளர்
அறிதுயில் பரிசோதனைக்கு
உள்ளாவர் என நிலவிய கட்டுகதை
அன்று அதற்கு காரணம் அமைத்தது.

ஆழ்மனதை அகலமாக்கும்
வேட்கையும் ஆராயும் வேட்டையுமே
அறிதுயில் ஆகும்.

அது ஓர் உளவியல் சார்ந்த
மருத்துவ சிகிச்சை முறை.

அறிதுயில் மூலம் கடந்த காலத்தை
அறிந்து, நிகழ் காலத்தில் பாதிக்கும்
இனந்தெரியாத அச்சங்களை நீக்கி -
நோய்களை போக்கி, எதிர்காலம்
நிம்மதி தரும் வகையில் பூரண

குணம் காட்டலாம் என்போர் வல்லுனர்.

அறிதுயில்(Hypnotism) அல்லது தரவுதுயில் (Mesmerism) போன்றவற்றிக்கு வயது பேதமின்றி எவரையும் உட்படுத்தலாம் எனினும் 12 முதல் 20 வயது வரை உள்ளவர்களை உட்படுத்தல் மிக எளிது.

அனுமதியும் பூரண ஒத்துழைப்பும் இன்றி எவரையும் பலவந்தமாக அறிதுயில் மூலம் ஆழ்நிலைக்குக் கொண்டு செல்ல முடியாது. அவர்களின் ஆழ்மன ரகசியங்களை அம்பலப்படுத்த முடியாது. அவர்களுக்கு தெரியாமல் சமூக விரோத செயல்களில் ஈடுபடுத்த முடியாது.

பொத்தி பொத்தி வைத்திருந்த பொட்டுக்கேடுகளை வெளியே கொண்டுவர முடியாது. மூளைச்

சலவை செய்ய முடியாது. மனதை கட்டுப்படுத்த முடியாது. பாலியல் நடவடிக்கை புரிய முடியாது.ஆக மொத்தத்தில் அடிமை போல நடாத்த முடியாது.

4000 ஆண்டு பழைமை வாய்ந்த அறிதுயிலின் மூலம் கிரேக்கமாகும். கிரேக்க மொழியில் hypos எனின் தூக்கம் என்பது அர்த்தம்.எகிப்தும் ரோமானியாவும் இந்தியாவும் இச் சிகிச்சையுடன் சமயத்தையும் கலந்த புராதன வரலாற்றை கொண்டுள்ளதாக சரித்திரம் சான்று பகர்கின்றது. ஸ்கொட்லாந்தவரான ஜேம்ஸ் ப்ரைட் (James Braid) (1796-1860) என்ற நரம்பியல் மருத்துவரே இதன் நவீனவடிவ தந்தை என கருதப்படுகின்றார்.ஜேர்மனி மருத்துவரான பிரான்ஸ் மெஸ்மர் (Franz Mesmer) (1734-1850) தரவு துயில் நெறியை மருத்துவத்தில் புகுத்தினார்.1950 ம் ஆண்டு வரை அறிதுயில் ஒரு மருத்துவ முறை என

*அங்கீகரிக்கப் படவில்லை.இன்று தகுந்த உகந்த சிகிட்சை முறையாக மருத்துவ உலகம் போற்றும் இதனை பண்டைய எகிப்து கனவு ஆலயங்கள் என்ற பெயரில் ஆராதித்தது.*

*அறிதுயில் அல்லது தரவு துயில் வெறும் மாயாஜாலம் அல்லது கண்துடைப்பு என்ற தவறான அபிப்பிராயம் பலரிடம் உண்டு.*

*ஆனாலும் ஆழ்மனத்தின் ஆழத்தில் புதையுண்டிருக்கும் அக அழுத்தங்களையும் மாறாத துயரங்களையும் விடுவிக்கும் அவை வலுக்கட்டாயமாக வாயைக் கிளறி வசதியாக மாட்ட வைப்பவை அல்ல என்ற கணிப்பும் உள்ளது.*

*அறிதுயில் இயற்கையான தூக்கம் அல்ல.தூக்கம் போன்ற நிலையில் ஒரு நிபுணருக்கு கட்டுப்பட்டு இருப்பது மட்டுமே.*

*அந்த நிலைமையில் தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதனை அறிதுயிலுக்குட்படுபவரால் உணர முடியும்.பல அரசாங்கங்கள், காவல் துறையினர், ராணுவத்தினர் போராளிகளிடமிருந்தும் குற்றவாளிகளிடமிருந்தும் இரகசியங்களையும் உண்மைகளையும் அறிதுயில் மூலம் அறிந்து கொள்ள முனைப்புடன் முயன்றும் வெற்றியீட்டவில்லை.*

*அறிதுயில் சிகிட்சை மூலம் வலியில்லாத அறுவை சிகிட்சை, வலியற்ற பிரசவம், போன்றனவும் மனோ ரீதியான அச்ச உணர்வுகளும் (Phobias) ஒவ்வாமை போன்றனவும் இலகுவான முறையில் நிவாரணம் பெறுகின்றன.உள்ளத்தில் உள்ள சிக்கல்கள் (Psychological) விடுவிக்கப்படுகின்றன.உடல் சார்ந்த பிரச்சினைகள் (Physical problems) குணமாகின்றன.*

*ஒவ்வாமை(Allergies), கவலை (Depression), இரத்த அழுத்தம், தூக்கமின்மை,போதைப் பழக்கம், குடல் நோய், பாலியல் பிச்சினை, தோல் வியாதி,கட்டுக்கடங்கா உணர்ச்சிகள், தீராத தீவிர வலிகள்,தாழ்வு மனப்பான்மை,பதட்டம் போன்ற பல உபாதைகளுக்கு நிவாரணம் அளிப்பதில் அறிதுயில் முன்ணணி வகிப்பதாகச் நம்பப்படுகின்றது.*

*சிந்திக்கும் ஆற்றல் குறைந்தவர்களை அல்லது பலஹீனமானவர்களை இலகுவில் அறிதுயிலில் ஆழ்த்திவிடலாம் என்பது தப்பு.*

*பூரண ஒத்துழைப்பு நல்கும் எவரையும் இலகுவாகவும் முரண் பிடிப்பவர்களை சிரமத்துடனும் அறிதுயிலுக்கு உட்படுத்தலாம் என்பதே சரி.*

*மனதையும் உடலையும் அறிதுயில் ஸ்திரப்படுத்துவதால் அவை உறுதியடையும் என்பதே உண்மை.*

*ஆழ் நித்திரைக்கு உட்படுத்தினாலும் அதிலிருந்து வெளியேற வேண்டும் என நினைத்த நேரத்திலேயே வெளியேறிவிடலாம் என்பது அறிதுயிலின் ஆச்சரியம்.*

*மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்ற அகத்தியர் வாக்கை நினைவுபடுத்துவது அறிதுயில்.எந்த மந்திரம் செபித்தாலும் எந்தச் செயல் புரிந்தாலும் மனதை ஓர் நிலைப்படுத்திச் செய்தால் வெற்றி என போதிப்பது அறிதுயில்.நம் உண்மையான வழிகாட்டியான ஆழ்மனதை(sub conscious)எளிய பயிற்சிக்கு பழக்கி நாம் விரும்பும் நல்ல மாற்றத்தை நம் வாழ்கையில் ஏற்படுத்தலாம் என அறிவுறுத்துவது – அறிதுயில்.*

*திரைப்படங்களிலும் நாடகங்களிலும் இச் சிகிட்சைமுறை பெரும்பாலும் நகைச்சுவைக்காக அதித கற்பனையுடன் களமாகின்றது.நாய் போல் குரைப்பதாகவும் பேய் போல் துள்ளுவதாகவும் சித்தரிக்கப்படுகின்றது.*

*எப்பொழுதும் தயார் நிலையில் உங்கள் உள் மனது உள்ளதா என பரிசோதிக்க விரும்பும் மனோதத்துவ மருத்துவர்கள் பின்வரும் வாக்கியத்தை ஆறுதலாக வாசித்து அதில் எத்தனை தடவை **F** என்ற எழுத்து வருகின்றது என கேட்பார்களாம்.*

***FINISHED FILES ARE THE RESULT OF YEARS OF SCIENTIFIC STUDY COMBINED WITH THE EXPERIENCE OF MANY YEARS.***

*இதென்ன கேள்வி? எத்தனை தடவை வாசித்தாலும் மூன்று என்பது தானே பதில் என்கின்றீர்களா?*

*நீங்களும் ஆறுதலாக வாசிக்கவில்லை!*

## *யாவரும் கேளிர்.*

*நண்பர்கள் நாளாக ஜூலை 30 ம் திகதியை பல நாடுகள் புன்னகையுடன் வரவேற்றுக் கை குலுக்கிக் கொள்ள தினமும் ஒரு நட்பை நாடும் மேலும் சில நாடுகள் ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை நட்புடன் உபசரிக்கின்றன.*

*சகல ஊர்களும் எங்களுக்கானவை - சகலரும் எங்களின் நண்பர்கள் என்ற அர்த்தத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என புறநானூற்றில் கூறிச் சென்ற கணியன் பூங்குன்றனாரின் படமிருந்தால் தூசுதட்டி அந்த நாளிலாவது மாலையிடத் தோன்றும்.*

*தமிழ் இலக்கியவாதிகள் யாராவது கேளிர் என்பதை கேளீர் ஆக்கி அறிவை அள்ளி வைக்கும் பொழுது அதனைத் திருத்துவதற்கு ஏற்ற அறிவார்ந்த நண்பர்கள் அவர்களுக்கு இல்லையோ என்ற ஏக்கமும் அதே தினத்தில் இதயத்தை உலுப்பும்.*

*நட்பு, நட்பு ஆராய்தல், பழமை(முதிர் நட்பு), தீ நட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களை நட்பாக்கி உள்ளார் வள்ளுவர்.*

*நட்பு, நண்பு, சினேகிதம், மித்திரம், சகாத்தம், சகித்துவம், தோழமை என இதயங்களை இணையவைக்கும் அந்த உறவுக்கு பெயர்கள் பல!*

*உடல் நலம் மன நலம் இரண்டிலும் நட்பின் பங்கு அதிகம். எதனையும் மனம் திறந்து பேசலாம் என்று எண்ண வைப்பவர்கள், பழகுவதற்கு மிகவும் இனிமையாக,*

*சுவாரஸ்யமாக, உற்சாகமாக*
*இருப்பவர்கள், நல்ல புதிய*
*விடயங்களை அறிவிப்பவர்கள்,*
*தட்டிக்கொடுத்தோ, ஆறுதல்கூறியோ*
*நமது மனநிலை அறிந்து*
*தோள்கொடுப்பவர்கள் என நட்பில்*
*சந்தோஷம் கலப்பவர்கள் பலர்.*

*நட்பின் இலக்கணம் எந்தவோர்*
*அகராதிக்குள்ளும் இருப்பதில்லை.*
*அது இதயங்களுக்கு அருகிலேயே*
*துடித்துக் கொண்டிருக்கும்.*

*நிகழ்காலத்தை நிமிர வைப்பதும்*
*இறந்தகாலத்தை இறவாதகாலம்*
*ஆக்குவதும் நட்பு என்பது*
*நண்பர்களுக்கு மட்டும் தெரியும்.*

*அகத்துக்குள் ஆணிவேர் பிடிக்கும்*
*நட்பு விரைவில் முனை முறிந்து*
*போவதில்லை என்பது நண்பராக*
*இல்லாதோருக்கும் தெரியும்.*

*சொல்லக் கூடாத,சொல்ல முடியாத அனைத்தையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய அணுக்கமான நட்பு உங்களுக்கிருப்பின் அது உயிர் நட்பு.*

*எந்தத் 'தில்லாலங்கடி' வேலை செய்தாலும் பிரிக்க முடியாத நேசமும் இறுக்கமும் உள்ளது உயர் நட்பு.*

*அன்பும் புரிதலும் பிணைப்பும் அற்று கூடுவதும் கூடிய வேகத்திலேயே ஊடுவதும் தருண நட்பு.*

*கேளிக்கைகளில் பங்கு பற்றுவதுடன் நின்றுவிடுவது கரும நட்பு.*

*குழந்தைகளின் மனதில் வரும் நட்பு விளையாட்டுக் காட்டும். அடிக்கும். கிள்ளும்.*

*மனதுக்கு மட்டுமே தெரிந்த, அதிகம் ரசிக்கும் அது பாவனை நட்பு.*

*ஆன்மிக நோக்கத்துக்காக மட்டும் இணைந்து செயற்படுவது மார்க்க நட்பு.*

*இதயங்களைச் சம்பாதிக்கத் தெரியாது கடனுக்காக பழகுவது நளின நட்பு.*

*இங்கு வாங்கி அங்கு கொடுப்பதும் அங்கு வாங்கி இங்கு கொடுப்பதும் மலின நட்பு.*

*குணத்துக்காக அன்றி பணத்துக்காக பழகுவது போலி நட்பு.*

*நட்பு பகையானால் நிம்மதி இராது. பகை நட்பானால் நம்பிக்கை இராது என்பது அனுபவம் தோளில் கை வைத்துச் சொல்லும் நட்பு மொழி.*

*இதுவரை உணர்ந்தது கிழக்கின் நட்பு! இனி மேல் உற்று நோக்கப் போவது பண்டைய தமிழ் மரபின் நீட்சியற்ற மேற்கின் நட்பு!!*

*பரஸ்பர புரிதலுடன் கட்டிப் புரளாத குறையாக தன்னினச்சேர்கையில்*

*நாட்டம் அற்ற ஆண்கள் நேர்மையான சினேகிதர்கள் எனின் சகாத்தர் (Bromance).*

*ஒருவர் மீது ஒருவருக்கு இனக்கவர்ச்சியோ உடல் கவர்ச்சியோ இல்லாமல் அன்பு பாசம் நட்பு மரியாதை கூடிக் கொண்டே இருப்பது கம்பநமற்றோர் (Platonic love) நட்பு.*

*ஆணின் ஆதரவைத் தவிர்த்து உடல் உறவின்றி இரு பெண்கள் சேர்ந்து வாழ்வது மகிலையர் (Boston marrage).*

*இவ்விதம் மேற்கின் நட்பிற்கு நேர்பொருள் காட்டக் கூடும் எதிர் காலத் தமிழ்!*

*அன்று பெயர் தெரியாத பொடியளை பட்டிக்காட்டில் பெரிசுகள் பொடி என வாஞ்சையுடன் அழைத்த பொழுது, வெட்கம் வந்தது.*

*இன்று அமெரிக்க நாகரிகம் அதனையே நட்புடன் buddy என்றழைக்கும் பொழுது, துக்கம் வருகின்றது.*

*நட்பு தெரியும்.ஆனால் பட்பு என்றொரு சொல் நடைமுறையில் உள்ளது தெரியுமா?*

*'கண்டறியாத நட்பு' அல்லது கண்டதும் சுடும் நட்பு என்ற கருத்தில் பழந் தமிழ் அதனை பட்பு (Frenemy) என்கின்றது.*

*அது பகைமையும் நட்பும் கொஞ்சம் கொஞ்சம் கலந்த கலவை.சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் பாதிப்படைய வைப்பது இதன் இயல்பு.*

*இதே போல நட்பும் எதிரியும் சேர்ந்த நதிரி என்பதே திரிபு பட்டு நாதாரி என இந்திய திரைப்படங்கள் புகட்டும்*

*நல் வார்த்தையாகியதெனவும் நவில்வர்.*

*நாவில் தாரி நாவால் பேசியே கொல்பவன் அல்லது பன்றி மேய்ப்பவன் போன்ற அர்த்தங்களும் அதற்கு உண்டெனவும் சொல்லப்படுவது வேறு கதை.*

*உலக உருண்டையின் கணிசமான பகுதி இன்று சிவந்திருப்பதற்குக் காரணமான 1789ம் ஆண்டு பிரன்சுப் புரட்சியுடன் தோழர் (Comrade) என்ற சிறப்புச் சொல் இடதுசாரி நட்புலகில் சிவப்புச் சொல் ஆகி சாகாத சரித்திரத்தை சந்திக்க வைக்கின்றது.*

*உலகம் பூராவும் முன்னொரு காலத்தில் மிகவும் விலாசமாக இருந்த பேனா நட்பு(Pen friend) விசாலம் இழந்து போக தற்பொழுது நட்புடன் உலகை சுற்ற வைக்கின்றது மின்னணு யுகத்தின் தொழில் நுட்ப வளர்ச்சி.*

*கண்டம் விட்டு கண்டம் கடிதங்கள் பறந்து நட்பு வளர்த்த அந்தக் காலம் போய் கனிவான சொல்லையும் நேசம் துளிர்க்கும் பார்வையையும் கணத்திலேயே நட்பாக்கி வலையத் தளங்களில் வாழ்கின்றது.*

*மின்னஞ்சல் (e-mail), முக நூல் (Facebook), கீச்சகம் (Twitter) போன்றவை கையில் பிடித்த மீனைப் போல கணணியிலும் இணையத்திலும் துள்ளுகின்றன.*

*தமிழ் நட்பின் மாறாத சான்றாக கோப்பெரும் சோழனையும் பிசிராந்தையரையும் சங்க காலம் இன்னமும் கூற நட்பின் மூலதனமாக கார்ல் மார்க்ஸ் ப்ரெட்ரிக் ஏங்கெல்சை மேற்குலகம் கொண்டாடுகின்றது.*

*அதே போல் கம்பர் - சடையப்ப வள்ளல், கபிலர் - பாரி, காளிதாஸன்*

*- போஜன், துரியோதனன் - கர்னன் போன்றோரிடமும் காலம் அழிக்காத பக்கங்களில் நட்பு மிளிர்ந்திருந்ததாக ஏட்டிலும் பாட்டிலும் கூறப்படுகின்றது.*

*எல்லாம் சரிதான்! அவ்வாறாக எடுத்துக் காட்டும் நட்பு ஏன் இன்றில்லை என்பதுதான் பலரிடம் உள்ள பதில் காண முடியாத கேள்வி!*

*கனடாவிலிருந்து ஏராளமாப பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் தமிழில் வெளிவந்துள்ளன.*

*ஆனால் அவற்றுள் ஒன்று தன்னும் நட்பு சார்ந்த பெயர்களை 2014 ம் ஆண்டு வரை கொண்டிருக்கவில்லை!*

*— அச்சடித்துக் கொள்கின்றது இதயம்!*

*- தவறு, அடித்துக் கொள்கின்றது இதயம்!!*

## *யதார்த்தவாதி*

*பெருவாரியாக தமிழினம்*
*கனடாவிற்குள் புலம் பெயர்ந்த*
*காலப்பகுதி ஒன்றில் -*

*புதிதாய் புகுந்த யதார்த்தவாதி*
*ஒருவன் இறும்பூதெய்துகின்றான்.*

*அதிகரித்து வரும் ஆலயங்களைப்*
*பார்த்து ஆச்சரியப்படுகின்றான்.*
*ஆலயங்கள் தோறும் முண்டியடிக்கும்*
*பக்தர்கள் கூட்டத்தைப் பார்த்து*
*அதிசயப்படுகின்றான்.*

*பறவைக் காவடிகளாலும் துலாக்*
*காவடிகளாலும் வானத்தை*

*அண்ணாந்து பார்த்து மொழி தெரியாதவர்களையும் காரணம் தெரியாமல் வியக்க வைக்கின்றான்.*

*வெள்ளிக்கிழமை மாலை எனின் இலவசப் பத்திரிகைகளை அள்ளிச் செல்கின்றான்.*

*அவற்றைக் கொண்டு செல்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்து ஐந்து சதத்திற்கு பை ஒன்றை வாங்கித் திணித்து நெஞ்சை நிமிர்த்துகின்றான்.*

*திக்கெட்டும் தமிழ் கடைகளைப் பரவ விடுகின்றான்.*

*அங்கு திக்குமுக்காடும் சனத்திரளால் வாங்க வந்ததையும் ஒரு கணம் மறந்து போகின்றான்.*

*அரச அறிக்கைகளும் பிரசுரங்களும் தமிழிலும் வெளிவருவதால் மனதில் கர்வம் கொள்கின்றான்.*

*அலுவலகங்கள் பல தமிழில் வழி காட்டுவதைப் பார்த்தவன் வந்த*

*அலுவலுடன் பிறிதொன்றையும்*
*இலகுவாக முடிக்கின்றான்.*

*ஆஸ்பத்திரிகளின் சுவர்களில் தமிழ்*
*தெரிந்தால் அங்கு மருத்துவர்க்கே நாடி*
*பார்க்கத் துடிக்கின்றான்.*

*வங்கிகள் பலவற்றில் தமிழிலேயே*
*கணக்கு வழக்கை செவ்வனே*
*முடிக்கின்றான்.*

*வழக்கறிஞர் தமிழில் முறைப்பாட்டைக்*
*கேட்டு ஆங்கிலத்தில் வாதாடுவதில்*
*நீதி காண்கின்றான்.*

*அவசர தேவைக்கு தெலைபேசி மூலம்*
*தமிழில் வாடகைக்கு காரையும்*
*அழைக்கின்றான்.*

*ஆபத்தான வேளைகளில் தொலை*
*பேசி ஊடாக காவல் துறையையும்*
*அணுகுகின்றான்.*

*எண்பது வயதுத் தமிழ் கைகோர்த்துச்*
*செல்வதை பார்க்கையில் கண்கள்*
*பனிக்கின்றான்.*

*இருபது வயதுத் தமிழ் முட்டிமோதி*
*எடுத்தடி வைப்பதில் சிந்தை*
*மயங்குகின்றான்.*

*பூத்துப்போன கண்களை பூட்டியே*
*வைப்பான்.புதிதாய் கண்கள் பூக்க*
*பார்கினில் தவிப்பான்.*

*கனடாவில் தமிழன் தமிழிலும்*
*விளையாடுவான்.*

*சிறார்க்கு வீட்டினில் கெந்தலும்*
*கண்ணாமூச்சியும் பழக்கி மகிழ்கிறான்.*

*ஆடு புலி ஆட்டத்தையும்*
*சொக்கட்டானையும் மூத்தோரிடம் பழகி*
*ஆடுகின்றான்.*

*கயிறிழுத்தலிலும் கிளித்தட்டிலும்*
*வசதிவரின் செந்தமிழும் பேசுகின்றான்.*

*இவை மட்டுமா?*

*கோழிச்சண்டையையும்*
*ஜல்லிக்கட்டையும் களமிறக்குவது*
*எப்போது என மிருகவதை*
*தடுப்பியக்கத்தை மிரளவும் வைப்பான்.*

*தமிழ் தெரியாத இளைய தமிழன்
இணையத்தில் இணைத்திட — முத்தி
பெறுவான் மூத்த தமிழன்.*

*பொழுது போகாவிடின் தமிழரின்
விபரக் கொத்துகளை புரட்ட
முடியாமல் புரட்டி உச்சம் பெற்ற
தமிழரை உவகையுடன் உலுப்புவான்.*

*நடன நிகழ்ச்சிகளை ஏராளமாய் கண்டு
மனதில் தப்பான தாளலயத்தில்
தப்பாமல் நட்டுவாங்கம் செய்வான்.*

*பல்கிப் பெருகும் பல்
வைத்தியர்களால் பற்களை
ஒழுங்காகக் காட்டிச் சிரிப்பான்.*

*வீடு விற்பனை முகவர்களை
தாராளமாகப் பார்த்து பிரமாண்டமான
மாளிகைகளில் மாறிமாறி குடி புகுந்து
வீடுபேறடைவான்.*

*காப்புறுதியாளரையும் திருமணப்
பதிவாளரையும் ஆயுசு பரியந்தம்
நினைவு கூர்வான்.*

*எந்தத் துறையை எடுத்தாலும் அந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற ஒரு தமிழரையாவது கண்டு பிடித்து ஆகா என ஆற்றலைப் போற்றுவான்.*

*பூக்கடைகள் புதிது புதிதாக தமிழில் பூத்திடுவதில் மனம் மலர்வான்.*

*மதுச் சாலைகளின் தமிழ் போதையில் தோய்வான்.*

*கேளிக்கை கூட்டங்களுக்கு உள்ளோ வெளியோ வாய் பிளந்து நிற்க மாட்டான் நமது தமிழன்.*

*உணவுச் சாலைகளில் அறுசுவை உணவுகளை நாவூற ருசிப்பான்.*

*பின்பு பொதியுடன் சென்று வீட்டிற்கும் படைப்பான்.*

*பக்கம் பக்கமாக புடவைக் கடைகளைப் பார்த்ததில் நித்தமும் பண்டிகையோ எனச் சொக்கிடுவான்.*

*விதம் விதமாக நகை கடைகளை வடிவாய்ப் பார்ப்பான்.வடிவும் பார்ப்பான்.*

*வீடியோ கடைகளை மனதால் படம் பிடிப்பான்.*

*இலவச தொலை பேசியில் பேசித் தீர்ப்பான்.*

*டெலி மார்க்கெட்டிங் எனின் அலுத்து வைப்பான்.*

*திஙகட் கிழமை அதிகாலை எழும்பி வேலைக்குச் சென்று சோம்பல் முறிப்பான்.*

*வெள்ளிக் கிழமை காசோலை கைக்கு வந்திடின் மகுடம் தரிப்பான்.*

*பாடசாலைக்கான மஞ்சள் பஸ்ஸில் பிள்ளைகளை பவுத்திரமாக அனுப்பி வைத்து கையசைப்பான்.*

*என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு காரணத்துக்காக பாடசாலைக்கு பிள்ளைகள் வரவில்லை என அங்கிருந்து தொலைபேசி வந்தால் ஊரிலுள்ள தெய்வங்கள் அனைத்திற்கும் உடனடியாக நேர்த்தி வைத்து கண் பிசைவான்.*

*சின்னத்திரையோடு இரவிரவாய் கண் சிவப்பான்.*

*அனர்த்தம் எதாவது நடந்தால் மட்டும் ஆங்கில சனலுக்கு அவசரமாக மாற்றுவான்.*

*ஊர் சனத்தை ஒன்று கூட்டி சங்கமமமைத்துப் பதவி பெற்று காசு சேர்ப்பான். அனுப்புவான்.*

*சுற்றுலா விருந்தினர் வந்திடின் வாடகைக்கு வாகனம் எடுத்து நயாகராவிற்கு அழைத்துச் செல்வான்.*

*கீழே விழுவதொன்றும் அவமானத்துக் குரியதல்ல என திரும்பும் போது அதில் அரசியல் கலப்பான்.*

*ரொறன்ரோ பிராந்தியத்தில் இருப்பவன் நிதமும் புதிதாய் வருபவன் இருக்கும் வரை தவறாது தூரத்தே காட்டுவான் சி.என்.டவரை.*

*ஒவ்வொரு முறையும் அதனை காணும் போது நிமிர்ந்து நில் உயர்ந்து தெரிவாய் என தத்துவம் உதிர்ப்பான்.*

வாடகை வாகனத்தைத் திருப்பிக் கொடுக்க முன்னரோ அல்லது வந்த வரைப் பிரிய முன்னரோ மிருக காட்சிச் சாலை நூதன சாலை ஒன்ராறியோ சயன்ஸ் சென்டர் ஸ்கைடோம் கஸலோமா ரொறன்ரோ தீவுகள் என தனக்குத் தெரிந்ததில் உல்லாசம் பெறுவான்.

வாகனத்துக்குள்ளிருக்கும் விஞ்ஞான வசதிகளால் அசத்துவான்.

போகுமிடத்தை கூறினால் தாமதியாது வழிகாட்டும் தடங்காட்டியை Global Positioning System (GPS) தடங்கலின்றி காட்டி பெருமிதமடைவான்.

குரலை அங்கீகரிக்கும் ஊடலை (Bluetooth)சாதனம் மூலம் விந்தை புரிவான்.

சொல்லாமல் கொள்ளாமல் யாராவது வந்து வெளியே வாசல் கதவைத் தட்டினால் உள்ளே ஒலியின் ஓலத்தை விரைந்து குறைத்து வீட்டினுள்

*எவருமே இல்லாதது போல பாசாங்கு செய்வான்.*

*தமிழ் வானொலிகளை வீட்டிலிருந்தால் விட்டுவிடாது கேட்டுச் சிலிர்ப்பான்.*

*தொலைகாட்சி நிகழ்ச்சிகளை பூர்ந்து பார்த்து பூரிப்படைவானா? இல்லை*

*மாற்றி மாற்றி அதில் புல்லரிப்பான்.*

*தெளிவாகப் பேசி குழப்பத் தோன்றிடின் ஏதாவது வானொலி ஒன்றின் அறிவிப்புக் கலைஞரை கடுப்பேத்த முனைவான்.*

*அதற்கெனவே தொலைபேசி ஊடாக நேயர் விருப்பத்தில் இணைந்து அசத்துவான்.*

*“எனக்கு ஒரு பாட்டு போடுவீர்களா?”*

*‘உங்களுக்கு இல்லாத பாட்டா? எதையும் தெளிவாகக் கேளுங்கள். போடுகின்றேன்’*

*“அது எனக்கு விருப்பமான பாட்டு....அது...அது...அது...”*

*‘கொஞ்சம் பொறுங்கள்.நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொன்னால் காணும். அப் பாடல் ஆங்கிலமா? தமிழா?’*

*“நீங்கள் தமிழ்ச் சேவைதானே நடத்துகின்றீர்கள்?”*

*‘அது வேறு கதை.நாம் எல்லாமே போடுவோம்.உங்களுக்கு எது விருப்பம்?’*

*“தமிழ்ப்பாட்டு.ஆனால் அதற்குள் வேறு மொழிகளும் கலந்திருக்குமோ எனக்குத் தெரியாது.ஏனெனில் இப்ப வாற பாட்டுகள் அப்படித்தானே?”*

*‘பழைய பாட்டா? புதிய பாட்டா?’*

*“புதிய பாட்டுத்தான்.ஆனால் அதே மெட்டில் ஏற்கனவே பழைய பாடலிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல..”*

*‘சரி…சரி..சோகமானதா? சந்தோசமானதா?’*

*“எனக்கு மகிழ்ச்சியைத் தரும்.அதுவே உங்களுக்கு சோகம் தந்தால் நான் என்ன செய்ய?”*

*‘ஆண் பாடகரா? பெண் பாடகியா?’*

*“ஏன் இருவருமே பாடியிருக்கக் கூடாதா? இந்தப் பாடலில் ஆண் குரல்தான் மேலோங்குது.”*

*‘புதிய பாடகரா? பழையவரா?’*

*“அதை நான் எப்படிச் சொல்ல? சிதம்பரம் ஜெயராமனைப் போல மலேஷியா வாசுதேவன் பாடுகின்றார். சுந்தராம்பாளை ஒத்தபடி மாலதி பாடுகின்றார்.எனவே புதியரோ பழையவரோ என்று எனக்குத் தெரியாது.”*

*‘பிரபலமானவரா? அல்லது அறிமுகமற்றவரா?’*

*"கானா உலகநாதன் ஒரு பாடலிலேயே உலக புகழ் பெறவில்லையா? பிரபலத்தை எப்படி நான் தீர்மானிக்க?"*

*அறிவிப்பாளர் நன்றாகக் குழம்பிப் போனார்.*

*'நீங்கள் தந்த தகவல்களுடன் எந்தக் கணினியாலும் கண்டுபிடிக்க முடியாது. அதற்கு மட்டும் பாடும் சக்தி இருந்திருந்தால்.........கந்தா...கடம்பா.. சிங்காரவேலா என முருகனை துணைக்கு கூப்பிட்டிருக்கும்.'*

*"அடடா...அடடா...ஆரம்பத்திலேயே உந்தப் பாட்டைப் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! உதைக் கேட்கத்தானே நானும் இத்தனை நேரமாக காவடி எடுத்தேன்."*

*'ஓ...ஓ..மலைக்கோட்டை என்ற படத்திலுள்ள பாட்டு. நான் தெளிவாகக் குழம்பிப்போனேன். இந்தப் பாட்டு ஏன் பிடிக்கும் என்பதையாவது சொல்லி விட்டுச் செல்லுங்கள்.'*

*“ஓ..நீங்கள் இன்னமும் செவ்வையாய் குழம்பவில்லைப் போல…கொஞ்சம் பொறுங்கோ..”*

*இப்ப அறிவிப்பாளருக்கு செம்மையாய் தலை சுற்ற… ‘அறிவின் நோக்கம் மகிழ்ச்சியை தக்க வைப்பதல்ல. வலியை நீக்குவதே’ எனத் தத்துவம் உதிர்ப்பது தெளிவாக கேட்கும்.*

*ரொறன்ரோ வாசிகளுக்கு இவன் யதார்தவாதி.*

*உலகத்தவர்களுக்கோ இவன் கனடா தமிழன்.*

# *தேசமே தெய்வமாய்!*

*ஓ கனடா! நின்னைப் போற்றி அணிவகுத்தோம்.*

*கனடாவுக்குள் மதங்கள் உண்டு. ஆனால் மதங்களுக்குள் கனடா இல்லை!*

*கனடா மதசார்பற்ற ஒரு நாடு என்பதும் கனடியமக்களுக்கு மதம் என்றுமே ஓர் அடையாளம் அல்ல என்பதும் தெரிந்த எமக்கு - கனடாவில் இருந்து வந்த சமயம் பற்றியோ அல்லது - வந்த சமயம் இருப்பது பற்றியோ - எந்த அளவில் தெரியும்?*

*கனடா நவீன கூட்டாட்சி நாடாக 1867 ம் ஆண்டு உருவானது.அதன் பின் 150 வருடங்களுக்கு மேல் மலர்ந்துள்ளது.*

*1880 ம் ஆண்டு கனடிய தேசீய கீதம் பிரஞ்சு மொழியில் இயற்றப்பட்டது. 1908 ம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது.எனினும்*

*1980 ம் ஆண்டே தேசீய கீதமாக பிரகடனப்படுத்தப் பட்டது.*

*இங்கு வாழும் 320 இலட்சம் பல்லின மக்களும் ஆஸ்திக நாஸ்திக பேதமின்றி தேசியக்கொடிக்கும், தேசியகீதத்து க்கும் அகவணக்கம் செலுத்துவது நாட்டின் மகிமை.*

*கனடாவிற்கு அக வணக்கம் செய்யும் மரபு வளர்ந்து வரும் இச் சமயத்தில் கனடாவில் உத்தியோகபூர்வ மதமாக எதுவும் இல்லை என்பதும் நினைவில் மெலிதாய் அசைந்தாடுகின்றது.*

*உலகத்திலுள்ள பிரதான சமயங்கள் அனைத்தினதும் ஆலயங்களும் உறுப்பினர்களும் கனடாவில் உண்டு.*

*ஒட்டு மொத்தமாக கனடாவில் 189 க்கும் அதிகமான சமய உட்பிரிவுகள் உள்ளதாக கருதப்படுகின்றது.*

*இயற்கையில் இறையை போற்றி அணிவகுத்த செவ்விந்தியரின் இறை*

*வழிபாடு கனடாவில் 15000 வருட நீட்சியை கொண்டுள்ளது.*

*நன்றாக யோசிக்கத் தெரியாத ஆதி வாசிகள் கூட அநாதியில் நல்லதையே யோசிப்பதில் பக்தியுடன்இருந்துள்ளனர்.*

*அவர்கள் இறைவனை நேசித்தார்களா என்பதை விட இறைவன் அவர்களை நேசித்தார் என்பதே பொருத்தமானது.*

*இறைவனை அடையும் வரை முதியோரையும் நோயுற்றோரையும் விட்டு அகலாத தீவிரம் அவர்களிடம் இருந்தது.*

*செவ்விந்தியர் அல்லது இண்டியன்ஸ் அல்லது எஸ்கிமோ என்றழைப்பதை இன்று இழிவாக கருதி தம்மை முதற் குடிகள் என்றழைப்பவர்கள் அன்று அமைதியை தேடிய பொழுது கடவுள் புகுந்தது நம்பிக்கையின் அடிப்படை யில்.*

*எதன் மூலம் வாழ்ந்தனரோ அதனை வணங்குவதை வழக்கமாக்குவதே*

அவர்களிடம் கைவிடப்படாத அறமா யிருந்தது.

நிலமோடிகளான அவர்கள் ‘குறுக்கு வழியில் செல்வதே தூரம்’ என்பதனை தெய்வ வாக்காக கருதினர்.

அந்த ஊரோடிகள் கண்டதையும் வழிபட்டனர். கண்ட கண்ட இடமெல்லாம் சேவித்தனர்.

அவர்களிடமிருந்த சுமார் 800 இனக்குழுக்களும் (Tribes) விதம் விதமாகவே கும்பிட்டனர். சூழலுக்கு ஏற்பவே பிரார்த்தித்தனர்.

அவர்கள் நெருப்பையும் நீரையும் மண்ணையும் வணங்கினர்.மரம் செடி கொடிகளை துதித்தனர்.

பருவத்துக்கேற்ப பயிரிட்டு பக்தி செலுத்தினர்.

அந்த மக்கள் பாம்புகளை தொழுதிட அவை மேலும் நெளிந்தன.

அவர்களிடம் வானில் தவழும் மேகங்கள் தரையில் வழிந்தோடிய நீர் என பொதுவாக இயற்கையின்

*ஒவ்வொரு அம்சத்திலும் சக்தியை கண்ட மென்மையான தனி வழிபாடுமிருந்தது.*

*எருமை மாடுகளை கொண்று அதன் எந்தவொரு பாகத்தையும் வீசிவிடாமல் துடிக்கத்துடிக்க உண்டால் எவ்வித சங்கடங்களும் வராது என நம்பிய உக்கிரமான கூட்டு வழிபாடுமிருந்தது.*

*சமவெளிமக்கள் (Plains), இறொக்குவா மக்கள் (Iroquoian Nations), வட வேடுவர் (Northern Hunters), வட மேற்கு மக்கள் (Northwest Coasters), அல்கோன்கிய குடிகள் (Algonkians), பீடபூமி மக்கள் (Plateau People) என வாழ்ந்த நிலப்பகுதிகளைக் கொண்டு அவர்களுக்குள் ஆறு பிரதம பிரிவுகள் இருந்தன.ஆனால் வணக்க முறையோ பல்வேறாக திகழ்ந்தன.*

*வெவ்வேறு கடவுள் வடிவங்களுக்கு ஒரே பெயர்!*

ஒரே கடவுள் உருவத்துக்கு
வித்தியாசமான பல பெயர்கள்!

உத்தியோகம் அருளும் கடவுள்
Utakke· காகக் கடவுள் Coyotte என
பல பெயர்களில் பல கடவுள்கள்!

ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இவை
சகஜமாயிருந்துன. அவர்களின்
வேண்டுதல்களை அவை நிறைவேறின.

தீ (Thee),சாஸ்தா(Shstha),மயன்
(Mayan),லோகா(Loga),மாலா(Mala),
மேகலா(Mekala) போன்ற எமக்கும்
பரிச்சயமான இறை பெயர்கள்
உள்ளிட நூற்றுக்கும் மேற்பட்ட
பெயர்களுடன் தெய்வத்தை அவர்கள்
போற்றினர்.

படைக்கும் கடவுள்,கலாச்சார
கடவுள்,நீத்தார் கடவுள்,இராட்சத
கடவுள்,இயல்பான கடவுள்,அழிக்கும்
கடவுள் என பல வடிவங்களில்
கடவுளை ஆண் உருவத்திலும் பெண்

உருவத்திலும் கண்டனர்.அருவ வழிபாடும் அவர்களிடம் இருந்தது.

34 தொன்மவியல்கள் (mythology) அல்லது புராணங்கள் அவர்கள் வழிபாட்டு முறைக்கு சான்று பகர்கின்றன.

அறுவடை செய்த சோளத்தை இறைவனுக்குப் படைப்பது அவர்களிட மிருந்த பண்டிகைகளில் ஒன்றாகும்.ஒரு பிரிவினரான இன்காக்கள் நீத்தார் வழிபாட்டிற்கு முக்கியத்துவமளித் தனர்.

அவர்களது புத்தாண்டு நாளான மர்கா-அயு என்பது கல்லறைகளுக்குச் சென்று வழிபடும் நீத்தார் நாளாக இன்றும் பேணப்படுகின்றது

கனடாவில் தற்பொழுது ஒரு கோடி முதற்குடி மக்கள் வாழ்கின்றனர்.

ஆதியில் அவர்களிடம் 150 மொழி வழக்கும் வழிபடும் வழிகளும் இருந்தன! அவற்றை வட்டார வழக்கில்

*கணக்கிலெடுத்தால் சுமார் 750 முதல் 850 வரை தேறும்.*

*அவர்களிடம் சமயத்தைத் தோற்று வித்தவர்கள் என்று எவருமில்லை. அல்லது வழிபடும் முறையை நெறிப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ அமைப்புகளும் எதுவுமில்லை.*

*ஐரோப்பியர்கள் அவர்களது மண்ணை அபகரித்தபோது - ஆக்கிரமித்தபோது அவர்களது வழிபர்டும் சிதைந்தது.*

*இங்கிருந்த அப்பாவிகளின் தொன்மம் அங்கிருந்து வந்த அப் - பாவிகளின் வன்மத்தில் சிதிலமுற்றது.*

*நாடு விட்டு நாடு வந்தவர்களால் நாட்டிலிருந்த தெய்வங்கள் விரட்டப்பட்டன!*

*மதம் பிடித்தவர்கள்:நாடு பிடித்தார்கள்.*

*15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரோமன் கத்தோலிக்கம் முதன்முறை யாக கனடாவில் மண்டியிட்டது.*

*அதுவரை நின்றும் இருந்தும் கிடந்தும் இஷ்டம் போல் வணங்கியவர்கள் முழங்காலிட வற்புறுத்தப்பட்டனர்.*

*அதற்காக அத்தனை சிலுவைப் பாடுகளையும் சுமக்க வலியுறுத்தப் பட்டனர்.*

*சொந்த மண்ணில் வாழ வழியற்றுப் போனவர்கள் மதம் மாற்றுவதற்காக கனடாவின் முதற்குடி மக்களை கோரமாக வெட்டிக் குரூரமான கொலைகளை பெருமளவில் செய்தனர்.*

*மலை போல் குவிந்த பிணங்கள் மத்தியில் கொலையாளிகள் கும்பல் ஆக்ரோஷமாக ஆடி ஆரவாரிப்பது அன்றாட வழமையாக நெடுங்காலம் நீடித்தது அன்றைய சரித்திரம்.*

*அண்ணளவாக இரண்டு லட்சம் பிள்ளைகளை கதறக்கதற பெற்றோரிட மிருந்து பலவந்தமாகப் பிரித்து மூன்று நான்கு வருடங்கள் தொலை தூர விடுதிகளில் அடைத்தது ரோமன் கத்தோலிக்க மத போதனை.*

*சாவுக்கு பயந்து சாகாதவரை காலா காலத்துக்கும் நினைவு கூர்வதற்காக சாவுக்குப் பயந்தவர்கள் சாகடிக்கப் பட்டனர்.*

*மனிதகுல மீட்புக்காக இரத்தம் சிந்திய தேவகுமாரன் ஜேசுபிரானின் நாமத்தின் மீது கூறு கூறாக அறுக்கப்பட்ட செவ்விந்தியரின் இரத்தம் சிதறியது.*

*பரமபிதா பரமண்டலத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்க 1610 ம் ஆண்டு நியூபவுண்லாந்தில் கட்டப்பட்ட முதலாவது றோமன் கத்தோலிக்க தேவாலயம் மூலம் கனடாவுக்குள் கிறீஸ்தவம் நித்தியத்துவம் பெற்றது.*

*இன்று 22 மில்லியன் மக்கள் கத்தோலிக்க திருச்பையின் உறுப்பினராகவுள்ளனர்.*

*சூரியனை வழிபட்ட தமது மூதாதை க்கு பின்னர் சூரியன் தெரியாமல் போன நாட்களே நீண்டதாக முதற் குடிகள் வாழும் பகுதியொன்றுக்கு அண்மையில் சென்றபோது அனல் கக்கினார் ஒரு முதற்குடி மகன்.*

*பிற மதத்தினர் கனடாவிற்குள் பிரவேசிக்க முடியாது என்ற சட்டம் ரோமன் கத்தோலிக்கர்களால் தீவிரமாக அமுல்படுத்தப் பட்டிருந்த காலகட்டத்தில் 1759 ம் ஆண்டு*

*கியுபெக்கில் குடியமர்ந்த பிரிட்டிஷ் ராணுவ உயர் அதிகாரியான ஜெனரல் சேர் பிரட்ரிக் ஹால்டிமன்ட் முதலாவது யூத மதத்தவராக கருதப்படுகின்றார்.*

*அவர் வகித்த பதவி காரணமாக கனடாவில் தங்குவதை தடை செய்ய முடியாமல் போயிற்று.*

*ஆனால் எஸ்தர் பிரான்டியு என்ற யுவதி வாலிபனாக மாறு வேடமிட்டு 1738 ம் ஆண்டு முழுவதும் கனடாவிற் குள் மத மாற்றப்பணியில் ரகஸியமாக இயங்கியுள்ளார் எனவும் அதனால் கனடாவிற்குள் வந்த முதலாவது யூத மதத்தவர் அவர் தான் என்றும் கூறுபவர்களுமுண்டு.*

*கிறிஸ்தவர்களுக்கு யேசுபிரான் எவ்வளவு முக்கியமானவரோ அதே போல் மோசஸ் முக்கியமான தீர்க்கதரிசி யூதர்களுக்கு.*

*பைபிள் கிறிஸ்தவரின் புனித நூல்.தோரா யூதர்களின் புனித நூல்.*

இன்று கனடாவில் 375 000 மக்களை யூத சமுதாயம் கொண்டுள்ளது. அவர் களுக்கான முதலாவது திருச்சபை (Congregation Emmanu-El Synagogue) 1863 ம் ஆண்டு விக்டோரியா பிரிட்டிஷ் கொலம்பியாவில் உருவாக்கப்பட்டு இன்று வரை செயல்படும் அதி பழமைமிக்கது.

1903 ம் ஆண்டளவில் இந்து சமயம் கனடாவில் தோன்றுவதற்கு இங்கு குடிபெயர்ந்த பஞ்சாபியரும் குஜராத்தியரும் காரணமாவர்.

கனடாவின் முதலாவது இந்து ஆலயமாக ஸ்ரீ ஹரி மந்தீர் 1903 ல் வன்கூவரில் அமைந்தது.

ஹரே ராமா ஹரே கிருஷ்ணா ஆலயம் மனிடோபாவில் 1904ல் ஆரம்ப மானது.

தற்பொழுது கனடாவில் தென் இந்திய வழிபாட்டு முறைகளை பின்பற்றும் 126 இந்து ஆலயங்கள் இருக்குமெனின் அவற்றுள் 86 ரொண்டோவில் உள்ளன.

*வடஇந்திய வழிபாட்டு தலங்கள் இவற்றைவிட வேறாக உள்ளன.*

*உதாரணமாக பஞ்சாபியரின் குருத்வாரா மட்டும் 175 உண்டு.*

*வங்காளிகளின் பஞ்சரட்னா ஆலயங்கள் 160 இடங்களில் கிருஷ்ணனின் புகழ் பாடுகின்றன.*

*297200 இந்துக்கள் கனடாவில் உள்ளனர்.*

***இந்து சமயம் இறைவன் ஒருவனே என சொல்லிக் கொண்டாலும் 320 மில்லியன் (320 000 000) கடவுள் உள்ள மதமாக உலகில் ஆராதிக்கப்படுகின்றது என்பது இந்துக்களுக்கே வியப்பளிக்கும் செய்தியாகும்.***

*19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூலியாட்களாக பெருந்தொகையான சீனர்களும் ஜப்பானியர்களும் வந்த பின்பே பௌத்த மதமும் கனடாவில்*

*முதற்தடவையாக புத்தம் சரணம் கச்சாமி கோசமிடத்தொடங்கியது.*

*1905 ம் ஆண்டு ஜப்பானியரால் முதலாவது பௌத்த விகாரை வன்கூவரில் சாதுகளுக்கு சரணளிக்கும் சன்னிதானமாயிற்று.*

*எனினும் 20 நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பௌத்த மதம் வியாபகம் அடையத் தொடங்கிற்று.*

*கனடிய அரசாங்கம் அகதி கொள்கை களில் மாற்றம் செய்ததைத் தொடர்ந்து சீனா ஜப்பான் கம்போடியா ஸ்ரீலங்கா போன்ற நாடுகளிலிருந்து பெருமளவில் மக்கள் புலம் பெயர்ந்ததே இதற்கு காரணம்.*

*இன்று கனடாவில் 300 375 பேர் பௌத்த மதத்தினராக உள்ளனர். அவர்களுக்காக சுமார் 500 அறச்சாலைகள் சேவை புரிகின்றன.*

*கனடாவின் முதலாவது மசூதி 1938ம் ஆண்டு அல் ரஜீத் இறை இல்லம் (Al-Rashid Mosque)என்னும் பெயருடன்*

*எட்மண்டன்ட் அல்பேட்டாவில் அமைந்தது.*

*1871 ஆண்டின் கனடிய குடிசன மதிப்பீட்டின் படி கனடாவில் 13 ஆக இருந்த இஸ்லாமிய மக்கள் தொகை 2015 ஆண்டின கணிப்பின்படி 1,053,945 க்கும் அதிகமாக உயர்ந்தது.*

*கனடாவில் இன்று பலமத வழிபாடுகள் உள்ளன. 2011 ம் ஆண்டு வெளியான கனடா குடிசன மதிப்பு திணைக்கள கணிப்பின்படி அவற்றுள் கிறீஸ்துவம் 76% இஸ்லாம் 2% யூதரிஸம் 1.1% பௌத்தம்1.0% இந்து1.0% என்ற வீதாசாரத்தில் முன்ணணியில் திகழ்கின்றன.*

*கதோலிக்கம் புரட்ஸ்தாந்தம் யூதம் இஸ்லாம் இந்து பௌத்தம் சமணம் கன்பூஸியம் டாவோயிஸம் ஷிந்தோ சீக்கியம் பஹாய் (பாபி) சோறா ஸ்ரியனிசம் என முக்கிய சமயங்களின் பட்டியல் நீண்டாலும் அவற்றின் உட் பிரிவுகள் ஏராளமாகவும் அவற்றைப்*

*பின்பற்று வோர் தாரளமாகவும் உள்ளதையும் காணலாம்.*

*உதிரி மதங்களும் மிகக் குறைந்த அளவில் ஏராளமாக உண்டு.*

*உலகில் இன்று 4200 மதங்கள் மானிடரால் வழிபடப்படுகின்றன.*

*கனடாவின் பூர்வ குடிகள் ஆசியாவிலிருந்து புலம் பெயர்ந்ததாக அபிப்பிராயம் உண்டு.*

*தமிழர்கள் நிறையும் இந்துஆலயங்கள்,*

*கிறிஸ்தவ தேவாலயங்கள்,இஸ்லாமிய*

*மசூதிகள் இங்கு நிறைகின்றன.*

*வரும் பொழுது எந்தெந்த தெய்வங் களுக்கு‘நேர்த்திக்கடன்’ வைத்தனரோ?*

*- யாரறிவர்?*

# *சாயங்கால சந்தோஷம்.*

*தமிழ் ஆண் முதியவர்கள் அனேகமாக சிறு சிறு குழுக்களாக ஒவ்வொரு மாலை வேளைகளிலும் ரொரன்ரோ மாநகரப் பகுதியில் எங்கு ஒன்று கூடுவார்கள் என்பதற்கு பதில் தெரிந்திருந்தாலும் அவர்கள் அங்கு பரகஸியமாவே என்ன கதைக்கின்றார் கள் என்பதற்கு பதில் தெரிவதில்லை.*

*தினம்தோறும் கதைப்பதற்கு புதிது புதிதாய் ஏதாவது இருக்கும் அவர்கள் வெள்ளைமனம் கொண்ட பிள்ளைகள்.*

*பேதமும் போதமும் மங்கினாலும் சாவிலிருந்து தப்பலாம் என முன்னரே முடிவெடுத்திருப்பார்களோ என எண்ண வைக்கும் மாலை வேளைகளின் தொய்யாத தோழர்கள்.*

*மனித சஞ்சாரம் மிகுதியாய் இருக்கும் கடைத் தொகுதிகள்தான் (Shopping*

*mall)) அவர்களுக்கு இமைப் பொழுதும் நீங்காத சாயங் கால சந்தோஷம்.*

*அனேகமாக அங்குள்ள சாப்பாட்டு இடங்கள் (Food court) மாலை நேரங்களில் அவர்களுக்கு சரிப்பட்டு வருமெனினும் அவர்கள் அங்கு வாய் நனைப்பதும் வாடி நிற்பதும் குறைவு.*

*ஒரு மேசைக்கு நால்வர் வீதம் நான்கு அல்லது ஐந்து மேசைகள் அவர்களது ஆளுமைக்குட்படும்.*

*மாலை நான்கு மணி முதல் எட்டு மணி வரை அந்தப்பகுதிதான் அவர்களுக்கு உலகில் மிகமிக விருப்பமான பகுதியாகும்.*

*அங்கு கூடுவதே பாக்கியம் என அவர்கள் கருதுவதால் கருத்துரிமைச் சுதந்திரத்தை பரிபூரணமாக அனுபவிக்கக் கூடிய ஏதாவதொரு வாக்கியம் எல்லோரிடமுமிருக்கும்.*

*பலர் அங்கு ஓய்வூதியம் பெறாது
இங்கு பெறுபவர்கள்.சிலர் அங்கும்
இங்கும் பெறுபவர்கள்.*

*ஊர் உறவு அரசியல் தமிழ்
வானொலிகள் பத்திரிகைகள் என
பலதும்பத்தும்தான் பேசுபெருட்கள்.*

*அரைகுறையாக அங்கங்கள் தெரிய
அவர்களைத் தாண்டி அசைந்து சென்ற
கறுப்பின பெண் ஒருத்தி மீது வாலிப
சிந்தனை இன்னமும் குன்றாத ஒரு
சிலரது பார்வை மொய்த்ததும்
அவர்களது பேச்சு இயல்பாகவே
இச்சை மீது திரும்பியதும் ஒரு முறை
அவர்களை கடக்க நேர்ந்ததில்
தற்செயலாக என் காதில் விழுந்த
அந்த நிமிஷத்து மன நிலை
சுவாரஸிய மூட்டியதில் என்னை அங்கு
அருகமர்ந்து அவதானிக்க வைத்தது!*

*ஊர் உலகு பற்றி வம்பு தும்பு
மில்லை.தெரிந்தவர் தெரியாதவர் பற்றி
புறணியும் இல்லை.புரளியும் இல்லை!*

*அன்று அவர்கள் ஆளுக்காள்*
*இச்சையுடன் பரிமாறிக் கொண்டது*
*இச்சை மருத்துவம் பற்றி.*

*இச்சை என்றால் மனம் சம்பந்தப்*
*பட்டது.அவை ஆசை பிரியம் பற்று*
*காதல் அன்பு போன்றன.*

*ஆனால் உடலுக்கும் இச்சை உண்டு.*

*அவை எண்ணிக்கையில் பதினான்கு.*

*ஏப்பம் அபானவாயு மலம் சலம் தாகம்*
*பசி கொட்டாவி வாந்தி கண்ணீர்*
*தும்மல் இருமல் மூச்சுவாங்கல்*
*விந்தணுவெளியேறல் தூக்கம் என்பன.*

*இச்சைகள் இயல்பான அளவில்*
*இருக்கும் வரை உடல் நன்றாக*
*உள்ளது என்று அர்த்தம்.*

*இவற்றில் ஏதாவது கூடினாலோ*
*குறைந்தாலோ பிரச்சினைதான்.*

*உடல் இச்சைகள் வருவதும் அவற்றைத் தீர்த்துக் கொள்வதும் இயல்பாக நிகழவேண்டும்.*

*வற்புறுத்தி வரவழைத்தலோ நாகரிகம் கருதியோ அல்லது அடுத்தவர் என்ன நினைப்பார் எனக் கூச்சப்பட்டோ இந்த இச்சைகளில் எதனையும் கன நேரத்துக்கு அடக்குவது கூடாது.*

*ஏகப்பட்ட நோய்களில் கொண்டு போய் விட்டு விடும்.ஏதோ ஒரு நாள் ஒரு சமயம் அடக்குவது பிரச்சினையில்லை.*

*இந்த இச்சைகளில் முக்கியமானவை நான்கு.ஏப்பம் அபானவாயு மலம் சிறு நீர்.*

*இவை உடலின் செரிமானத்துடனும் கழிவுகளை நீக்கும் செயற்பாட்டுடனும் தொடர்புடையவை.*

*ஏப்பத்தை அடக்கினால் செரிமான கோளாறுகள் வரும்.*

*அபான வாயுவை இயலபாக வெளியேற விடாமல் அடக்குவது மலச்சிக்கலை உருவாக்கும்.இது தொடர்ந்தால் மூல நோய்க்கு மூலமாகும்.நீடித்தால் நெஞ்சு எரிச்சலும் இருதய நோயும் உபாதை தரும்.*

*மலத்தை அடக்குவதால் தலைவலி வயிற்று வலி கெண்டைக்கால் தசைவலி மூலம் என தொடரும்.*

*சிறுநீரை அடக்கினால் சிறுநீர் 'வாய்காலில்' கல் உருவாகி உயிர் போகிற அளவு வலி வாட்டும். இறுதியில் சிறுநீரகம் பாதிப்புறும்.*

*தாகம் ஏற்படும் பொழுது கண்டிப்பாத் தண்ணீர் குடிக்க வேண்டும்.தலைச் சுற்றல் மயக்கம் உடல் சோர்வு போன்ற தொந்தரவுகளை இதனால் தடுக்கலாம்.*

*பசியைப் புறக்கணித்தால் வயிறு உப்புசம் குடற்புண்கள் வாயுக்கோளாறு*

*என ஏகப்பட்ட தொல்லைகளுக்கு வழிவகுக்கும். சோம்பேறி என நினைத்துவிடுவார்களோ எனப்பயந்து கொட்டாவியை அடக்குவது இருதய நோய் வருவதற்கு உற்சாகமாகிவிடும்.*

*உடலுக்கு ஒவ்வாத பொருட்களை உண்டுவிட்டால் வருவது வாந்தி. இதை அடக்குவதால் காய்ச்சல் வரும் உடம்பு வீங்குவது வரும்.தோல் நோய்கள் வரும்.*

*கண்ணீரைக் கட்டுப்படுத்துபவர்களைப் பார்த்து கண்வலி கண்சிமிட்டும்.மூக்கு ஒழுகும்.*

*தலைவலி கழுத்து வலி சைனஸ் நெஞ்சு வலி போன்றன பீடிப்பது தும்மலை இருமலை மூச்சுவாங்கலை அடக்குவதால்.*

*ஆண்மையை நிரூபிப்பதாக நினைந்து விந்தணுவை வெளியேற தாமதமாக்கு பவர்கள் பிறப்புறுப்பில் வலியையாலும்*

*ஆண்மையிழப்பாலும் சிறுநீரக கோளாறாலும் பின்னர் சோர்வடைவர்.*

*தூக்கத்தைத் தொலைப்பது அசதியாலும் உடம்பு வலியாலும் துக்கப்படுவர்.*

*உடல் இச்சைகளை கட்டுப்படுத்தக் கூடாது என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மன இச்சைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது.*

*காமம் குரோதம் பேராசை பொறாமை கர்வம் வெறுப்பு போன்ற பொல்லாத இச்சைகள் அவை.*

*அவர்களது சாயங்கால சந்தோஷம் வெறுமனே 'சாயும்கால' சந்தோஷம் அல்ல.*

*வீட்டுக்குள்ளிருக்கின்ற கூட்டுக்குள் குறுகிக் கொள்ளாத குதுகலம் நிறைந்தது!*

# *எதிர்காலத்தை எதிர்பார்ப்பவர்கள்.*

*வருங்காலம் நிகழ்காலம் கடந்த காலம் என்பவை பற்றி நன்கு அறிந்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம்.கைரேகை ஜாதகம் முகநாடி மூலம் பிரபல சோதிட விற்பன்னர் நடந்தவற்றையும் கூறுவார். நடக்கஇருப்பதைப்பற்றியும் கூறுவார்.*

*எனவே அவரை சந்திப்பது குறித்துச் சிந்தியுங்கள்.*

*கனடாவில் கோடையில் பெருவாரி யாகக் காணப்படும் இந்த வகையான விளம்பரங்கள் தமிழருக்கு மட்டுமே உரித்தானவை அல்ல.*

*எதிர்காலத்தை எதிர்பார்ப்பவர்கள் நிறைந்த நாட்டில் ஆருடம் பார்க்கும்*

*ஆர்வலர்கள் அனைத்து மொழி களிலும் உள்ளனர்.*

*வாழ்வுப்பாதை அகலமானதா? அல்லது அவலமானதா? என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் ஆவல் இன மத மொழி கோட்பாடு களை கடந்து அனைவருக்கும் பொதுவானது.*

*2010 உலக கோப்பை கால்பந்து போட்டியில் வெற்றி பெறப் போவது யார் என ஆருடம் கூறியதில் உலக புகழ் பெற்றது பிரபல ஜோதிடர் 'உலக ஜோதிட மணி' ஆக்டோபஸ் போல் (Octopus Paul) தானே!*

*இறுதிப் போட்டியில் வென்று உலகக் கோப்பையை கைப்பற்றுவது ஸ்பெயினா? நெதர்லாந்தா? என்ற உலகமகா எதிர்பார்ப்புக்கு ஆக்டோபஸ் போல் சரியாக நிமித்தம் சொன்னது போலவே 1-0 என்று*

*ஸ்பெயின் வெற்றியீட்ட - உலகம் பிரமிப்புடன் அந்த ஆக்டோபஸை பார்த்தது!*

*ஜேர்மனியின் ஓபர்ஹாசென் நகரில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு ஆறு போட்டிகளின் முடிவையும் அது செவ்வனே கணித்துப் புகழீட்டியது.*

*ஆக்டோபஸ் சாத்திரம் 2010 வருட கோடை கால பிற்பகுதியில் கனடாவிலும் தமிழ் தவிர்ந்த பிற சமூகங்களின் பணத்தில் நீந்தி விளையாடியது.*

*தண்ணீர் நிறைந்த தொட்டியில் இரண்டு சிறிய பிளாஸ்டிக் தொட்டிகள் வைக்கப்பட்டன.*

*அவற்றில் ஆருடம் கேட்பவருக்கு நன்மையா? தீமையா? என்ற தகவல் வரையப்பட்டிருந்தன.*

*அத்துடன் ஆக்டோபஸ் விரும்பும் ஒரேவகை உணவும் வைக்கப்பட்டது.*

*இரையைத் தேடும் அளவுக்கு ஓரளவு பசி ஏற்படுத்திய பின்பு அந்தப் பெரிய தொட்டிக்குள் ஆக்டோபஸ் இறக்கிவிடப்பட்டது.*

*தண்ணீர் தொட்டியில் வலம் வந்தபடி இரையைத் தேடிடும் அது இரு சிறிய தொட்டிகளிலும் நன்மை என குறித்த அல்லது தீமை எனக் குறித்த தொட்டிகளில் எதனைத் திறந்து உள்ளே புகுந்து இரையைச் சாப்பிடுகின்றதோ அதே பலன் நடக்கும் என்பதே ஆக்டோபஸ் சோதிடம்.(Octopus astrology)*

*கதையோடு கதையாக - நீராளி, சாக்குக்கணவாய், சாக்குசுருளி, சிலந்தி மீன், பேய்கடம்பான், எட்டுக்காலி போன்றவற்றால்*

*ஆக்டோபஸ் தமிழில் குறிப்பிடப் படுவதற்கும் சாத்திரத்திற்கும் சத்தியமாய் எவ்வித சம்பந்தமும் கிடையாது.*

*திருமணத்திற்கேபொருத்தம் பார்க்காத மேற்குலக நாகரீகம் அதிர்ஷ்ட லாப சீட்டு வாங்குவதற்கு நிமித்திகரை நாடிடும் விநோதம் ஊரறிந்த உண்மை.*

*கனடாவின் நளைய நம்பிக்கைகள் பல வடிவங்களில் 'மென்ஸியில்' முடிவுறும் பல பெயர்களில் விதியை நம்பி வீணாகிப்போகும் மனிதருக்காக விழி விரித்து வழி நெடுக காட்சி தருகின்றன. மென்ஸி என்றால் வருவதுகூறும் கணிப்பு என்ற அர்த்தமுள்ள கிரேக்கச் சொல்.*

*பிறந்த குழந்தையின் தலை அமைப்பை வைத்து குறி சொல்லல் ஒரு வகை சாத்திரமாம். அதற்குப்*

*பெயர் அம்னியோமென்ஸி.*

*(Amniomancy)*

*தானியங்களை ஏதேச்சையாக சிந்தவிட்டு தானியங்கள் சிதறுண்ட பாங்கை வைத்தும் குறி சொல்பவர்கள் இங்குளர். அலெக்ஸ்ட்ரியோமென்ஸி (Aleuromancy) என அவர்கள் அழைக்கப்படுவர்.*

*வேட்டைக்கு செல்ல முன் ஓநாய்களின் நடமாட்டத்தை அவதானித்து ஆருடம் கூறினராம் அநாதியில் செவ்விந்தியர்.*

*அதுவே நவீனமயமாக்கப்பட்டு கணணியில் ஓநாய்களை ஓடவிட்டு லைக்கோன்தெரெபி (Lycanthropy) என்ற பெயர் பலகை காணப்படும் இடங்கள் தற்பொழுது சொல்கின்றன.*

*பறவைகள் பறக்கும் விதத்தை வைத்து என்ன சொல்லலாம் என*

ஏங்குகின்றீர்களா? அதற்கும் சோதிட விற்பன்னர் ஆர்னித்தோ மென்ஸி (Ornithomancy)என்று பெயரிட்டுள்ளனர்.

நூல் அல்லது கம்பிமுனையில் கட்டப்பட்ட சாவிக்கொத்தானது பக்கவாட்டில் ஆடும் விதத்தை வைத்து குறி சொல்வது கீலிடோ மென்ஸி.(Cleidomancy)

தீச்சுடர் எரியும் விதத்தை வைத்து சொல்லப்படுவது பைரோமென்ஸி (Pyromancy)என்று அழைக்கப்படு கின்றது.

பளிங்கினால் செய்யப்பட்ட பந்தினை உற்றுநோக்குவதன் மூலம் பலன் சொல்வது ஸ்க்ரியோலஜி.(Scryiology)

நீர் கிண்ணத்தில் தொடர்ச்சியாக மூன்று கற்களை போட வைத்து அதனால் ஏற்படும் அலைகளை பார்ப்பது வெறும் வேடிக்கை

*விளையாட்டல்ல.ஹைட்ரோமென்ஸி (Hydromancy) என்று நாமகரணம் சூட்டப்பட்டு அதுவும் சோதிட மாகின்றது.*

*காலையில் விழிக்கும் பொழுது காதில் விழுந்த முதல் வார்த்தையை அப்படியே பதிவு செய்து அதன் மூலம் பலன் கூறுவது கொட்டாவி என்றா கூறுகின்றீர்கள்! அதுதான் இல்லை· அதுவும் சோதிடம்.*

*அது க்ளிடோனிஸம். (Cledonism)*

*வில்லிலிருந்து எய்த அம்புகள் பறக்கும் விதத்தையும் முடிவில் அவை குத்தி நிற்கும் நிலையையும் வைத்து சாத்திரம் பார்ப்பதும் செவ்விந்தியர்களிடமிருந்து வந்ததல்ல.*

*பிலோமென்ஸி(Belomancy) என்ற பெயரில் உலகம் இங்கு கொண்டு வந்தது.*

*மனதில் தோன்றும் விநோதக் கணக்குகளை கூட்டிக்கழித்து சொல்வது அரித்தோமென்ஸியைத் (Arithomancy) தவிர வேறென்றில்லை.*

*காற்று விசையால் இயங்கும் திசைகாட்டிக் கருவியின் உச்சியி லுள்ள சேவல் பொம்மையானது எந்தத் திசையை நோக்கித் திரும்பியுள்ளதோ அதை வைத்து யாராவது குறி சொன்னால் அவர்கள் விவசாயியாக இருக்க வேண்டும் என்றில்லை.அலெக்ஸோ ரோமான்டியா (alectromancy) தெரிந்தவர்களாகவும் இருக்கலாம்.*

*கொதி நீரில் மெழுகைப் போட்டு அவை ஒரு கணத்தில் ஏற்படுத்தும்*

உருவங்களை வைத்து சாத்திரம் சொல்கின்றனர் சிரியோமென்ஸி யினர் (Ceromancy)

ஆட்டின் தோல் எலும்புகளை நெருப்பில் வாட்ட வரும் சிறு விரிசல்களை வைத்து ஸ்கேபுலோ மென்ஸி (Scapulomancy) என்ற பெயருடன் ஆருடம் கூறுபவரும் இங்கு உள்ளனர்.

மனித உடலில் காணப்படும் மச்சங்கள் மற்றும் தழும்புகள் ஆகியவற்றை வைத்து ஆருடம் கூறுவது தமிழர்க்கு ஒன்றும் புதிதானதல்ல.

எவ்வித மாறுதலுமின்றி அது கூட இங்கு மெலோமென்ஸி (moleomancy) என்ற பெயரில் சோதிடமாகின்றது.

கனடாவிலோ அல்லது உலகின் இதர பகுதிகளிலோ நடைபெற்ற

*சம்பவம் ஒன்றினை ஒரு பந்தியில் கூறி அதற்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்களை வெவ்வேறு பந்திகளில் தெரிவித்து எதனை ஏற்புடையதாக ஒருவர் ஏற்கிறாரோ அதற்கேற்ப பலன் கூறல் உளவியல் சோதிடமெனப்படுகின்றது.*

*ஆண்களுக்கான மச்ச பலன்:*
*புருவங்களுக்கு மத்தியில் - நீண்ட ஆயுள். நெற்றியின் வலப்பக்கம் - தனயோகம்.வலது புருவம்- மனைவியால் யோகம்.வலது பொட்டு(நெற்றி)-திடீர் அதிர்ஷ்டம்.வலது கண்- நண்பர்களால் உயர்வு.வலது கண் வெண் படலம் - புகழ் ஆன்மீக நாட்டம்.இடது புருவம் - ஏற்ற இறக்கம் செலவாளி. மூக்கின் மேல் - சுக போக வாழ்க்கை.மூக்கின் வலது புறம்- நினைத்ததை அடையும் அம்சம்.மூக்கின் இடது புறம்- கூடா நட்பு பெண்களால் அவமானம்.*

*மூக்குநனி- ஆணவம் பொறாமை.மேல் கீழ் உதடுகள்-அலட்சியம் காதல் வயம. மேவாய்(உதட்டின் மேல் பகுதி)- செல்வாக்கு இசை கலைத்துறை ஈடுபாடு. வலது கன்னம்-வசீகரம் தயாளம். இடது கன்னம்- ஏற்றத்தாழ்வு.வலது காது நுனி- கண்டம். இடது காது நுனி- தகாத சேர்க்கை அவமானம். காதுகளின் உள்ளே- பேச்சாற்றல் திடீர் யோகம்.தொண்டை- திருமணத்தின் பின் யோகம்.கழுத்தின் வலது புறம்- சொத்து சேர்க்கை ஆடம்பர வாழ்க்கை. இடது மார்பு- ஆண் குழந்தைகள் பெண்களால் கவரப்படல்.வலது மார்பு- பெண் குழந்தைகள் அதிகம் அன்பு மிகுந்தவர். வயிறு- பொறாமை தகுதிக்கு மீறிய ஆசை.அடி வயிறு- அதிகார ஆடம்பர வாழ்க்கை.புட்டம்- அந்தஸ்து செல்வச் செழிப்பு.*

பெண்களுக்கான மச்ச பலன்.
நெற்றி நடுவே-புகழ் பதவி
அந்தஸ்து.நெற்றி வலது புறம்-
தைரியம் பணிவு இல்லாத
போக்கு.நெற்றி இடதுபுறம்- அற்பகுணம்
முன்கோபம்.மூக்கின்மேல்- செயல்
திறன் பொறுமை.மூக்கின் இடதுபுறம்-
கூடா நட்பு அவமானம். மூக்கின்நுனி-
வசதியான வாழ்க்கை திடீர் ஏற்றங்கள்.
மேல் கீழ் உதடுகள்- ஒழுக்கம்
உயர்ந்த குணம். மேல்வாய்- அமைதி
அன்பானகணவர். இடது கன்னம்-
வசீகரம் விரும்பியதை அடையும்
போக்கு.வலது கன்னம்- படபடப்பு ஏற்ற
இறக்கமான நிலை.வலது கழுத்து –
பிள்ளைகளால் யோகம் நாக்கு- வாக்கு
பலிதம் கலைஞானம்.கண்கள்-
கஷ்டநஷ்டம்.இடது தோள்-சொத்து
சேர்க்கை தயாளம்.தலை-
பேராசை.தொப்புளுக்கு மேல்-
யோகமான வாழ்க்கை.தொப்புளுக்கு
கீழ்-பொருள் நஷ்டம் மன

*அமைதியின்மை.தொப்புள்-ஆடம்பரம் படாடோபம். வயிறு-நல்ல குணம் நிறைவான வாழ்க்கை.அடிவயிறு- ராஜ யோகம் உயர் பதவி.இடது தொடை-தடுமாற்றம்.வலது தெடை-ஆணவம். புட்டம்-சுக போக வாழ்க்கை வல்லமை.*

*தமிழர்க்கு பரிச்சயமான காண்டம் பார்ப்பது அல்லது நாடி வாக்கிய ஜோதிடம் இங்கும் சந்தைப்படுத்தப் படுகின்றது.*

*அவற்றின் ஆதார ஓலைச்சுவடிகள் இந்திய மொழிகளில் இருப்பதாலும் சரளமான ஆங்கில அறிவு அவற்றை வாசிப்பவர்களுக்கு இல்லாததிருப்ப தாலும் ஏனைய மொழி பேசுவோரிடம் அவை விலை போவதில்லை.*

*ஆண்களின் வலது கை பெருவிரலின் ரேகையை அல்லது பெண்களின் இடது கை பெருவிரலின் ரேகையை மூலமாக வைத்து முதலில்*

*பொருத்தமான ஓலை சுவடிகளை சேமிப்பு களஞ்சியத்தில் இருந்து தெரிவு செய்வர்.*

*அதற்கு அனுசரணையபக ஆம் அல்லது இல்லை என்று பதில் சொல்லக்கூடிய சில கேள்விகள் சரியான ஓலை கிடைக்கும் வரை கேட்கப்படும்.*

*உதாரணத்திற்கு பெயரின் முதல் எழுத்து உயிர் எழுத்தா? உயிர்மெய் எழுத்தா? கடை எழுத்து மெய் எழுத்தா? அரிச்சுவட்டில் 3 வது வரிசையில் ஆரம்பிக்குமா? போன்றன.*

*கேட்பவரின் விபரங்கள் அனைத்தும் பின்னர் ஓர் ஓலையில் இருந்து வாசிக்கப்படும்.*

*பெயர் வயது பிறந்த திகதி இராசி பெற்றோரின் பெயர் மனைவி அல்லது*

*கணவன் பெயர் பிள்ளைகளின் பெயர் போன்ற பல தகவல்கள் அசத்தும்.*

*12 காண்டங்களையும் இதர 4 தனிக் காண்டங்களையும் கொண்டதாக ஒருவரது வரலாறு அமையும்.அதில் தேவையானதை தெரிவு செய்வர்.*

*முதலாவது காண்டம் வாழ்வின் பொதுப்பலனை கூறும். குடும்பம் கல்வி செல்வம் ஆகியவற்றை இரண்டாவதும் உடன் பிறப்புக்கள் பற்றி மூன்றாவதும் வீடு வளவு வாகனம் போன்றவற்றை நான்காவதும் கொண்டிருக்கும்.பிள்ளைகள் பற்றி ஐந்தாவது காண்டமும் விரோதிகள் வியாதிகள் கடன் வழக்கு தொல்லை பற்றி ஆறாவதும் எடுத்துரைக்கும். திருமணம் வாழ்க்கைத்துணை ஆகியவற்றை ஏழாவதிலும் உயிர் வாழும் காலம் ஆபத்து விபத்து போன்றவற்றை எட்டாவதிலும்*

காணலாம்.தந்தை குரு செல்வம் யோகம் பற்றி ஒன்பதாவது கூற தொழில் பற்றி பத்தாவதும் இலாபங்கள் பற்றி பதினோராவதும் காட்டி நிற்கும்.செலவு அடுத்த பிறப்பு மோட்சம் போன்றவற்றை பன்னிரண்டாவது கூறி முடிக்கும்.

கர்மவினை பற்றியும் அதற்கான பரிகாரம் பற்றியும் கூறுவது தனிக்காண்டங்களில் முதலாவதான சாந்தி காண்டம்.மந்திரம் யந்திரம் பற்றி இரண்டாவதான தீட்சை காண்டமும் மருத்துவம் பற்றி மூன்றாவதான ஔஷத காண்டமும் காட்டிடும்.வாழ்க்கையில் வந்து போகும் திசைகள் பற்றியும் அவற்றின் பலன்கள் பற்றியும் கூறி நிறைவு செய்வது திசாபுத்தி காண்டம்.

கனடாவில் தற்பொழுது முன்ணணிக்கு வந்து கொண்டிருப்பது பெங் சூயி (Feng shui) என்ற சீன சாத்திரமாகும்.

*இந்த திடீர் பிபலத்துக்குக் காரணமும் உண்டு.*

*இங்கிலாந்து இளவரசர் வில்லியத்திற்கும் அவரது காதலி கேத் மிடில்டனுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெறும் என்று முன்பாகவே அது கணித்திருந்தது.*

*இந்தியாவின் வாஸ்து சாஸ்திரத்திற்கு ஒப்பானது பெங் சூயி.*

*திறந்த கூண்டிலிருந்து கிளி நளினமாய் மெள்ள நடை பயின்று வெளியே வந்து அடுக்கப்பட்ட சீட்டுகளை அங்குமிங்கும் புரட்டி அதிலிருந்து ஒரு சீட்டை அலகினால் கவ்வி சோதிடன் கையில் கொடுக்க (Parrot fortune-telling) நல்ல காலம் எப்போ வரும் என அவன் கூற 'வெள்ளை' உள்ளங்கள் அதனை கேட்கும் காலம் என்றாவது கனடாவிற்கும் பறந்து வரும்.*

## வாழும் சுவர்கள்.

*முன்பு ஒரு காலத்தில் ஊருக்குள் நம்ப முடியாத செய்திகளை நம்ப வைத்ததில் தெருச்சித்திரங்களுக்கும் பங்கிருந்தது.*

*பாடசாலை கழிவறைகள் தொடக்கம் தெரு மதகுகள் சிதிலமடைந்த மதிற் சுவர்கள் மயானமண்டபங்கள் போன்றன கரித்துண்டுகளாலும் பச்சிலைகளாலும் கிறுக்கரின் களமாகி கிறங்கடித்தன.*

*அசுத்தமான இடங்கள் அவர்களுக்கு தடையாக இருந்ததுமில்லை.*

*அசிங்கமான வார்த்தைகளுக்கு அவர்கள் தடை விதித்ததுமில்லை.*

*வியப்பு – திகைப்பு – தவிப்பு – முறைப்பு – வெறுப்பு – கடுப்பு என பல உணர்வுகள் பாதிப்படைந்தவர்களிடம் மட்டுமல்ல அவற்றை பார்த்தவர்களிடமும் ஏற்பட வேண்டும் என்ற கற்பனையுடன் அந்த*

*கிறுக்கர்கள் அநாமதேயமாகவே சிரித்தார்கள்.*

*அந்த கிராமிய நினைவுகள் பலருக்கு இப்பொழுதும் மங்கலாக ஞாபக இடுக்குகளில் அப்பியிருக்கும்.*

*பரவலாக ஆசியாவில் மட்டுமே இவ்வகை கிறுக்கல்கள் வம்பை வதந்தியாக்கிட ஏனைய கண்டங்களில் அரசை விமர்சித்தும்,விழிப்புணர்வை ஏற்படுத்தியும்,ரகஸிய தகவல்களை பகிரங்கமாக்கியும்,நாட்டு நடப்புடன் கேலி பேசியும் மனங்களை வெள்ளை அடித்தன. - மன்னிக்கவும் கொள்ளை அடித்தன.*

*அதனால் அங்கெல்லாம் மறைவிடங் களை விட்டு வெளியேறி பொது இடங்களுக்கு வந்து சிரிக்கும் சந்தியாக சாட்சியளிக்கின்றன.*

*தெருச் சித்திரம் (STREET ART) வரைகலை (GRAPHIC) கிறுக்கல் (GRAFFITI) சுவரோவியம் (MURAL) போன்ற பல பெயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து தற்காலத்தில் வாழும் சுவர் ( LIVING WALL) என்ற புதுப் பெயர் பொலிவு பெறுகின்றது.*

*மனங்களை கிறுக்கியவர் மறைந்தார் என 2015 ம் ஆண்டு இணையத்தில் யாரோ கிறுக்க பாங்ஸியின் பெயர் சொல்லியே எக்கச்சக்கமான குறிப்புகள் மிகவும் குறுகிய நேரத்தில் குவிந்தன.*

*பாங்ஸி என்றால் யார் என அறியும் ஆவல் பலரின் தூக்கத்தைத் துரத்தியது.*

*மறுநாள் பார்த்த பொழுது அச்செய்தி தவறு என்ற குறிப்புடன் முன்னையது வாபஸ் பெறப்பட்டிருந்தது.*

*எனினும் கடைகண் பார்வையுடன் மட்டும் எவரையும் கடந்து போக விடாதவர் - பாங்ஸி!*

*மேற்குலகில் குறிப்பாக இங்கிலாந்தில் பல காலமாக வாழும் சுவர்களுடன் பாங்ஸி (BANKSY) என்ற பெயரும் விழிக்கும் வீதிகளில் சுவர்களுடன் வாழ்கின்றது.*

*அவர் சுவர்களில் புதுமை புகுத்தும் சைத்திரிகர்மட்டுமல்ல தீவிர அரசியல் ஈடுபாடு உடையவர் திரைப்பட இயக்குனர்.*

*உலகின் பல நாடுகளின் தலைநகரங்களில் பாங்ஸியின் கைவண்ணம் மக்களின் மகோன்னத வரவேற்பு பெற்றுத் திகழ்கின்றது.*

*2010 ம் ஆண்டு உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 100 மனிதர்களில் பாங்ஸியும் ஒருவர் என்றது டைம் சஞ்சிகை.*

*பாங்ஸி என்ற பெயருக்குரியவர் ஆணா? பெண்ணா? அல்லது ஒரு குழுவா? என்பதற்கு ஒரு சிறு தடயம் கூட சிக்காமல் யார் என்பதே தெரியாது சர்வ தேச காவல் துறை அன்று அல்லாடிக் கொண்டிருந்தது விசித்திரம்.*

*பாங்ஸியின் தெருச் சித்திரங்கள் வித்தியாசமானவை.*

*சித்தரிக்கும் விதத்தில் சித்தரிப்பதால் அவசர அலுவல்களுக்குக் கூட அசையாதவர்களையும் பரவசத்துடன் பார்ப்பதற்காக பறக்க வைத்துப் பிரமிப்பூட்டுவது பாங்ஸியின் பாணி.*

*ஒரு முறை லண்டன் காவல் துறை சி.சி.ரி.வி (C.C.T.V) கண்காணிப்பு கருவிகளை அவரது சுவரோவியங்களின் புகைப்பட கண்காட்சி நடைபெறவிருந்த மண்டபமெங்கும் பரவ விட்டது.*

*மறு நாள் மண்டப வாசல் மதிற் சுவரில் மிகவும் பெரிய எழுத்துகளில் காவற்துறையை வரவேற்ற வாசகம் ஓர் உலகம் கண்காணிப்பு கமராவின் கீழ் என்றிருந்து பிரமிப்பூட்டியது. - இரவோடிரவாக எழுதிச் சென்றவர் பாங்ஸி.*

*பராமரிப்பதற்கு நிதி பற்றாக் குறை காரணமாக மாநகர சபை சிறாருக்கான விளையாட்டுப் பூங்காக்களை குறைப்பதற்குத் தீர்மானித்த பொழுது PARKING என காணப்பட்ட இடங்களிளெல்லாம் PARK என சுருக்கி A என்ற எழுத்துள் சிறுவர் ஊஞ்சல் கட்டி ஆடுவதாகச் சித்தரித்து எதிர் காலத்தில் வாகன தரிப்பிடங்கள் விளையாடும் திடல்களாகும் என எச்சரித்தார்.*

*இளவரசி டயானாவை மக்கள் மகாராணி என மகுடமிட்டு* BANK OF ENGLAND *என்பதை* BANKSY OF ENGLAND

*ஆக மாற்றிய அவரது சாதுரியத்தால் - தாங்கள் வைத்திருக்கும் பணத்தில் இளவரசி டயானா இருக்கின்றாரா என மக்கள் ஆராய முற்பட புழக்கத்திலிருந்த போலி நோட்டுகளின் பாவனை இல்லாதொழிந்தது.*

*சிறுவன் ஒருவன் வானத்தைப் பார்த்து அழுகின்றான்.மேலே ஒரு வாசகம் - இவனுக்கு லைக் போட எவருமே இல்லை! இது ஊடகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.*

*தண்ணீரில் அரைவாசி மூழ்கியபடி ஒரு வாசகம் சொல்வது நான் உலக வெப்பமயமாதலை நம்பவில்லை.*

*சிறுமி அரவணைத்த வெடிகுண்டு மக்களால் வெடிகுண்டு அரவணைத்த சிறுமியாகவே பார்க்கப்பட்டது. அநியாய உயிரிழப்பால் உறையும் குருதி அப்பாவிப் பொது மக்களின் குருதியாகவே அதனைப் பார்த்தவர் கண்களில் பிசுபிசுத்தது.*

*வெற்றுச் சுவர்களா? அவை போன்ற கொலைக்களங்கள் வேறில்லை என்ற கருத்துடைய பாங்ஸியின் சுவரோவியங்கள் உலகச் சுவர்கள் பலதை உள்ளிழுத்தன.*

*சிவப்பு பலூனை நோக்கி நீளும் சிரியா சிறுமியின் கை (Girl with Baloon) என்ற தெருச் சித்திரம் பிரதி எடுக்கப்பட்டு 1.2 மில்லியன் அமெரிக டாலர் ஏலத்தில் விற்பனையானது.*

*பாதிப்படைந்தவர்கள்தான் முண்டியடித்துக் கொண்டு சுவர் கிறுக்கல்களை பார்ப்பார்கள் என்ற நிலைமாறி பரவசப்படுபவர்கள்தான் முதலில் பார்ப்பார்கள் என்ற மாற்றத்தை தந்தது பாங்ஸியின் வாழும் சுவர் என்பதை காலம் கட்டாயம் சொல்லும்.*

*ஒன்றுக்கும் அஞ்சாத அதன் அலட்சிய கர்வம் அப்பொழுது போற்றப்படும்.*

## *கடவுள் துகள்.*

*நீக்கமற நிறைந்திருப்பவர் கடவுள்*
*என்பதை நிரூபிப்பது போல*
*உலகெங்கும் வெளிவரும்*
*ஊடகங்கள் அனைத்திலும்*
*நிறைந்திருந்தது ஒரு கட்டுரை.*

*அதன் பெயர் கடவுள் துகள்.*

*அறிவியலார்களுக்கு ஆர்வமான*
*தினமாக மட்டுமல்லாது அக் கட்டுரை*
*வெளிவர காரணமாகவும் 2012*
*ஜூலை மாதம் 4 ம் திகதி*
*அமைந்தது.*

*இந்தப் பிரபஞ்சம் தோன்றக் காரணமாயிருந்த பெரு வெடிப்பின் பொழுது ஏற்பட்ட மோதலில் ஒலியைவிட அதிவேகத்தில் சிதறிய நுண்துகள்கள் பின் எந்தச் சக்தியால் இணைந்து மூலக்கூறுகளாக அணுக் களாக கோள்களாக பேரண்டமாக மாறியது என்பதை செயற்கைப் பெரு வெடிப்புச்சோதனை மூலம் நிருபித்த தினம் அத் தினமாகும்.*

*அணுக்களை ஒன்றோடு ஒன்று ஒட்ட வைக்கும் பொருளை கண்டு பிடித்து பிரபஞ்சம் உருவான ரகஸியத்தை அறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது.*

*அணுக்களை மிக வேகமாக மோத விடுவதன் மூலம் பெரு வெடிப்பின் போது ஏற்பட்ட பிரளய சூழலை உருவாக்கி அதன் மூலம் அணுக்களின் ஒட்டுப்பொருளை கண்டறியலாம் என விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.*

*அணுதான் அடிப்படை என்றிருந்த விஞ்ஞானத்தில் துகள் அறிவியல் விரிவுபட ஆகச்சிறியதான அணுவை பிளந்து பிளந்து ஆராய்ந்ததில் புரோட்டனும் நியுட்ரானும் கண்டறியப்பட்டன.*

*அவற்றையும் துளைக்க வெளிப்பட்டது குவாக்.*

*அதனையும் ஊடுருவ எலெக்ட்ரான் தெரியவந்தது.*

*பின்னர் அதுவும் நுணுகி லெப்டன் எனும் நுண் துகள் புலப்பட்டது.*

*ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையத்தில் செயற்கைப் பெரு வெடிப்புச்சோதனைக்காக கோடிக் கணக்கான லெப்டன் நுண்துகள்களை துகள் முடுக்கிகளால் அதிவேகத்தில் மோதவிட்டதில் 1253 எலக்ரோ வாட்ஸ் எடையுடன் ஒரு புதுத்துகள் தோன்றியது.*

*இவ்வளவு பேராற்றல் உள்ளதை இதுவரை காணாததால் அது கடவுள் துகள் ஆகிற்று.*

*அத்துடன் எங்கும் நிறைந்துள்ளது.*

*எதற்கும் ஆதாரமாயுள்ளது.*

*அதைப் பார்க்கவும் உணரவும் முடிவதில்லை என்பதாலும் அது கடவுள் துகள் ஆனது.*

*சுவிட்சலாந்தில் நிலத்தின் கீழ் 574 அடி ஆழத்தில் 27 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்ட சுரங்க ஆய்வகத்தில் செயற்கை முறையில் இந்தப் பெரு வெடிப்பு மேற்கொள்ளப் பட்டது.*

*பிரபஞ்ச இயக்கக் கோட்பாட்டை கண்டறிய 37 நாடுகள் 169 ஆய்வு நிறுவனங்கள் 3000 ஆராய்ச்சியாளர் கள் கிட்டத்தட்ட 50 ஐம்பது வருட காலம் உழைத்தனர்.*

*அகிலத்தை எது படைக்கின்றதோ எது காக்கின்றதோ எது அழிக்கின்றதோ எது அருள்கின்றதோ எது மறைக்கின்றதோ அந்தச் சக்தியே கடவுள் துகள் என்னும் விஞ்ஞானிகள் கடவுளையே கண்டு பிடித்த பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்கின்றார்கள்.*

*ஆகப்பெரியதான அண்டம் உருவான விந்தையை அறிந்ததாக அவர்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றனர்.*

*பிரபஞ்சம் ரகஸியம் அவிழ்ந்ததாக ஆர்ப்பரிக்கின்றனர்.*

*சுமார் 1370 கோடி வருடங்களுக்கு முன்பாக அண்டவெளியில் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதின.*

*பலத்த மோதலால் (Big Bang) நிகழ்ந்த பெரு வெடிப்பால் சிதறிய கோடானுகோடி நுண்துகள்கள்*

*இணைந்திட பிரபஞ்சம் முழுவதும் மெல்லமெல்ல உருவானது.*

சகல இயக்கங்களுக்கும் 16 *நுண் துகள்களே அடிப்படை ஆதாரம் என்பது அறிய வந்தது.அறிவு வந்தது.*

*எனினும் அணுக்களை ஒன்று சேர்க்கும் ஒட்டுப்பொருள் எது என்பது புரியாத கதைக்குள்ளும் புதிரான கதை ஆகியது.*

*இந்த 16 துகள்களும் புலப்படாத ஆற்றலுடன் சேர்ந்து நிறையைப் பெறுகின்றன.*

*அந்த ஆற்றலையும் அதன் புலப்படாத நுண் துகள்களையும் ஆராய்ந்தவர்கள் இருவர்.*

*இந்திய விஞ்ஞானி சத்தியேந்திர போஸ் மற்றும் பிரித்தானிய இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ்.*

*அணுத்துகள் சில எடையுள்ளதாகவும் சில எடையற்றதாகவும் இருக்கக் காரணம் என்ன என அறிந்தால் அதுவே பிரபஞ்ச ரகஸியம் என முதலில் அவர்களே அறிவித்தனர்.*

*குவாண்டம் இயக்கவியலுக்கு அவர்கள் இருவரும் ஆற்றிய அரிய பங்களிப்பை கௌரவிப்பதற்காக கண்டறியாத அந்தத் துகளுக்கு (Higgs Boson) ஹிக்ஸ் போஸன் துகள்கள் என பெயரிட்டனர்.*

*அமெரிக்க விஞ்ஞான எழுத்தாளரான லியன் மக்ஸ் லிடர்மன் என்பவரே கடவுள் துகள் என்ற பெயர் முதன்முதல் வெளிவர காரணமாக அமைந்தவர் ஆவர்.*

*ஹிக்ஸ் போஸன் துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை சிறுமைப் படுத்தும் விதத்தில் தனது புத்தகத்திற்கு நாசமாகப்போன துகள் என்று தலைப்பு வைத்தார்.*

*(THE GODDAMN PARTICLE)*·
*பதிப்பாளர்கள் அதனை THE GOD PARTICLE என மாற்றிட கடவுள் துகள் அவதரித்தது.*

*கடைசியில் கண்டறியாததை கண்டறிந்து விட்டார்கள்.ஆனால் ஆலயத்திலா? ஆய்வு கூடத்திலா? என்பதை கண்டறிய கன காலமெடுக்கும்!*

*மாதர்பிறை கண்ணியானை*
*மலையான் மகளோடும் பாடி*
*போதொடு நீர் சுமந்தேத்தி புகுவார்*
*அவர் பின் புகுவேன் யாதும் சுவடு*
*படாமல் ஐயாறு அடைகின்ற போது*
*காதல் மடப்பிடியேபடு களிறு வருவன*
*கண்டேன்.கண்டேன் அவர் திருப்பாதம்*
*கண்டறியாதன கண்டேன்.-அப்பர்!*

# கௌரவ குடியுரிமை.

*வயது, இனம், மொழி, மதம், பிறப்பிடம் ,*
*இருப்பிடம், தேசம் என்ற பாகுபாடு*
*இன்றி கௌரவ குடியுரிமையை*
*உலகின் பல நாடுகள் வழங்குகின்றன.*

*சாதனை புரிந்தவருக்கான அதி உயர்*
*கௌரவமாக கௌரவ குடியுரிமை*
*ஆராதிக்கப்பெறுகின்றது.*

*உயர்ந்தோர் பெருமையை*
*உலகெங்கும் உவந்து போற்றும்*
*கௌரவ குடியுரிமை - அவர்கள்*
*அகிலத்தில் அடையாளம் தெரியாமல்*
*போகும் அந்நியத்தை அகற்றுகின்றது.*

*கனடிய அரசாங்கமும் வெளி*
*நாடுகளில் உள்ள சாதனைக்குரிய*
*கனடியரல்லாத பிரஜைகளுக்கு*
*மதிப்பீட்டின் அடிப்படையில் கௌரவ*
*குடியுரிமை வழங்கி கௌரவிப்பது -*
*நாகரிகத்தின் நயம்.*

*கனடாவில் கௌரவ குடியுரிமை வழங்கப்பெறும் ஒருவர் அரசின் அதிகாரம் செல்லுபடியாகும் எல்லைகளுக்குட்பட்ட நிலப்பரப்பில் ‘தங்கக் கூடிய’ அடிப்படைத் தகைமைக்கு உரியவராகின்றார்.*

*ஆனால் இந்நாட்டவராக கணிக்கப்படாது வெளியாராகவே இருக்கும் வரை இருப்பர்.*

*கனடா நடுவண் அரசு,மாகாண அரசு,நகராட்சி அரசு என மூன்று நிலை அரசமைப்பைக் கொண்டுள்ளது.*

*கௌரவ குடியுரிமை இந்த நாட்டின் வாழ்வுரிமையை வழங்குமெனினும், பிறப்பின் அடிப்படையிலோ அல்லது இயல்பின் அடிப்படையிலோ பெறப்படும் சாதாரண குடியுரிமை வழங்கும் வாழ்வுரிமையிலிருந்து முற்றிலும் வேறுபாடு உடையது.*

*விசேட தகுதி அடிப்படையில் சத்தியபிரமாணம் செய்யாது கௌரவ குடியரிமை பெற்றவர் கனடாவில் இருக்கும் காலத்தில் இம்மூன்று நிலை அரசுகளினதும் சாதாரண பிரஜைக்குரிய சட்டதிட்டங்களுக்கு அமைவான உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்க முடியாது.*

*அல்லது நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை மறுதலிக்கவோ முரண்படவோ முடியாது.*

*சமூக மரியாதையை உலகெங்கும் வியாபிக்கும் அடையாளமான கௌரவ குடியரிமை ஊடுருவி, ஊடாடி, உறவு கொள்ளும் சுதந்திரத்தை உள்ளூரில் மட்டுப்படுத்தும்.*

*கனடாவில் பிறந்தவராக இருத்தல் வேண்டும் அல்லது வெளி நாடுகளில் பிறந்திருந்தாலோ, சுவீகரிப்பின்*

*பொழுதோ,பெற்றோரில் ஒருவரையாவது கனடா குடியுரிமை பெற்றவராக கொண்டிருத்தல் வேண்டும் அல்லது கனடாவில் தொடந்து 1095 நாட்கள் தங்கியிருந்திருக்க வேண்டும் அல்லது நிரந்தர வதிவுரிமை பெற்றிருக்க வேண்டும் அல்லது அரசகரும மொழிகளான ஆங்கிலத்திலோ பிரஞ்சிலோ உரையாடும்,எழுதும் அறிவு பெற்றிருக்க வேண்டும் என்ற எவ்வித நிபந்தனைகளும் கனடிய கௌரவ பிரஜா உரிமை பெறுபவர்களுக்கு இருப்பதில்லை.*

*எனினும் நிரந்தர குடியுரிமை, வாக்குரிமை,வேலை செய்யும் உரிமை,நிபந்தனைகளின்றி சொத்துக்கள் வாங்கும் உரிமை, அரசிற்கு எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் போன்ற சதாரண குடிமக்களுக்கிருக்கும் முதன்மைகள் எதுவும் இருப்பதில்லை.*

*பூகோளம் பூரிக்க, மேதினி மேம்பட, உலகம் உய்யவென அர்ப்பணிப்பான முன்னுதாரணமான சேவை செய்திருக்கும் பலருள் சிலராக ஆறு பேர் 2020 ம் ஆண்டு வரையில் கனடாவினால் கௌரவ குடியுரிமை வழங்கிக் கௌரவிக்கப்பெற்றுள்ளனர்.*

*சுவீடனைச் சேர்ந்த ராஜதந்திரியான ரவுல் கஸ்டாப் வலன்பேர்க் என்பவருக்கு 1985 ம் ஆண்டு கௌரவ குடியுரிமை வழங்கியது கனடா.*

*இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பொழுது ஆயிரக்கணக்கான யூதர்களை காப்பாற்றிய அருஞ் செயலுக்காகவே இந்தக் கௌரவம்.*

*1947 ம் ஆண்டு ரஷ்யா சிறையினுள் அவர் மரணித்ததாரெனினும் மரணத்தின் பின்னரான கௌரவமாக கனடா இதனை வழங்கியது.*

*ஹங்கேரி, இஸ்ரேல், அமெரிக்கா நாடுகளும் கௌரவ குடியுரிமையை அவருக்கு வழங்கியிருந்தன.*

*தென் ஆபிரிக்காவின் முன்னாள் அதிபரும் இனவெறி எதிர்ப்பாளரும் 1993 ல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான நெல்சன் குஹூலு ரோலிஹ்ஹலா மண்டேலாவிற்கு 2001ம் ஆண்டு கௌரவ குடியுரிமை வழங்கிக் கௌரவித்தது கனடா.*

*எந்தக் காரியத்திலும் அர்ப்பணிப்பும் வேட்கையும் இருப்பின் யாரும் உயரலாம் என்பதற்கு சான்று அவர்.*

*சமநிலை தேடு, கசப்பைமற, கடந்ததை கடந்திடு, எதிரிகளைப் படி, வரவிருப்பதை விரும்பு, எதையும் சாத்தியமாக்கு, அன்புகூர், அதிகாரம் கொடு, உறுதியில் உறுதியாயிரு, அடையாளமிடு என்ற பத்து அத்தியாயங்களும் அவரது வாழ்வுப்*

*புத்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்து வாழ்க்கையாலும் வார்த்தையாலும் அவரிடமிருந்து உலகம் படிக்க வேண்டிய பாடங்களாயின.*

*இத்தாலியில் ரோம் புலோரன்ஸ் கிரேக்கத்தில் ஒலிம்பியா பிரேஸிலில் றியோ டீ ஜெனரோ என்பவற்றின் கௌரவ குடியுரிமையும் மண்டேலா கொண்டிருந்தார்.*

*ஜெட்சுன் ஜம்பேல் ஙவாங் லொப்சாங் யெஷெ டென்சின் கியாட்சோ என்ற பெயருக்குரியவர் - தலாய் லாமா என்ற பெருமைக்குரியவர்.*

*1989 ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசை தனதாக்கியவரான 14ஆவது தலாய் லாமா 2006 ம் ஆண்டு கனடிய கௌரவ குடியுரிமை பெற்றார்.*

*சமாதானம் மூலம் திபெத் தீர்வுக்கும் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் தலாய் லாமா ஆற்றிய அயராத பணியே அவருக்கான நோபல் பரிசையும் கனடிய கௌரவ குடியுரிமையையும் பெற்றுக் கொடுத்தன.*

*அஹிம்சையை ஆதரிக்கின்றேன்.அது மத நம்பிக்கை என்பதால் அல்ல. சாத்வீகம் என்றோ ஒரு நாள் வெல்லும். வன்செயல் தற்கொலைக்கு ஒப்பானது என்ற அவரது கருத்தை அங்கீகரித்திருந்தது கனடிய அரசு.*

*செக்கோஸ்லாவியாவில் பிராக் இத்தாலியில் ரோம் வெனிஸ் பால்மர் பிரான்ஸில் பாரீஸ் ரஷ்யாவில் உக்ரைன் போன்றன தலாய்லாமாவிற்கு கௌரவ குடியுரிமை வழங்கின.*

*மியன்மாரில் மனித உரிமைகளுக் காகவும்,மாற்றத்துக்காகவும்,ஜனநாயகத்*

*துக்காகவும் போராடியதற்காக 1991ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் விருதைப் பெற்றவரான ஆங் சான் சூக்கிக்கு 2007ம் ஆண்டு கனடா கௌரவ குடியுரிமையை வழங்கத் தீர்மானித்தது.கனடிய வெளிவிவகார அமைச்சர் 2012ம் ஆண்டு பர்மா சென்று அப்பொழுதும் அங்கு தடுப்புக்காவலிலிருந்த ஆன் சான் சூக்கியிடம் அதற்கான சான்றிதழை கையளித்தார்.*

*மியன்மாரின் தலைவியான ஆங் சான் சூக்கி அங்கு வாழும் ரொஹிங்கிய பிரிவு முஸ்லீம்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு உடந்தையாக இருந்தார் என 2018 ல் ஐ.நா.சபை பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து வழங்கியிருந்த கௌரவ குடியுரிமையை ரத்துச் செய்தது கனடா.*

கௌரவ பிரஜை என்ற கௌரவத்தை கனடாவில் இழந்த முதலாவது பிரமுகர் ஆன் சான் சூக்கி ஆவர்.

உலகம் பூராவும் உள்ள 15 மில்லியன் இஸ்மாலி முஸ்லீம்களின் இமாம்களில் ஒருவரான ஷா கரீம் அல் ஹுசைனி அகா கான் கனடாவின் கௌரவ கனடிய பிரஜையானது 2009 ம் ஆண்டு.

நபி நாயகத்தின் பரம்பரையில் வந்தவரான அகா கான் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மனிதாபிமான அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றில் ஈடுபாடு உள்ள கோடீஸ்வரராவர்.

ஆப்கானிஸ்தானில் சேவையாற்றிய கனடிய ராணுவத்தினருக்கான வளம்காண் வலைப்பின்னல் அகா கானுக்கு கௌரவ கனடிய குடியுரிமையை ஈட்டிக் கொடுத்தது.

*ஐவரி கோஸ்ட் மாலி உபெக்ஸ்தான் ஸ்பெயினின் கிரனடா இத்தாலியின் சார்டினா கென்யாவின் கிஸ்மு பாகிஸ்தானின் லாகூர் ஆகியவன வற்றின் கௌரவ குடியுரிமையாளர் ஷா கரீம் அல் ஹுசைனி அகா கான்.*

*கனடாவில் கௌரவ குடியுரிமை பெற்றவர்களுள் வயதில் மிகவும் குறைந்தவர் மலலா யூசுப்சாய்.*

*பாகிஸ்தானிய பெண்களின் உன்னதத்துக்காகவும் ,கல்வி மேம்பாட்டுக்காகவும் மலலா யூசுப்சாய் நோபல் விருதையும் ,கனடிய கௌரவ குடியுரிமையையும் 2014 ம் ஆண்டு தனதாக்கினார்.*

*பெண்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்பதில் மலலா காட்டிய தீவிரத்துக்காக - பயங்கரவாதத்திற்கு எதிரான அவளது அறைகூவல் எங்கும் என்றும் ஒலிக்க வேண்டும் என்ற தீரத்துககாக - இஸ்லாமிய நாடுகளின் சமூக அரசியல் கல்வி வேலை உரிமைகளுக்கு பெண்களின்*

*குரலானதுக்காக-ஆணாதிக்க வெறி கொண்ட பழமைவாதிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து பெண்களின் வாழ்வை மீட்க ஆர்ப்பாட்டங்களை முன்னிலைப்படுத்தியதற்காக - நாகரீக சமூகம் பெண்ணினத்துக்கு வழங்கிய உரிமைகளை தடுப்போர் மீது சீற்றம் கொள்ள வைத்ததற்காக - தலிபான்களுக்கு எதிராக உக்கிரமாகப் பேசி உலகை அதிர வைத்ததற்காக*

*நோபல் பரிசு, நவம்பர் மாதம் 10ம் திகதியை மலலா தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம், கனடாவின் கௌரவ குடியுரிமை அந்தஸ்து*

*என்பன மலலா யூசுப்சாயை சென்றடைய காரணங்களாகின.*

*மத்திய அரசே பல நாடுகளில் கௌரவ குடியுரிமையை வழங்கி வருவது கண்கூடு.*

*சில நாடுகளில் உள்ளூராட்சி சபைகளும் மத்திய அரசின் அனுசரனையோடு புதிய குடிவரவாளர்களின் வருகையை*

*அதிகரிக்கவென கௌரவ குடியுரிமை வழங்கும் அதிகாரம் அங்கீகரிக்கப் பெற்றுள்ளன.*

*கௌரவ குடியுரிமை என்பது நாட்டின்பால் ஈர்ப்பையும்,உள்ளார்ந்த விருப்பையும் ஊக்குவிப்பது.*

*வாழும்வரை புதிய நாட்டிற்கு நல்ல குடிமகனாக இருக்க வேண்டும் என்ற ஓர் உந்து சக்தியை ஆழ்மன ஆளுமைக்கு ஊட்டுவது.*

*நிரந்தரமாக வசிக்கத் தீர்மானித்தால் சாதாரண குடியுரிமைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்வதில் முன்னுரிமை வழங்குவது.*

*கௌரவ குடியுரிமை பல நாடுகளிடமிருந்து கிடைக்கலாம். அல்லது பல நாடுகளின் கௌரவ குடியுரிமைகளை ஏககாலத்தில் கொண்டிருக்கலாம்.அதில் சட்டச்சிக்கல் எதுவுமே இருப்பதில்லை.*

*கௌரவ குடியுரிமையை வழங்கிய நாடு மீளவும் அதனைப் பறித்துக் கொள்ளவும் இயலும். அல்லது பெற்றுக் கொண்டவர் அதனைத் துறந்திடவும் இயலும்.*

*வாழ்ந்த காலத்தில் அவர் விட்டுச் சென்ற அளப்பெரும் செயல்கள் மரணத்தின் பின்னரான கௌரவ குடியுரிமை மூலம் சாகவரம் பெற்று நிலைத்து வாழ்கின்றன.*

*கனடாவில் ஆளுனர் அல்லது பிரதமர் கௌரவ குடியுரிமையை வழங்குவர்.*

*கௌரவ குடியுரிமை வழங்குவது முழுக்க முழுக்க அரசியல் தீர்மானம் தவிர வேறென்றில்லை.*

*கனடாவில் கௌரவ குடியுரிமையை வழங்குவற்கு பாராளுமன்றத்தின் மக்கள் சபையும் மேல் சபையும் அதற்கான பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்தல் வேண்டும்.*

*பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பிரேரணையை சமர்ப்பிக்க முன்பாகவே*

*சகல கட்சியினரும் அதனை பார்வையிட்டு பரிசீலனை செய்தல் வேண்டும் என்றும் மேலதிக ஆலோசனைகளையும் நெறிமுறை களையும் காலத்துற்கேற்றதாக புகுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செனட் சபை உறுப்பினர்களும் காலாகாலமாக வலியுறுத்தி வருகின்றனர்.*

*பிறந்த நாட்டில் பிறப்புரிமையால் குடியுரிமை பெற்ற எவரும் புகுந்த நாட்டில் இயல்புரிமையால் குடியுரிமையை பெற்றுக்கொள்ளும் பொழுது இயல்பாகவே பிறந்த நாட்டின் குடியுரிமையை இழந்துவிடுகின்றனர்.*

*தேவை கருதி சிலர் இரட்டை குடியுரிமையையும் தக்க வைத்துக் கொள்வதும் உண்டு.*

*குடியுரிமை பதலி என்றால் ஒரு நாட்டின் குடியுரிமையை கைவிட்டு*

*விட்டு பிறிதொரு நாட்டில் குடியுரிமையை ஏற்பது.*

*இரட்டை குடியுரிமையோ அல்லது குடியுரிமைப்பதலியோ கௌரவ குடியுரிமையாளர்களுக்குப் பொருந்துவதில்லை.*

*கனடாவில் கௌரவ குடியுரிமை பெற்றவர் கனடிய கடவுட்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியாது.*

*ஆனால் இந்த நாட்டிற்குள் முன் அனுமதி பெறாது பிரவேசிக்கத் தடையும் இருப்பதில்லை.தன் சொந்த நாட்டிற்கு திரும்பும் உரிமையும் மறுக்கப்படுவதில்லை.*

*கௌரவ குடியரிமை பெற்றவரின் குடும்பத்தினரோ பிள்ளைகளோ நெருங்கிய உறவினரோ எவ்வித உரிமைகளுக்கும் பாத்தியப்பட மாட்டார்கள்.*

*குடியுரிமை அற்றவர் எந்த நாட்டிலும் நிரந்தரமாகத் தங்க முடியாது.அதே போலவே கௌரவ குடியுரிமையும்.*

*வழங்கிய நாட்டில் நிரந்தரமாகத் தங்க முடியாது. எனினும் கால வரையறை அற்றது.*

*கௌரவ குடியுரிமையின் பெறுமதி,*

*வியப்பதற்குள் முடிந்துவிடும் ஒரு நிகழ்ச்சியின் மகிழ்ச்சி.*

*அல்லது நாடுகள் பலவற்றின் கௌரவ குடியுரிமையை ஏககாலத்தில் கொண்டாடக்கூடிய மகிழ்ச்சியின் நிகழ்ச்சி.*

*கௌரவ குடியுரிமை என்பது வெறுமனே கௌரவம் மட்டும்தான். வேறெதுவும் கிடையாது.*

*பாராளுமன்ற வளாகத்தில் பறக்கும் தேசீயக் கொடிக்கும் இதற்கும்*

*வித்தியாசம் இல்லை என்ற கருத்தும் நிலவுகின்றது.*

*அழகான பூ மரம் ஒன்றிற்கு மேலும் அழகு சேர்க்க தங்கமுலாம் பூசிய சங்கிலியை அணிவிப்பது போன்றது என்ற கருத்தும் உலவுகின்றது.*

*1947 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து குடியுரிமைச் சான்றிதழ் வழங்கப்படும் சட்டம் அமுலுக்கு வந்தது.*

*அதுவரையில் கனடாவில் வாழ்ந்தவர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளாகவே கருதப்பெற்றனர்.*

*கனடாவில் முதலாவது குடியுரிமை சான்றிதழ் பிரதம மந்திரியாக அப்பொழுது இருந்த வில்லியம் லியோன் மக்கன்ஸி கிங்கிற்கு வழங்கப்பெற்றது.*

*வின்ஸ்டன் சர்ச்சிலை 1961 ம் ஆண்டு கௌரவபிரஜை ஆக்கியதன் பின்பு*

*ரவுல் கஸ்டாப் வலன்பேர்க் (1981) அன்னை தெரசா(1996) உட்பட எண்மர் அமெரிக்காவில் இதுவரை கௌரவ குடியுரிமை பெற்றுள்ளனர்.*

*1789 ல் பிரஞ்சு புரட்சியைத் தொடர்ந்து முதன் முறையாக உலகில் கௌரவ குடியுரிமை வழங்க ஆரம்பித்த நாடு பிரான்ஸ்.ஆகக் கூடுதலாக கௌரவ குடியுரிமை வழங்கிய நாடு ஜேர்மனி. 1813 ம் ஆண்டிலிருந்து இது வரை 119 பேர் அங்கு கௌரவ குடியுரிமை பெற்றுள்ளனர்.*

*பொருளாதாரத்தில் பின்தங்கிய பல நாடுகளில் குடியுரிமையை அரசாங்கத்திடமிருந்து பணம் கொடுத்து வாங்கும் முறைமையும் வெளிநாட்டவர்கள் சட்ட பூர்வமாக பயன்படுத்துகிறார்கள்.*

*ரோபோவிற்கு குடியுரிமை வழங்கிய முதலாவது நாடு சவுதி அரேபியா.*

*சவுதியில் உள்ள ஓர் வைத்திய சாலையில் நோயாளர்களையும் முதியவர்களையும் நன்கு பார்த்துக் கொள்ளவென ஹொங் ஹாங்கில் தாயாரிக்கப்பெற்ற இந்த ரோபோவை பெரும் செலவில் வாங்கியிருந்தது.*

*செயற்கை நுண்ணறிவு தொழில் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த ரோபோவிற்கு சோபியா என்று பெயர்.*

*நாட்டுக்குள்ளே 'நாடு கடத்தப்பட்டு' நாடற்றவர்களானவர்களுக்கு அரசாங்கம் கொத்தாக வழங்குவது கௌரவ குடியுரிமை அல்ல!*

*அது குடியுரிமையின் கௌரவம்.*

*மதிக்கத் தெரிந்த நாடுதான் மதிக்கத் தகுந்த நாடு என்பது கௌரவ குடியுரிமை வழங்கும் நாடுகளுக்கு நன்கு பொருந்தும்.*

***நுரை மகுடம்.***

*தண்ணீருக்கும் தேநீருக்கும் அடுத்து உலகெங்கும் அதிகமாக அருந்தப்படுவது பியராகும். உலகில் அதிகம் அருந்தப்படும் மதுபானமும் பியர்தான்.*

*உலக மொழிகள் அனைத்திலும் பியர் என்ற சொல்லுக்கு நிகரான சொல் இருப்பினும் இப் போதைக்கு பியர் என்ற ஆங்கிலச் சொல்லே மொழி பெயர்க்க விரும்பாத சொல்லாக சுதேசிகளுக்கும் வெறியூட்டுகின்றது.*

*பியர் என்பற்கு தோப்பி என்ற பதம் தமிழில் இருந்தாலும் எவருக்கும் அதில் போதை ஏறியதாகத் தெரியவில்லை.*

ஐரோப்பிய நாடுகளில் சந்திக்குச் சந்தி காணப்படும் பியர் சாலைகளே வாழுமிடங்களை அடையாளப் படுத்துகின்றன.அந்த வழமை கனடாவிலோ அமெரிக்காவிலோ கிடையாது.

பார்லி, கோதுமை, சோளம், நெல் போன்ற தானியங்களிலிருந்து பெறப்படும் மாப்பொருளை நொதிக்க வைத்து பியர் தயாரிக்கப்படுகின்றது.

பியருக்குரிய தனிச்சுவையான ஒருவித கசப்பை வழங்க ஹொப்ஸ் பூக்கள் (Hops flowers) சுவையூட்டி களாக சேர்க்கப்படுவதுடன் அதன் காப்பு பொருளாகவும் பயன்படுத்தப் படுகின்றன. மூலிகைகள் பச்சிலைகள் பழங்கள் போன்றன இப் பூக்கள் கிடைக்காதவிடத்தில் பாவிக்கப்படும்.

மதுப்பிரியர்களுள் பலர் பியரை மோகிப்பதற்கு அதன் மதுசார அளவே காரணமாக கூறப்படுகிறது. பொதுவாக 4% முதல் 6% வரை

மதுசாரம் பியரில் காணப்படும்.சில வகைகளில் 1% க்கும் கீழாகவும் மிக அரிதாக 20% க்கு அதிகமாகவும் இருப்பதும் உண்டு.

உலகில் மதுசார அடர்த்தி கூடுதலாக உள்ள பியர் ஸாம் அடம்ஸ் MM II. அமெரிக்க போஸ்டன் தயாரிப்பான இது 24% த்துடன் $100.00 கனடாவில் விற்பனையாகின்றது.

பிரேஸில் தாயாரிப்பான பிரம்மா (Brahma) பியர் மிக அதிகமாக உலகெங்கும் விற்கப்படுகின்றது. கனடாவில் 5% மதுசாரமுள்ள பிரம்மா பியர் 335 மி.லீட்டர் போத்தலில் $45.00 க்கு விற்கப்படுகின்றது.

ஹெய்னிக்கன்(Heineken) கார்ல்ஸ்பேக் (Carlsberg)உலகெங்கிலும், மோல்ஸன் (Molson) லபாட் ப்ளு (Labatt Blue) கனடாவிலும்,லயன் லாகர் (Lion Lager) இலங்கையிலும் மவுசு பெற்றவை.

*ஏனைய மதுபானங்களை விட பியரில் வைட்டமின்கள் தாதுப்பொருட்கள் நார்ச்சத்துக்கள் அதிகமாகவும் நச்சு ரசாயனப் படிவுகள் குறைவாகவும் உள்ளதால் உடலுக்கு உற்சாகமும் எலும்பிற்கு வலுவும் சேர்வதாக ஆய்வுகள் நுரைக்கின்றன.*

*எனினும் தினமும் பியர் குடிப்பவர் களின் முகம் சோபை இழப்பதும் மோகனாங்க வடிவம் குன்றுவதும் மனம்பாதிப்பதும் மூளை பிசங்குவதும் கசப்பான உண்மையாகும்.*

*உலகெங்கும் பியர் திருவிழா கொண்டாடப்படுவது உண்டு.*

*ரொரண்டோவில் இத்திருவிழாக்கள் வருடத்துக்கு இருமுறை நடைபெறும்.*

*19 வயதுக்கு மேற்பட்ட 30000 மக்கள் 120 வித்தியாசமான பியர் வகையை பார்வையிட்டு தமக்கு பிடித்தமானதில்*

*மூழ்கி பின் உச்ச போதையில் எழுத்து எண்ணிப் பேசுவர்.*

*அல்லது உச்சஸ்தாயியில் பாடுவதாக கோவையாக பேசுவர்.*

*பயன்படாத வார்த்தைகள் பயன்படும்.*

*உடைந்த வார்த்தைகள் உற்சாக வார்த்தைகளாகும்.*

*பியர் மௌனத்தை துரத்தும்-மயக்கத்தை மனதில் கோதும்-அண்ட சராசரங்கள அசைக்கும் என்ற நம்பிக்கை அங்குள்ளோரிடம் கரை புரளும்.உற்சாகம் உல்லாசம் ஆரவாரம் அமளிதுமளிஅழிச்சாட்டியம் போன்றவற்றால் திடல் நிரம்பி வழியும்.*

*சுமேரிய நாகரீகம் ‘நின்க சி’ என்ற தெய்வத்தை பியருக்குரியதாக தோத்திரங்களால் அபிஷேகிக்கின்றது. கி.மு.9000 முதலே எகிப்து மெசபடோமியா பபிலோனியா*

*பகுதிகளில் பியர் மயக்கமளித் துள்ளது.*

*தண்டோடு கூடிய சிறு கருங்குவளை மலர்களே பழந்தமிழரின் பியரை 'ஜில்லிட' வைத்தன என தொன்மையைத் தெளிவாக்குகின்றார் உண்டாட்டுப்படலத்தில் கம்பர்.*

*உலகிலேயே ஆகக்கூடியதாக பெல்ஜியத்தில் 400 வகையான பியர் தயாரிக்கப்படுகின்றது.*

*செக் குடியரசில் சேடாவார் என்ற ஆடம்பர பயணியர் விடுதி உண்டு. அங்குள்ள குளிக்கும் தொட்டி உட்பட எந்தக் குழாயை திருகினாலும் பியர் வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*வயகரா கலந்த பியர் ஒன்று இளவரசர் வில்லியம்ஸின் திருமண நாளன்று எழுக வில்லி எனும் பெயரில் இரட்டை அர்த்தம் தொனிக்க லண்டனில் சந்தைப்படுத்தப்பட்டது.*

*சீனாவில் இதர பொருட்களை போன்று ஷொப்பிங் பைகளிலும் பியரை வாங்க முடியும்.*

*பியர் போத்தலை திறக்க வெளி வரும் கரியமில வாயுவே அதன் நுரை மகுடத்துக்கு காரணம்.*

*அனேகமான பியர் வகை கிளாஸில் ஊற்ற நுரை மேலேழும்.நுரை கீழிறங்கும் அபூர்வ தயாரிப்புகளும் சில இடங்களில் உண்டு.*

*பியர் போத்தல் நிமிர்ந்து நின்றால் நல்ல சகுனமாம். சரிந்திருப்பின் வாழ்வும் சரியுமாம்.*

*வெற்று மது கிண்ணங்களை பார்த்து மனதில் நிரம்பும் பயம் cenosillicaphobia,ஆகும்.*

*பியர் போத்தல் தத்துவம் (Beer Bottle Principle) என்று ஆங்கில பிரபல சொலவடை ஒன்று உண்டு.*

*ஆரம்பம் ஆர்ப்பரிக்கும்.பின்பு அடங்கிவிடும் என்பது இதன் கருத்து.*

*நன்கு குலக்கி விட்டுத் திறக்கப்படும் பியர்ப் போத்தல் பொங்கி வழியும்.ஓரிரு விநாடிகளில் எல்லாம் வடிந்து அடங்கிவிடும். அது போலத்தான் சிலர்.அசத்தலோடு தொடங்கி ஆரவாரம் இன்றி அமைதியாகிவிடுவர்.*

*ஆவுஸ்திரேலியாவில் உள்ள எடித்கோவன் பல்கலை கழகம் இளமானி பட்டத்தையும் இங்கிலாந்திலுள்ள நாட்டிங்ஹாம் பல்கலை கழகம் முது மானி பட்டத்தையும் முறையாக பியர் தயாரித்து குடிப்பவர்களுக்கு ...மன்னிக்கவும் படிப்பவர்களுக்கு வழங்குவதில் பிரபலமானவை.*

*உணவின் பின்பு பியர் என்பது தான் அவர்களுக்கு அங்கு ஆரம்ப அரிச்சுவடாக அமையுமோ? யாரறிவர்!*

பொதுவாக மதுசாரம் எந்த வடிவில் இருந்தாலும் உடலுக்கு கேடு.

மகிழ்ச்சியில் மிதப்பு தரும் மனச்சோர்வை அகற்றும் இருதய நோய் வருவது குறையும் இரத்த ஓட்டம் சீராகும் நார்ச்சத்து மற்றும் உயிர்சத்துB6 B12 கிடைக்கும் கல்லீரலுக்கு நல்லது நித்திரைக்கு ஏற்றது மூளையை இளமையாக்கும் என யாராவது சொன்னால் அவர்கள் பிதற்றுகிறார்கள் என்போம்.

ஆனால் அளவுடன் எடுப்பின் நலன் தரும் என்பதில் எந்த அளவு எனத் தெரியாமல் மயங்குவோம்.

சீனா,அமெரிக்கா,ஜேர்மனி,ரஷ்யா,இங்கிலாந்து,பிரேஸில்,கனடா,நெதர்லாந்து, ஜப்பான், மெக்ஸிக்கோ போன்ற நாடுகள் வருடமொன்றிற்கு 40 பில்லியன் பைந்துக்கும் அதிகமான பியரைக் குடித்து உலகிற்கு ‘சியேர்ஸ்’ சொல்கின்றன.

*குடியாதவர்களையும் சொக்க வைக்கும் பியர் கிண்ணங்களின் நுரை மகுடம் - குடிப்பவர்களுக்கோ சொர்க்கத்தின் சொர்க்கம்.*

*ரத்தத்தை அழுதது போல கண்கள் சிவக்க குடிப்பவர்களால் ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி பியர் தினமாக வெறியுடன் பருகப்படுகின்றது.*

*குடித்தவர்கள் வெட்கப்படுதை அனுபவிக்கும் நாளாக அடுத்த நாள் hangover நாள் நெடி சிந்துகிறது!*

*செப்டம்பர் 25, அகராதிக்கும் அப்பாற்பட்ட ஆறேழு சொற்களால் வாய்கொப்புளிக்கும் 'வெறிக்குட்டியர்' தினமாகும்.*

*- தாயக கிராமங்களுக்கும் இவை பரவும்பொழுது அசிங்கமான வார்த்தைகள் ஒழுங்கைகள் முழுக்க ஒலமிடும்!*

## *பீட்ஸா!*

*வட்ட வடிவ பீட்ஸா ஏன் சதுர பெட்டியில் வருகின்றது?*

*பீட்ஸா அறிமுகமான ஆரம்ப நாட்களில் சாப்பிடத் தெரிந்த தமிழரின் அறிவை ருசிக்க வைத்த இக் கேள்வி வேகமாகப் பரிமாறப் பட்டது.*

*வேகப்பம் என பெயர் வைத்த பின்பே பதில் காண முயன்றான் தமிழன்.*

*தனித்தன்மை, பாரம்பரியம், வடிவங்களின் வடிவு, பீட்ஸாவை வட்டமாகவும் பெட்டியை சதுரமாகவும் செய்வது சுலபம், சதுரப் பெட்டியை*

*மடிப்பது இலகு, எடுத்துச் செல்ல வசதி, பீட்ஸாவை மூலையிலிருந்து எடுப்பதில் சிரமமின்மை,வட்டப் பெட்டியை விட சதுரப் பெட்டியின் விலை மலிவு போன்ற விதம் விதமாக பதில்கள் ஜீரணமடைந்தன.*

*அதனாலென்ன? யாரறிவர்? Who Cares? என பசி மயக்கத்தில் அல்லது அவசரத்தில் சூடாகச் சொன்னவர் களும் இருந்தனர்.*

*1990 ம் ஆண்டின் பின்பே பீட்ஸா தமிழரிடம் அறிமுகமாகி அபிமானம் பெற்றது.*

*வெகு விரைவிலேயே அதன் வாடிக்கையாளர்களா அல்லது அதன் பணியாளர்களா அல்லது அதன் பணிப்பாளர்களா தமிழருள் மிக அதிகம் என திகைக்க வைத்தது.*

*வருடாவருடம் அக்டோபர் மாதம் பீட்ஸா மாதம் என அமெரிக்கர்களால் புசிக்கப்படுகின்றது.*

*இந்த மாதத்தில் வெவ்வேறு சுவையுள்ள பீட்ஸாவை தினத்திற்கு ஒன்றாக 'வயிறுமுட்ட' உண்பது அமெரிக்கர்களுக்கு வாடிக்கை. அல்லது வேடிக்கை.*

*1889ல் இத்தாலியின் மகாராணியாக இருந்த மகரிட்டாவை கௌரவிக்கும் வகையில் விசேட விருந்துக்காக அறிமுகம் ஆனதே பீட்ஸா என்ற 'சுவை உணர்வு' இத்தாலியரிடம் உண்டு.*

*இத்தாலியின் தேசியக் கொடியின் நிறங்களான சிவப்பை தக்காளியும் (Tomato) பச்சையை ஓமமும் (Basil) வெள்ளையை பாலாடைக்கட்டியும்*

*(Mozzarella Cheese) குறிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டது.*

*இதுவே உலகின் முதலாவது பீட்ஸா என்ற நம்பிக்கை சூடும் சுவையும் குறையாமல் பலரிடம் இன்னமும் இருக்கின்றது.*

*விறகுகளுக்குத் தீ மூட்டி 900 பாகை வெப்பத்தில் இத்தாலியின் தனித்தன்மையுடன் தயாரிக்கப்படும் மகாராணி மகரிட்டா பீட்ஸா (Queen Margherita Pizza) களுக்கு ரொரன்ரோ உட்பட உலகின் பல பகுதிகளில் இதே பெயரில் உணவகங்களும் உள்ளது.*

*எனினும் 1889ல் முதல் முதல் பீட்ஸா தயாரிக்கப்பட்டது இத்தாலியில் எனவும் கிரீஸில் எனவும் மாறுபட்ட கருத்தும் உண்டு.*

*பீட்ஸா என்றால் நிரப்புவது என லத்தீனிலும் உரமூட்டுவது என கிரேக்கத்திலும் சொல்லப்பட்டாலும் முகத்தில் முறுவலை தருவது என்ற அர்த்தம் உள்ளதாகவே சுவைஞரால் கருதப்படுகின்றது.*

*ஆண்டு தோறும் பீட்ஸாவின் உலக விற்பனை 5 கோடனுகோடி (billion) ஆகும். 90% அமெரிக்கரின் பெரு விருப்பத் தெரிவாக அமெரிக்காவில் மட்டும் 3 கோடனுகோடி பீட்ஸா விற்பனையாகின்றது.*

*200 இறாத்தல் (91கிலோகிராம்) பீட்ஸா தனி ஒருவரால் ஒரு கிழமைக்குள் தின்று தீர்க்கப்பட்டதும், 44457 இறாத்தல் எடையுடன் கூடிய 123அடி விட்டமுள்ள பீட்ஸா உருவானதும், 155 விநாடிகளில் 14 பீட்ஸா தயாரிக்கப்பட்டதும், 2001 ம் ஆண்டு தென் ஆபிரிக்காவிலிருந்து ஒரு விளையாட்டுக் குழுவிற்காக*

அவுஸ்திரேலியாவிற்கு இரு நாட்களில் 6861 மைல் நெடுந்தூரம் தாண்டி விநியோகிக்கப்பட்டதும் இதுவரை உலக சாதனைகளாக பந்தி வைக்கின்றன.

ஆக விலை கூடிய பீட்ஸா 12 அங்குல விட்டத்துடன் $ 1000 க்கு அமெரிக்காவில் விற்பனையாகின்றது.

இதுதான் வேண்டும் என அடம் பிடிப்போர் இதற்காகச் சொல்லிவிட்டு 24 மணி நேரம் காத்திருக்க வேண்டும்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பெப்பரோனியும் (Pepperoni) இந்தியாவிலும் இலங்கையிலும் கோழி இறைச்சி அல்லது ஆட்டிறைச்சியும் சீனாவில் நத்தையும் ஜப்பானில் சிப்பி அல்லது விலாங்கும் ரஷ்யாவில் முயலும் அவுஸ்திரேலியா வில் இறால் அல்லது அன்னாசியும் தென் ஆபிரிக்காவில் தேங்காய் துருவலும் பீட்ஸாவில் (Toppings) அமோக அபிமானம் உள்ளவை.

*தொலைக் காட்சியில் செய்திகள்*
*முடிவடைந்த பின்னர் வானிலை*
*அறிக்கை வாசிக்கும் பொழுதிற்தான்*
*பீட்ஸா கடைகளுக்குத் தமது*
*தேவையை கூறும் வழக்கம் தமிழர்*
*தவிர்ந்த ஏனைய இனங்களிடம் பல*
*காலமாக இருப்பதாக*
*சொல்லப்படுவதுண்டு.*

*கொண்டாட்டங்கள்,தாமதமாக*
*வீட்டுக்குத் திரும்பல்,அல்லது*
*சமைக்கச் சோம்பல் என காரணம்*
*பெரியவர்களிடம் வேறுபடினும்*
*சிறாரிடம் பீட்ஸா தின்னும் நாட்கள்*
*எல்லாம் கொண்டாட்ட நாட்களே!*

*மூன்று வயதிலிருந்து பதின்ம*
*வயதின் ஆரம்பம் வரை காலை*
*மதியம் மாலை என மூன்று*
*வேளைகளிலும் பீட்ஸாவை மட்டுமே*
*உணவாக்கி உயிர் வாழ*

*எத்தனிப்பவர்கள் உலகெங்கும் அதிகரிக்கின்றனர்.*

*பீட்ஸா பிரியர்கள் ஆண்களை விட பெண்கள்தான் அநேகர்.*

*அதனால் வீடுகளுக்கு விநியோகம் மேற்கொள்ளும் சாரதிகளுக்கு கிடைக்கும் இனாம் பெண்களிட மிருந்து கூடுதலாகக் கிடைக்கும் என்பது வருத்தப்படாத வருவாய் தேடுவோரின் மனக்கணக்கு.*

*பீட்ஸா ஹட் (Pizza Hut) 90 நாடுகளில் 12583உணவகங்களை கொண்டுள்ளது.*

*கலாசார மாற்றத்தில் யாராவது ஒரு தமிழன் தலை வாழை இலையில் பீட்ஸா விருந்து வைக்காமலா இருக்கப்போகின்றான்?*

# பயணிகள் கவனத்திற்கு...

*எந்த நாட்டுக்குப் பயணிக்கப் போகின்றோம் என ஆரம்பத்திலேயே தீர்மானிக்க முடிந்த எங்களால் எந்த நாட்டு வானூர்தியில் பயணிக்கப் போகின்றோம் என இறுதி வரை தீர்மானிக்க முடியாதிருந்தது.*

*எயார் கனடா எமது விருப்பமாக இருந்திருக்கும்.மத்திய கிழக்கு நாடொன்றின் பயணசீட்டு மலிவு என்ற பெயரில் எமது கைக்குள் திணிக்கப்பட்டிருக்கும்.*

*ஆனால் எந்த நாட்டு விமானம் என்பதை மட்டுமல்ல அந்த விமானத்தின் எந்த இலக்க இருக்கை என்பதைக் கூட எமது தீர்மானத்துக்கு உள்ளாக்குகின்றது இணையம்.*

*எமது உத்தேச பயண திகதியில் எத்தனை விமானங்கள் புறப்படுகின்றன, அவை இடையில் எங்கெங்கு தரிக்கின்றன, எமக்கான ஆசனம்*

*ஜன்னலோரமா அல்லது நடுவிலா மற்றும் சைவ,அசைவ, ஹலால் உணவு விருப்புகள், முதியோருக்கான சக்கர நாற்காலி, பாலகருக்கான முன்னிருக்கை போன்ற பிற பல தேவைகளின் முன் பதிவு, முன்னுக்கிருந்தால் விபத்தில் பொட்டென்று போய்விடுவோம் என பயந்தவருக்கான பின்னிருக்கைத் தெரிவு, சிறப்பு வகுப்புக்கும் சிக்கன வகுப்புக்கும் உள்ள கட்டண வேறுபாடு,கைப்பையில் காவும் பொருட்களின் விபரம் போன்ற பலதையும் பறக்க முன்பே கணனியில் தற்போது பார்வையிடலாம்.*

*ஒரு வரிசையில் ஆறு இருக்கைகளும் நடுவில் நடைபாதையும் உள்ள சிறிய ரக விமானங்கள் பல நாடுகளில் உள்ளூர் விமான சேவையில் ஈடுபடும்.*

*ஏழு முதல் பதினான்கு இருக்கைகள் ஓரே வரிசையில் உள்ள மத்திய பெரிய ரக விமானங்கள் இரு நடை*

*பாதைகளுடன் சர்வதேச சேவையில் ஈடுபடுகின்றன.*

*50 பயண ஆசனங்களுக்கு ஒரு கழிவறை இருத்தல் அவசியம் என்பது பொது விதி.*

*சர்வதேச விமானிகள் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் தேர்ச்சி உடையவர்களாக இருப்பார்கள்.*

*8 மணி நேர பயணம் எனின் மூன்று விமானிகளும் 12 மணி நேர பயணம் எனின் நான்கு விமானிகளும் கடமையில் அமர்த்தப்படுவர். பொதுவாக 3 அல்லது 4 மணி நேரம் ஒரு விமானி பணி புரிவர்.*

*முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் கடமையில் உள்ள விமானிகள் ஒரே விதமான உணவை உட்கொள்வதை தவிர்த்துக் கொள்வர்.*

*பெரிய நிறுவனத்து விமானி நிபுணராக இருப்பார் என்ற எமது எதிர்பார்ப்பும்*

கடமையின் பொழுது கண்ணயர மாட்டார் என்ற எமது நம்பிக்கையும் பொய்த்துப் போகவும் வாய்புகளுண்டு.

செல்லிடப்பேசி போன்ற மின்னணுச் சாதனங்களை பயணிகள் பாவிப்பதால் விமானி சமிஞ்ஞைகளை பெறுவதில் தடங்கல் ஏற்படும் என்பதால் தவிர்க்கச் சொல்வார்கள்.

சௌகரியங்களுக்கும் மேலாக பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பணிப்பெண்கள் பயின்றிருப்பர்.

50 பயணிகளுக்கு ஒரு பணிப்பெண் என்ற ரீதியில் கடமையில் இருப்பர்.

பயண ஆரம்பத்தில் பணிப்பெண்கள் ஆபத்து கால நடவடிக்கைகள் பற்றி அபிநயத்துடன் விளங்கப்படுத்து வார்கள். அவ் விளக்கங்கள் ஆசனத்துக்கு முன்பாகவுள்ள பைக்குள்ளும் வைக்கப்பட்டிருக்கும். வாந்தி சேகரிக்கும் பையும் (sick sack)

*அதே பைக்குள்ளிருந்து அவசரத்துக்கு உதவும்.*

*ஒவ்வொரு ஆசனத்துக்கும் முன்பாகவுள்ள குட்டித்திரையை இயக்குவதன் மூலம் விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், பறக்க வேண்டிய தூரமும் நேரமும், விமானத்தின் பாதை போன்ற பல விபரங்களை பயணிகள் அறியலாம்.*

*அத்துடன் ஆசனப்பட்டி அணிதல் வேண்டும், புகைப் பிடிக்கத் தடை போன்ற எச்சரிக்கைகளும் தோன்றுமதில், திரைப்படங்களையும் பார்க்கலாம்.*

*தமிழ் படங்களையும் சொர்கத்துக்கு பக்கத்தில் பார்த்துப்பிரமிப்படையலாம்.*

*ஒவ்வொரு ஆசனத்துக்கும் நேரே மேலே பயணிக்கு மட்டும் பயன்படக் கூடிய வெளிச்சம் மற்றும் காற்று உமிழும் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.*

*கைப்பையை (அளவு:56 செ.மீx 45.செ.மீx25செ.மீ- நிறை:23 கிலோ.) மேற்பகுதியில் உள்ள பெட்டியில் அல்லது ஆசனத்தின் கீழே வைக்கலாம்.*

*விமான பணிப் பெண்ணின் சேவை தேவை என்றாலும் அழைப்பதற்கு ஆசனத்தின் கைப்பிடியில் ஆழி அமைக்கப்பட்டிருக்கும்.*

*பயணியின் முகத்துக்கு முன்பாக பிராணவாயு கொண்ட முகமூடி தோன்றினால் அதனை தாமதமின்றி அணிந்துகொள்வது அவசியம்.*

*ஆபத்துதவியாக 15 நிமிடங்களுக்கு மட்டும் அது தாக்குப்பிடிக்கும் என்பது 'முகமூடி' ரகசியம். அதற்குள் விமானம் காற்று மண்டலத்துள் இறங்கிவிடும்.*

*போத்தலில் வழங்கப்படும் தண்ணீர் மட்டுமே குடிப்பதற்கு உகந்தது.*

*கழிவறைத் தண்ணீரில் ஒட்டுண்ணி இருக்க வாய்ப்புண்டு.*

*போர்வை, தலையணை, கேட்கும் கருவி போன்றன கழுவி காயவிட்டிருப்பதற்கு உத்தரவாதமில்லை. மூடப்பட்ட போர்வைக்குள் முன்பிருந்தவர் குடித்தனம் நடத்தியிருந்தாலும் அழகாக மீண்டும் அவை புதிய பைகளில் செருகப்பட்டிருக்கலாம்.*

*உணவு வைக்கும் மடிக்கக்கூடிய மேஜை கூட துப்பரவானது அல்ல.அதன் மீது முன்னையவர் தவறுதலாக சிந்திவிட்டுச் சென்ற மூக்கும் நன்கு காய்ந்து உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை பரிசோதிக்க காத்திருக்கக் கூடும்.*

*கத்தி,கரண்டி என்பன நெகிழியாக (plastic) இருப்பினும் நன்கு சுத்திகரிக்கப்பட்டு மீள் பாவனைக்கு வருவதுதான் விமானத்தில் வழமை!*

*ஒருகை வலுவிழந்தோர் முள்ளு கரண்டியும் கத்தியும் இணைந்த உபகரணத்தையோ (knork), அல்லது கரண்டியும் முள்ளுகரண்டியும் சேர்ந்த உபகரணத்தையோ (spork) பணிப் பெண்கள் மூலம் இலவசமாகப் பெற்று சங்கடம் தீர்த்துக் கொள்ளலாம்.*

*அணையாடை (diaper) என குழந்தைகளுடனும், அந்த நாள் அச்சம் தவிர்க்கும் தூய்மைத் துணியாக (sanitary napkin) மகளிருடனும் ஒட்டிக்கொள்ளும் இலவசங்களும் உண்டு.*

*விமானத்துள் வரிவிலக்கு விலையில் வாங்கக் கூடியவற்றின் விலைப்பட்டியலை பணிப் பெண்களிடம் கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.*

*வான் வாருணி (bloody mary) என அழைக்கப்படும் ஒரு மதுசாரக் கலவை(cocktail) உண்டு.*
*விமானத்துள் ஏற்படும் அழுத்தம் நாக்கின் சுவை அரும்புகளையும்*

*ஸ்தம்பிதமடைய வைப்பதால் உண்ணும் உணவில் உப்பு குறைவு போன்ற உணர்வு ஏற்படுவதை நிவர்த்தி செய்வதுடன் ஆயாசம் நீக்குமாம் இந்தப் பானம்.*

*இதில்,வொட்கா என்ற மது பானம், தக்காளிச்சாறு, உப்பு,மிளகு,எலுமிச்சை போன்ற பல அடர்த்தியாக கலந்திருக்கும்.உப்புச்சுவையும் புளிப்புச்சுவையும் மிகுந்திருக்கும்.*

*நீண்ட தூர பயணத்தால் கால்கள் வீங்குவது சர்வ சாதாரணம். அவ்வப்பொழுது கால்களை நீட்டி மடக்குவதாலும் இடைக்கிடை எழுந்து நடை பாதையில் நடப்பதாலும் கால்களுக்கு இரத்த ஓட்டம் சீர் படுத்தப்படும். கால்களின் தசைகள் வலுவடையும்.*

*விமானம் புறப்படும் பொழுதும் தரை இறங்கும் பொழுதும் ஏற்படும் வெளி ஆழுத்தம் காரணமாக காதுகள் அடைப்பது போன்ற உணர்வு*

*தோன்றும். அப்பொழுது உமிழ்நீரை விழுங்குவதால் நிவாரணம் பெறலாம் என்பார்கள் அனுபவஸ்தர்.*

*பணிப்பெண்கள் முதன்முதலாக பானம் வழங்கும் பொழுது சிறு உபகாரம் (tips) செய்பவர்களுக்கு அடுத்த தடவை கரிசனம் கூடும் என்ற அபிப்பிராயம் இருப்பினும் பயணிகள் அதனை வழங்குவதுமில்லை. பணிப்பெண்கள் அதனை ஏற்பதுமில்லை.*

*ஆகஸ்ட் 19 விமான பயணிகள் நாளாம். ஆனால் அது எவர் மனதிலும் சிறகு விரிப்பதாகத் தெரியவில்லை!*

*இலங்கையில் தரையிறங்குவதற்கு முன்பாக விமான பணிப்ணெ் தரும் குடிவரவு படிவத்தை பூர்த்தி செய்ய மறக்க வேண்டாம்.*

*ஏனெனில் இலங்கைக்கு இப்பொழுது நீங்கள், இலங்கையர் அல்ல!*

## விளிம்பு நடை.

கோடையை கொண்டாடிக்
குதுகலிக்கும் சாகசப் பெருமிதம்
கனடிய தமிழ் இளைஞர்களிடம்
வருடாவருடம் அதிகரிக்கின்றது.

கனடாவின் தனித்துவ அடையாள
மாகத் திகழ்வது கனடிய தேசிய
கோபுரம். (Canadian National Tower).

2011 ம் ஆண்டு விளிம்பு நடை கனடிய
தேசிய கோபுரத்தில் முதன்முதல்
ஆரம்பிக்கப்பட்டது.

2013 ம் வருடம் முதல் நாள்
விற்பனையில் 41 வீதத்திற்கும்
அதிகமானவை தமிழை தாய்
மொழியாகக் கொண்ட இதயம்
பலமான மாணவர்களாலேயே
பெற்றுக்கொள்ளப் பட்டதாக கூறும்

*அறிக்கைகள் தமிழ் இனத்தையே அண்ணாந்து பார்க்க வைத்தன.*

*ரொரன்ரோ நகரின் அதி உயர்ந்த கனடிய தேசிய கோபுரத்தின் உச்சியில் கை வீசியபடி நடந்து ரொரன்ரோ நகரை முழுமையாகப் பருந்துப் பார்வை பார்ப்பது அவர்களுக்கு சட்ட பூர்வ மாக ஒரு வீர தீர விளையாட்டு.*

*எத்தனை நாளைக்குத்தான் தரையில் நடப்பது?அதனால் ஆபத்தே அருகில் வா என வம்பை விலைக்கு வாங்கி ஆகாயத்தில் அவர்கள் நடக்க முனைவது புல்லரிப்பை ஏற்படுத்தி பதறவைக்கின்றது.*

*சுமார் ஒன்றரை மணி நேரம் இந்த விளையாட்டில் ஈடுபடும் ‘இதயம் உள்ளவர்கள்’ 20 தொடக்கம் 30 நிமிடங்கள் விளிம்பில் நடந்து திகில் அனுபவத்தில் சிலிர்ப்பர்.*

*நிலப்பரப்பிலிருந்து 116 மாடிகள் உயரத்தில் நடப்பதற்கு அவர்கள் ஆர்வத்துடன் பரபரத்துப் பறப்பது - வியக்க வைக்கின்றது.*

*உலக கோபுரங்களில் மிக உயர்ந்த இடத்தில் மனிதர் நடக்கக்கூடிய வசதி இங்கு மட்டுமே உள்ளது.*

*அதனால் கட்டிடத்துக்கு வெளியே உயரத்தில் நடக்கும் திகில் உலகில் வேறு எங்கும் கிடையாது.*

*நடந்து பறக்கவோ அல்லது பறந்து நடக்கவோ விரும்புபவர்களின் சொர்க்கம் இதுதான்.*

*அதன் விளிம்பிலிருந்து எட்டிப்பார்த்தால் மரணம் மெல்ல மனதில் எட்டிப்பார்க்கும்.*

*பணம் பாதாளம் வரை பாயும் என போதித்த வாத்தியார் எங்கோ தொலைந்து போவார்.*

*காற்று ஊதித்தள்ளினால் வீழ்ந்து உடல் சிதற 10 நொடிகள் காணும் என்ற எண்ணம் இதயத்தில் புயலாகும்.*

*கால்கள் கண்ணாடித்தரையில் பரவிடினும் அந்தரத்தில் அநாயாச மாக தொங்கும் உணர்வால் மயிர்கூச்செறியும்.*

*1976 ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இக் கோபுரம் 1815 அடிகள் (553 மீட்டர்) உயரமுள்ளது.*

*உலகின் அதி உயர் கோபுரமாக 2010 ம் ஆண்டு வரை 34 ஆண்டுகள் புகழ் பெற்றிருந்தது.*

*அதன் பின்னர் சீனாவின் கன்ரன் கோபுரமும்(Canton Tower 2000 ft/600m) ஜப்பானின் ஸ்கைரீ கோபுரமும் (skytree 2080 ft/634m) உயரத்தில் உயர்ந்தன.*

*தற்பொழுது டுபாயின் பூரி ஹாலிபா கோபுரம்தான் (Buri Khalifa 2722ft/829m) உலகின் உயர் கோபுரமாகும்.*

*கனடிய தேசிய கோபுரம் கனடிய தேசிய புகையிரத நிறுவனத்தால் நிறுவப்பட்டது.அதனால் அப் புகையிரத சேவையின் பெயரை தனதாக்கியது.ஆனால் தற்பொழுது மத்திய அரசின் பராமரிப்பில் அது இருப்பினும் பெயர் மாற்றம் பெறவில்லை.*

*கோபுரத்தில் பார்வையாளர்களுக்கென இரு பிரதம பகுதிகள் உள்ளன.*

*1135 அடி( 346 மீட்டர்) உயரத்தில் சுழலும் சிற்றுண்டிச்சாலை மற்றும் வர்த்தக நிலையங்களுடன் ஒரு பிரிவு உள்ளது.*

*கண்ணாடி கூண்டுக்குள் இருக்கும் பார்வையாளர்களுக்கோ அதல*

பாதாளத்தில் வீழுந்துவிடுவோமோ என்ற உணர்வு அடிக்கடி தோன்றும்.

அதற்கும் மேலாகவே ‘பருந்துப் பார்வை’ யுடன் சிறகு விரிப்பவர்க்காக 1465 அடி(446மீட்டர்) உயரத்தில் பிறிதொரு பிரிவு (SkyPod) உள்ளது.

1168 அடி(356 மீ) உயரத்தில் சுழலும் சிற்றுண்டிச்சாலைக்குச்சிறிது மேலாக அடிப்பகுதி கண்ணாடித் தகடுகளுட னும் விளிம்புகள் உலோக குழாய் களுடனும் உள்ள நடை பாதை அதுவாகும்.

வழமையான ஆடைகளுக்கு மேல் அவர்கள் தரும் விசேட பாதுகாப்பு கவச அங்கி அணிதல் வேண்டும். கால நிலை குளிரானதாக இருப்பின் தகுந்த ஆடைகளை நாம்தான் அணிந்து செல்லல் வேண்டும். கண்ணடி தரிக்கலாம்.அது கீழே

*விழாதிருக்க அவர்களால் சிறு கயிறு பாதுகாப்பிற்கெனத் தரப்படும்.*

*மார்பை மறைக்கும் கவசமும் முதுகில் கொளுவப்படும் உருக்கு சங்கிலியும்தான் நிர்வாகம் தரும் உயிருக்கான உத்தரவாதம்.*

*விளிம்பு நடைக்குச் சில நிபந்தனை கள் உள்ளன.*

*13 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் அவசியம். 75 இறா (34 கிலோ) க்கு அதிகமான அல்லது 310 இறா (140 கிலோ) க்கு குறைந்த எடை. 42 அங் (107 செ.மீ) உயரம். ஆரோக்கியமான உடல் நிலை. உபகரணங்கள் இன்றி இயல்பாக நடக்கக்கூடிய திறன்.*

*13 க்கும் 17 க்கும் இடையே வயது எனின் பெற்றோர் அல்லது*

*பாதுகாவலரின் எழுத்து மூலமான சம்மதம் தேவை.*

*பின்வரும் நிலையில் உள்ளவர் களுக்கு அனுமதி மறுக்கப்படும்.*

*போதையிலிருத்தல். கர்ப்பமாக இருத்தல். எலும்புகள் முறிவடைந் திருத்தல். 6 மாதங்களுள் சத்திர சிகிட்சைக்குட்பட்டிருத்தல். மூச்சு திணறல் அல்லது நெஞ்சு வலி உள்ளோர்.*

*திகில் நடையிடையே மருந்து மாத்திரை பாவிக்க முடியாது. படக்கருவிக்கும் அனுமதி இல்லை.*

*பொதுவாக ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் விளிம்பு நடை அக்டோபர் மாதம் வரை நீடிக்கும். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை தினமும் இடம்பெறும்.*

*விளிம்பு நடையில் பங்கு பற்றுவதற்கு கட்டணம் 195 டொலர்கள்.*

*பார்வையாளர்களுக்கு கட்டணம் 25.60 டொலர்கள்.*

*65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 4 முதல் 12 வயது வரை உள்ளவர் களுக்கும் சலுகை கட்டணம் 19.20. டொலர்கள்.*

*திகில் நடையில் மெய்மறந்தவர் அதனை என்றும் மறவாதிருக்க சான்றிதழும் வீடியோ மற்றும் புகைப்படங்களும் இலவசமாகப் பெற்றுக்கொள்வார்கள்.*

*இருக்கிறதை விட்டுவிட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படும் இளைஞர்களிடம் Skydive, Bungee jumping,Roller coaster போன்ற இதர சாகச விளையாட்டுகளிலும் திகில் மிக்கது Edgewalk என்பது தீவிரமடை கின்றது.*

*எனினும் வான் அளவு இலட்சியம்
உள்ள இந்த இளைஞரின்
சொர்க்கத்துக்கு செல்லும் பாதை
நரகமாக உள்ளதாக தடுமாறும்
பெற்றோரின் துயர் துடைப்பது
எவ்விதம்?*

*இது ஒன்றும் குத்துச் சண்டைப்
போட்டியல்ல.விழுந்த போது தோல்வி
அறிவிப்பதில்லை.எழாத போது தான்
தோல்வி அறிவிக்கப்படும் என்பற்கு
எனப் பதறும் பெற்றோரது கண்களின்
விளிம்பில் நடை பயிலும் கண்ணீர்!*

*கண்ணாடிக் கூண்டுக்கு வெளியே
அந்தரத்தில் நடந்தவர்களுக்கு -
மேலே ஆகாயம் அண்மித்து
விரிந்ததும் கீழே தொலை
தூரத்தில் நிலம் பரந்ததும்
விசிலடிக்கும் மனதுடன்
வயதானாலும் நீளும்!*

## *நாணயம் நாடு!*

*எந்தவொரு நாட்டிலும் நாணயம் பாவனையில் இருப்பது சர்வ சாதாரணம்.*

*ஆனால் நாட்டின் வடிவில் நாணயம் இருக்க முடியும் என வியப்பை விழிகளுக்கு கொண்டு வந்தது கனடா.*

*சேகரிப்பாளருக்குரிய சிறப்பு நாணய வடிவில் கனடா புகுந்ததும் அடையாளச்சின்னமாக அதன் மாகாணங்கள் அமைந்ததும் புதுமையானதாகவும் கவர்ச்சிகர மானதாகவும் வரவேற்கப்பட்டது.*

*மக்கள் அன்றாட பாவனையில் உள்ள வழமையான நாணயங்கள், சேகரிப்பாளருக்குரிய சிறப்பு நாணயங்கள், நினைவுச்சின்னமாக அமையும் விசேட நாணயங்கள் என மூன்று பிரிவுகளாக கனடாவில் மத்திய அரசின் ஆணைப்படி அரச கனடிய நாணயசாலைகளிலிருந்து வெளிவரும் நாணயங்கள் உள்ளன.*

*சேகரிப்பாளருக்குரிய சிறப்பு நாணயங்கள் முக மதிப்பை விட சந்தை மதிப்பு அதிகம் கூடியவை.*

*விண்ணப்பித்து மட்டுமே பெற்றுக் கொள்ளக் கூடியவை.*

*சாதாரண பாவனையில் இல்லாதவை.*

*அவற்றைச் சிலர் பொழுது போக்காகச் சேகரித்தாலும் பலர் முதலீடாகவோ அல்லது நீண்ட கால சேமிப்பாகவோ கருதுகின்றார்கள்.*

*மனிதகுலம் பயன்படுத்தித் தேய்ந்த நாணயங்களை சேமித்து வைத்திருப்ப வர்கள் சேகரிப்பாளருக் குரிய சிறப்பு நாணய உலகில் பெறுமதி மிக்கவர் கள் என்ற கருத்தும் உண்டு.*

*சேகரிப்பாளர்களுக்குரிய பிரத்தியேக மான சிறப்பு நாணயங்களும் வழமையான வட்ட வடிவங்களிளேயே வெளிவரும்.*

*நாணயத்திலுள்ள தங்கத்தின் அல்லது வெள்ளியின் எடை அதன் சந்தை விலையை நிர்ணயம் செய்யும்.*

*1979 ம் ஆண்டு முதல் வருடாவருடம் தூய தங்கத்தில் வெளிவரும் மேபிள் இலையை சித்திரிக்கும் நாணயங்கள் இதற்கு நல்ல உதாரணம்.*

*2019ம் ஆண்டு வெளிவந்த இத்தகைய நாணயத்தின் முகமதிப்பு 50*

*டாலராகவும் சந்தை மதிப்பு 4220 டாலராகவும் இருந்தது.*

*அவ்வப்போது மாறுபட்ட உருவங்களிலும் சேகரிப்பாளர்களுக்கான பிரத்தியேகமான சிறப்பு நாணயங்கள் வெளிவரும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு கனடாவின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தூய தங்கத்தில் வெளிவந்த மேப்பிள் இலை வடிவிலான 20 டாலர் நாணயம்.அதன் சந்தை விலை 200 டாலரராக இருந்தது.*

*இன்னுமொரு பிரசித்தமான நாணயமான (Yin Yang)'யின் யாங்' கூட சேகரிப்பாளருக்குரிய நாணயங்கள் வரிசையையே சாரும்.*

*எட்டப் பார்வைக்கு அது வழமையானது போலவும் கிட்டப் பார்வைக்கு அது வேறுபட்டதாகவும் ஜாலம் காட்டியது.*

பிரபலமான இரண்டு மீன்களைக் கொண்ட இந்த நாணயமானது ஒரு மீனை தூய தங்கத்திலும் மற்றயதை தூய வெள்ளியிலும் உள்ளவாறு 10 டாலர் முகமதிப்புடனும் 2900 டாலர் சந்தை மதிப்புடனும் வெளியானது.

கனடா அரசு 2019 ம் வருடம் கனடா தினத்தன்று வெளியிட்ட கனடா நாட்டின் வடிவிலான நாணயம் சேகரிப்பாளரின் பெரு விருப்பாக அமைந்தது.

புதுமையான வடிவம் உள்ள அந்த 50 டாலர் நாணயம் சேகரிப்பாளருக் கென தூய வெள்ளியில் பிரத்தியேக மாக உருவாக்கப்பட்டதோடு,மிக விரைவாகவே 2000 நாணயக்குற்றி களும் ஒவ்வொன்றும் 339.50 டாலர் வீதம் விற்பனையாகின.

இந்த நாணயத்தில் கனடாவின் ஒவ்வொரு மாகாணத்துக்குமுரிய ஒரு

*விலங்கோ அல்லது ஒரு பறவையோ அந்தந்த மாகாணத்தை அடையாளப்படுத்துவது போல வடிவமைக்கப் பட்டிருந்தது.சிறப்பு!*

*கனடாவில் பத்து மாகாணங்களும் மாகாணங்களுக்கு அந்தஸ்தில் குறைவான மூன்று பிரதேசங்களும் உள்ளன.*

*1.ஆல்பேட்டா—பெரிய கொம்புகள் கொண்ட ஆடுகள் (Big horned sheep) 2.பிரிட்டிஷ் கொலம்பியா—கெர்மோட் கரடி.(Kermode Bear)3.மனிடோபா—சமவெளிக் காட்டெருமை.(Plains bison.)4.நியூ பிரன்ஸ்விக்-பாடும் சிறு பறவை-சிக்கடி.(Chickadee) 5.நியூ பவுண்ட் லாந்து மற்றும் லாப்ரடோர்-துருவ மான். (Woodland caribou) 6.நோவா ஸ்கோஸியா-விரால் அடிப்பான் (Osprey)7.ஒன்ராரியோ—*

பொதுவான லூனி·(Common loon·) 8.பிரின்ஸ் எட்வேட் தீவு—நீல வாத்து·(Blue jay)9.கியூபெக்-பனி ஆந்தை.(Snowy owl·)10.சஸ்காட்செவன் -வெள்ளை வால் மான்.(White-tailed deer) வட மேற்கு பிரதேசங்கள்-வல்லூறு·(Gyrfalcon) நுனாவூட்-கனடிய இன்யூட் நாய்கள் (Canadian Inuit dogs)யூகோன்-காக்கை·(Raven)

பொது மக்களின் ஏகோபித்த வேண்டுகோளைத் தொடர்ந்து பாவனைக்கு வரும் எனின் இதன் பெறுமதி முகமதிப்புக்கு ஏற்ப 50 டாலர் ஆகவே இருக்கும்.

அன்றாடம் நாம் புழங்கும் நாணயங்கள் பற்றி என்னென்ன தெரியும் என்றால் வேதனமாகின்றது, பரிவர்த்தனை ஊடகமாகின்றது,

*சேவைக் கட்டணமாகின்றது என்றே எல்லோரும் சட்டெனச்சொல்வார்கள்.*

*பின்னர்தான் நாணயத்தாள்களின் நிறங்கள் பற்றியோ அவற்றில் உள்ள படங்கள் குறிப்புகள் பற்றியோ 80 வீதமானனோரின் நினைவு நீளும்!*

*மக்கள் பாவனையில் உள்ள வழமையான கனடிய நாணயங்கள் நிலையான உருவமைப்பைக் கொண்டவை.*

*சாதாரணமாக எங்கும் கிடைப்பவை. கனடா முழுவதும் செல்லுபடியாபவை.*

*$5,$10,$20,$50 மற்றும் $100 என்ற முகமதிப்புடன் ஐந்து நாணயத் தாள்களும் 5¢,10¢,25¢,$1, மற்றும் $2 என்ற முகமதிப்புடன் ஐந்து நாணயக் குற்றிகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான வடிவமைப்புடன் பாவனையில் உள்ளன.*

*கனடிய நாணயத் தாள்களில் ஆகப் பெறுமதி குறைந்தது நீல நிறத்தில் உள்ள ஐந்து டாலர் ஆகும்.*

*கனடாவின் ஏழாவது பிரதமரான சேர் வில்பிரட் லாரியரின் உருவத்தை ஒரு பக்கத்திலும் நாசாவின் விண்வெளிப் பயணங்களில் 1981 முதல் 2011 வரை பயன்பட்ட கனடிய வடிவமைப்பான 'கனடார்ம்2' (Canadram 2) எனும் ரோபோவின் கை மறு பக்கத்திலும் காணலாம்.*

*ஊதா நிறம் கொண்ட பத்து டாலர் தாளில் கனடாவின் முதலாவது பிரதமர் சேர் ஜோன் மக்டொனாலின் படம் ஒரு புறத்திலும் கனடாவின் மிக நீண்ட புகையிரதப்பாதையான ரொரண்டோ யூனியன் முதல் வன்கூவர் பசுபிக் மத்தி வரை சேவையில் உள்ள பயணிகள்*

*தொடருந்தின் படம் மறு புறத்திலும் உண்டு.*

*பச்சை நிறத்தில் உள்ள இருபது டாலர் நோட்டில் எலிசபெத் மகாராணியின் முகம் ஒரு பக்கத்திலும் முதலாவது உலக மகா யுத்தத்தில் உயிர் நீத்த 3000 கனடிய வீரர்களை நினைவு கூரும் வகையில் பிரான்ஸிலுள்ள விமி றிட்ஜ் நினைவு ஸ்தூபி மறு பக்கத்திலும் காணப்படுகின்றது.*

*இரண்டாவது உலகப் போரின் போது கனடாவின் பத்தாவது பிரதமராக இருந்த சேர் லியோன் மக்கென்ஸி கிங்கின் உருவம் முன் பக்கத்திலும் கனடிய கடலோர காவற்படையின் ஆய்வுப்பணிக்கு வடதுருவத்தில் பனிப்பாறைகளை உடைப்பதற்கு பெரிதும் உதவும் அதி நவீன கப்பலான 'அமுண்ட்செனனின்' படம்*

(Amundsen) மறு பக்கத்திலும் உள்ள ஐம்பது டாலர் தாள் சிவப்பு நிறத்தில் உள்ளது.

முதலாவது உலக யுத்தத்தின் போது கனடாவில் எட்டாவது பிரதமராக இருந்த சேர் ராபர்ட் போர்டனின் முகம் முன் பக்கத்திலும்,நோபல் பரிசு பெற்ற கனடிய விஞ்ஞானியான சேர் பிரட்றிக் பாண்டிங் இன்சுலின் மாற்று மருந்தை கண்டுபிடித்த ஆய்வு கூடமான கனடிய அறிவியல் ஆராய்ச்சி மன்றத்தைக் குறிக்கும் ஒரு வரைவு மண் நிறத்தில் உள்ள நூறு டாலர் தாளின் பின் பக்கத்திலும் தென்படுகின்றது.

இரண்டு டாலர்கள் அல்லது டூனி நாணயமானது இரு வெவ்வேறு வண்ண உலோகங்களால் ஆனது. அதன் ஒரு பக்கத்தில் துருவக் கரடி காட்சி தருகின்றது.

*லூனி அல்லது ஒரு டாலர் நாணயம் தங்க நிற நிக்கலால் உருவாக்கப் பட்டது.கனடாவின் தேசியப் பறவை யான லூனியின் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளதால் லூனி எனப் பெயர் பெற்றது.*

*வெள்ளியின் தோற்றமுள்ள 25 சதம் 10 சதம் 5 சதம் நாணயங்கள் முறையே குவாட்டர், டைம்,நிக்கல் என்ற மறு பெயர்களிலும் குறிக்கப் படுகின்றன.*

*குவாட்டர் நாணயத்தில் துருவ மானும்,அளவில் மிகச்சிறியதும் மெலியதுமான டைம் நாணயத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அதிவேக பாய்மர பந்தயக்கப்பலாக திகழ்ந்து வட அத்திலாந்திக்கின் அரசி எனப் போற்றப்பட்ட புளூநோஸும், நிக்கல் நாணயத்தில் நீர் நாயும் பொறிக்கப்பட்டுள்ளன.*

*சிறப்பான சந்தர்ப்பங்களையோ அல்லது நிகழ்வுகளையோ குறிக்கும் வகையில் நினைவுகளின் சின்னமாக வெளிவரும் விசேட நாணயங்கள் பெரும்பாலும் நிலையான உருவமைப்பில் சிறப்பான வடிவமைப்பு கொண்டனவாக அமையும்.*

*மிகக் குறைந்த அளவிலேயே சேகரிப்பாளருக்கெனத் தயாரிக்கப் பட்டு மிகக் குறுகிய காலம் மட்டுமே வினியோகத்தில் இருக்கும்.*

*வருடாவருடம் எண்ணுக்கணக்கற்ற விசேட நாணயங்கள் இந்த வகையில் அரசால் வெளியிடப்படுகின்றன.*

*எலிசபெத் மகாராணியின் பிரத்தியேக கனேடியக் கொடி செவ்வக வடிவில் உள்ள 25 டாலர் நாணயம், புகைப்பட கலைஞர் பீட்டர் மக்கின்னனை கௌரவிக்கும்*

*முகமாக அவரது புகைப்படங்களில் ஒன்றான றொக்கி மலைத் தொடர் உள்ள 20 டாலர் நாணயம்,பறக்கும் அபூர்வ பறவைகள் உள்ள 30 டாலர் நாணயம்,வனவிலங்குகள் உள்ள 5 டாலர் நாணயம், சோதிடத்தில் நம்பக தன்மை பெறுவதற்காக சிம்ம அடையாளம் உள்ள 5 டாலர் நாணயம் என்பன கடந்த வருடம் (2019) வெளிவந்த விசேட நாணயங்களில் ஒருசிலவாகும்.*

*பொங்கலையும் தீபாவளியையும் கௌரவிக்கவும் ஏற்கனவே நாணயங்கள் வெளிவந்துள்ளன என்பதை அறியும் எம்மவரின் மனம் மத்தாப்பு ஆவதும் உண்டு.*

*சேகரிப்பாளருக்கெனவும் பொது மக்கள் பாவனைக்கெனவும் பிறிம்பு பிறிம்பாக தயாரிக்கப்படும் விசேட நாணயங்கள் சில விதி விலக்காக*

*நீடித்த பாவனையில் இருப்பதும் வரலாற்றில் உள்ளது.*

*உலகில் முதன் முதலாக இருளில் ஒளிரும் நாணயம்:*

*இலக்கியப் பயணங்களைச் சிறப்பிக்கவென வெளியிடப்பட்ட நாணயம் என்பன இந்த வரிசையில் அடங்கும்.*

*உலகில் முதன் முதலாக இருளில் ஒளிரும் நாணயத்தை வெளியிட்டது கனடா.*

*பகல் வேளைகளில் சாதாரண நாணயக்குற்றிகளைப் போல் தோற்றமளிக்கும் இவை இரவில் ஒளிரும் சிறப்புத் தன்மை கொண்டவை.*

*150 பிறந்த நாளை முன்னிட்டு இரண்டு டாலர்கள் பெறுமதியான*

*மூன்று மில்லியன் நாணயங்கள் இவ்வாறு வெளியிடப்பட்டன.*

*இலக்கியப் பயணங்களைச் சிறப்பிக்கவென வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் ஏதாவது ஒரு வாக்கியம் ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் சேர்க்கப்பட்டிருந்தது கூட உலகின் கவனம் கவர்ந்தது.*

*பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் ஆலோசனைப்படி 2016 ம் ஆண்டு சர்வ தேச மகளிர் தினத்தை முன்னிட்டு கனடாவின் இரும்புப் பெண்ணான வயோலா டெஸ்மண்ட் என்ற கனடிய குடியுரிமை ஆர்வலரின் படம் உள்ள 10 டாலர் நாணயத்தாள் செங்குத்தான வடிவில் மக்கள் பாவனைக்கு வந்தது.*

*அத்துடன் 2018 ம் வருடம் உலகின் மிகச்சிறந்த நாணயத்தாள் என்ற விருதையும் தனதாக்கியது.*

*மகாராணியின் படமோ அல்லது பிரதமரின் படமோ இல்லாமல் கனடா கண்ட முதலாவது நாணயத்தாள் இதுவாகும்.*

*பொது மக்களின் நீடித்த பாவனைக்குச் சான்றாக இந்த நாணயத்தாள் அமைய வயோலா டெஸ்மண்டின் கையொப்பத்துடன் 20 டாலர் முக மதிப்புடன் தூய வெள்ளியில் சேகரிப்பாளருக்கென வெளிவந்த 8000 நாணயகுற்றிகள் குறுகிய கால பாவனைக்கு சான்றாகின.*

*சிறப்பு நாணயங்களோ அல்லது சேகரிப்பாளர் நாணயங்களோ சட்டபூர்வமானது எனினும் அவற்றின் முக மதிப்பு பெறுமதிக்கு கூட சாதாரண வங்கிகளில் பரிவர்த்தனை செய்ய முடியாது.*

*அதே சமயம் 1936 ம் ஆண்டு சிறு தவறுடன் வெளிவந்த ஒரு சத நாணயம் மூன்று லட்சத்துக்கும் 1969 ம் ஆண்டு வெளிவந்த அபூர்வ பத்துசத நாணயம் இருபத்தையாயிரம் டாலருக்கும் ஏலத்தில் விலையாகிய சுவாரஸியமும் கனடாவில் உள்ளது.*

*2001ம் ஆண்டு முதல் இருபது ஐம்பது நூறு டாலர் நாணயத் தாள்களில் புதிதாகப் புகுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் 2011 ம் ஆண்டிலிருந்து ஐந்து பத்து டாலர் நாணயத் தாள்களிலும் வியாபித்தது.*

*ஒளி ஊடுருவல் மூலம் அல்லது ஒளித் தெறிப்பு மூலம் பார்க்கக் கூடிய அடையாளம்,*

*கூர்ந்து பார்த்தால் மட்டும் தெரியும் இலக்கம்,*

*நிறப்பிரிகை செய்யும் இழைக்கப்பட்ட நூல் ,*

*ஊதா கதிரில் ஒளிரும் எழுத்துகள், இரு புறமும் வடிவமைக்கப்பட்ட நகல் எடுக்க முடியாத சிறிய நட்சத்திக் கூட்டம்*

*என்பன நாணயத் தாள்களின் நம்பகத்தன்மையை அதிகரித்ததுடன் களவாகத் தயாரிப்பதையும் மட்டுப்படுத்தின.*

*அத்துடன் தடவிப்பார்த்தால் விரல்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் வலது பக்க மேல் மூலையில் உள்ள உயர்த்தப்பட்ட புள்ளிகள் பார்வை அற்றவர்களும் நாணயத் தாள்களின் வேறு பாட்டை உணர்ந்து கொள்ள பெரும் அனுசரனையாக அமைந்தது.*

*இலகுவில் கிழியாத, இலகுவில் கசங்காத, இலகுவில் நனையாத*

*தன்மை கொண்ட ஒருவித நெகிழியில் (Polymer) நாணயத்தாள் கள் 2011ம் ஆண்டு முதல் வெளிவர ஆரம்பித்தன.*

*பாவனையிலிருந்து வந்த ஒரு டாலர் தாள் 1989 ம் ஆண்டிலும்,இரண்டு டாலர் தாள் 1996 ம் ஆண்டிலும், ஆயிரம் டாலர் தாள் 2000 ம் ஆண்டிலும் செயலிழந்தன.*

*ஒரு டாலர் இரண்டு டாலர் தாள் களை நாணயக் குற்றிகள் பிரதியீடு செய்தன.*

*ஆயிரம் டாலர் தாள்கள் பெரும்பாலும் பாரிய குற்றச் செயல்கள் புரிபவர்களாலேயே கையாளப்படுகின்றது எனக் கண்டறிந்த காவல் துறையினர் அதனை நீக்குமாறு கோரியிருந்தனர்.*

ஒரு சதம் அல்லது பென்னி நாணயக்குற்றியின் முக மதிப்பை விட அதன் உருவாக்கச் செலவு அதிகம் என்ற காரணத்தால் 2012 ம் ஆண்டு கனடிய அரசு அதன் உற்பத்தியை நிறுத்தியது.

நாணயம் இல்லாமல் நாடு பிடித்தவர்கள் பிடித்த நாடுகள் பலவற்றில் நாணயம் புழக்கத்தில் இல்லாதிருந்தது.

பண்டமாற்று முறைமையில் பரிவர்த்தனைச் சிக்கல் தோன்றிய பொழுதே நாணயம் உட்புகுந்து கொண்டது.

ஆரம்பகால கனடிய வரலாற்றில் பிரித்தானிய பவுண்ட்ஸ்,பிரான்சின் பிராங்ஸ்,அமெரிக்க டாலர், ஸ்பெயினின் பெசோ மற்றும் கனடிய அரசு வழங்கிய காலனித்துவ நாணயங்கள் என்பன கனடாவில் நாடு

*பிடித்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றக்குறிச்சிகளில் புழங்கின.*

*அவ்வேளை கனடிய டாலரின் பெறுமதி பிரித்தானிய பவுண்ட்ஸின் பெறுமதிக்கு நிகரானதாகவோ அல்லது தங்கத்தின் விலைக்கு இணையானதாகவோ திகழ்ந்தது.*

*டாலர் என்ற குறியீட்டோடு கூடிய முதலாவது நாணயத்தாள் 1813 ஆண்டில் கனடாவில் நிலை கொண்டிருந்த பிரித்தானிய ராணுவத்தினரால் பயன்படுத்தப் பட்டது.*

*ஆகக் குறைந்தது ஒரு டாலராகவும் ஆகக் கூடியது நாணூறு டாலர்களாக வும் நாணயத் தாள்கள் அப்போது இருந்தன.*

*1817 ம் ஆண்டு மொன்ரியல் வங்கி நாணயத் தாள்களை வினியோகிக்க ஆரம்பித்தது.*

*1858 ம் ஆண்டு முதல் 10 சதமும் 1870 ம் ஆண்டு முதல் 25 சதமும் பாவனைக்கு வரத் தொடங்கின.*

*1867 ம் ஆண்டு நாணயத்தின் மீது பிரத்தியேக அரசியலதிகாரத்தைப் பெற்றது புதிதாக ஒருங்கிணைந்த கனடிய அரசாங்கம்.*

*1870 ம் ஆண்டு நாணய சட்டம் சீர்திருத்தம் பெற்றதில் கனடிய டாலர் கனடாவின் அதிகாரபூர்வ நாணயமாக பிரகடனப்படுத்தப் பட்டது.*

*1908 ம் ஆண்டு முதல் அரச நாணயசாலை கனடாவிலேயே நாணயங்களை உருவாக்க ஆரம்பித்தது.*

*கனடாவில் உள்ள பாங்க் ஒவ் கனடா என அழைக்கப்படும் தேசிய வங்கியே அரச ஆணைப்படி அரச கனடிய நாணயசாலைகளில் நாணயத்தை அச்சிட்டு வழங்கும் உரிமையையும் நாணய மதிப்பைக் கட்டுப்படுத்தும் தகமையையும் கொண்டுள்ளது.*

*வின்னிபெக்கிலும் ஒட்டவாவிலும் உள்ள அரச கனடிய நாணயசாலை களில் கனடிய நாணயங்கள் தயாரிக்கப்படுகின்றன.*

*2010 முதல் 2017 வரை நாணய காட்சி சாலையொன்றும் வன்கூவரில் செயல்ப்பட்டிருந்தது.*

*வின்னிபெக்கில் உள்ள நாணயசாலை மிகவும் பெரியதும் அதிக தொழில் நுட்ப வசதி உடையதும் ஆகும்.*

*கனடாவின் பாவனைக்குரிய அனைத்து நாணயங்களும் இங்குதான் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

*நாற்பதுக்கும் மேற்பட்ட இயந்திரங்கள் மூலம் தினமும் இருபது மில்லியன் நாணயங்கள் உருவாக்கும் வசதி உள்ளது.*

*கடந்த 25 வருடங்களில் சுமார் 70 நாடுகளின் நாணயங்கள் இங்கு உருவாகியுள்ளன.*

*சிறப்பான சந்தர்ப்பங்களையோ அல்லது நிகழ்வுகளையோ குறிக்கும் சின்னமாக அமையும் விசேட நாணயங்களும் சேகரிப்பாளருக்குரிய சிறப்பு நாணயங்களும் மட்டுமே ஒட்டவாவில் உள்ள நாணயசாலை யில் பெரும்பாலும் தயாரிக்கப்படும்.*

*தங்கம் வெள்ளி நாணயங்களும் கையால் செதுக்கப்படும்*

*பதக்கங்களும் இங்கு பிரசித்தி பெற்றவை.*

*நாணயங்கள் தயாரிப்பிற்கு உகந்த வார்ப்புகள் பெரிதும் இங்குதான் உருவாக்கப்படுகின்றன.*

*நாணயங்கள் தயாராகும் முறையை அனுமதி பெற்று பொது மக்களும் அரச கனடிய நாணயசாலைகளில் பார்வையிடலாம்.*

*2020 ம் ஆண்டு சேகரிப்பாளருக்கென வெளிவரும் நூற்றுக்கணக்கான நாணயகுற்றிகளிலிருந்து மாறுபட்ட வடிவமைப்பில் ஆறு நாணயகுற்றிகள் வரவுள்ளன.*

*புளு நோஸ் கப்பலின் வடிவ நாணயம் ஜனவரி மாதமும் நீர் நாயின் வடிவில் மார்ச் மாதத்திலும் அரச சின்னமொன்றின் வடிவில் மே மாதத்திலும் துருவக்கரடி வடிவில்*

*யூன் மாதத்திலும் லூனி வடிவில் செப்டம்பர் மாதத்திலும் துருவமான் வடிவில் நவம்பர் மாதத்திலும் வெளிவரும்.*

*தூய வெள்ளியிலான இவை ஒவ்வொன்றும் 50 டாலர் முக மதிப்பையும் 330 டாலர் சந்தை மதிப்பையையும் கொண்டிருக்கும்.*

*2019 ம் ஆண்டு உலகில் அதிக வலுவான அல்லது அதிக செல்வாக்குள்ள நாணயங்களின் வரிசையில் பத்தாவது இடத்தில் கனடிய டாலர் இருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது.*

*1.குவைத் டினார்.2.பஹ்ரைன் டினார்.3.ஓமான் ரியால்.4.ஜோர்தான் டினார்.5.பிரிட்டிஷ் பவுண்ட்ஸ்.6.கேமன் தீவுகள் டாலர்.7.யூரோப்பியன் யூரோ.8.சுவிஸ் பிராங்.9.அமெரிக்க டாலர் ஆகியவை 2019 ம் ஆண்டின்*

*மதிப்பீட்டில் கனடிய டாலருக்கு முன்பாக அமைந்தன.*

*கனடாவின் பாரளுமன்ற வரைபடத்துடன் அமெரிக்ககொடி தெரிந்தது, பறவைகள் குறித்து வெளியாகிய தாள்களில் யூனியன் கொடி பறந்தது,கனடாவின் முன்னைய தேசியக்கொடி சில தாள்களில் காணப்பட்டது, நோர்வே மேபிள் இலைகள் கனடா மேபிள் இலைகளாக மாறியுள்ளமை போன்ற தவறுகள் கனடாவில் வெளிவந்த நாணயத்தாள்கள் சிலவற்றில் தெரிந்ததாக தெரிந்தவர் கூறுவர்.*

*தற்பொழுது புழக்கத்தில் உள்ள 100 டாலர் தாளை முகர்ந்து பார்த்தால் மேபிள் வாசம் வரும் என்றொரு கட்டுக்கதையும் நிலவுகின்றது.*

இப்பொழுதும் பாவனையில் இல்லாத $ 1, $ 2, $ 25, $ 500 மற்றும் $ 1,000 நாணயத்தாள்கள் 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியுடன் முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டு செல்லுபடியற்றதாகிவிடும்.

'அயத்துமறந்து' யாராவது அவற்றை வைத்திருந்தாலோ அல்லது பகுதி எரிந்த அல்லது நனைந்த அல்லது சிதைந்த இதர நாணயத்தாள்களை வைத்திருந்தாலோ அருகில் உள்ள வர்த்தக வங்கிகளில் அவற்றை மீளளித்து நிகரான செல்லுபடியாகும் பணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

அல்லது சகல விபரங்களுடனும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.Bank of Canada, Bank Note Redemption Service,234 Wellington Street,Ottawa, ON, K1A 0G9

*கனடாவில் வெளிவந்த முதலாவது நாணயம் முதல் இறுதியாக வெளி வந்த நாணயம் வரை சகல நாணயங்களையும் ஒட்டவாவில் உள்ள அரச கனடிய நாணய சாலையின் அருங்காட்சியகத்தில் பார்வையிடலாம்.*

*நாணயம் என்றால் நேர்மை என்றும் பொருள்.*

*கொடுப்பவரும் பெற்றுக் கொள்பவரும் நாணயத்தோடு இருக்க வேண்டும்.*

## *வாகனங்களுக்கும் மோட்சம் உண்டு.*

*பயணிகள் மோட்சம் அடையலாம் என்பது சர்வ சாதாரணமானது.*

*வாகனங்களும் மோட்சம் அடையலாம் என்பது சற்றே நூதனமானது.*

*கனடா முழுவதும் இதற்கெனவே பல சொர்க்க வாசல்கள் உள்ளதும் இது வரை கேள்விப்படாதது.*

*காற்றில் கலக்கும் கரும் புகையால் இதயம் கறுத்துக் கனத்தவர்கள் படு கதியாகச் சென்று பர கதி அடையும் மார்க்கத்தை பழைய வாகனங்களுக்கு காட்டுவதே வாகன சொர்க்கம்.(Car Heaven)*

ஆண்டு தோறும் 50 000 வாகனங்கள் இதன் மூலம் முத்தியடைய விதி இருப்பினும் அண்ணளவாக 27 000 வாகனங்களே பரலோகமடைகின்றன.

சுமார் 45 மில்லியன் வாகனங்கள் கனடிய வீதிகளில் பயணிப்பதாக பதிவு உள்ளது.

162 000 கி.மீ தூரம்தான் ஒரு வாகனத்தின் ஆயுட்காலமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் அனேகமான வாகனங்கள் 225 000 கி.மீ.தாண்டியும் விரட்டப்படுவதால், புகைகின்றன.

பழைய வாகனங்களைப் பாவிப்பவர் கள் உயிரோடு விளையாடுபவர்கள் என்ற ஒரு நெருடல் சுற்று சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வாளர்களிடம் உள்ளது.

*புது வாகனங்களை விட 20 மடங்கு தீமையை சூழலை மாசு படுத்துவதில் பதின்ம வயதை ஆரம்பிக்கும் எந்தவொரு வாகனமும் ஏற்படுத்தும் என்கிறது தூயகாற்று அறக்கட்டளை.*

*அதனால் 12 வயதுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு மறுபிறவி அவசியமாகின்றது.*

*20 வருடங்களுக்கு முற்பட்ட வாகனங்களுக்கு 'கருணைக் கொலை' கட்டாயமாகின்றது.*

*பழைய பாரிய இரும்புத் துண்டங் களுடன் பாதையில் பவனி வந்து சூழல் மாசடைவதை தவிர்க்க முன் வருபவர்களை ஊக்குவிற்பதற்காக சிறந்த சலுகைகள் வழங்கப்படு கின்றது.*

*வாகனம் இயங்கும் நிலையில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.*

*வாகனம் எந்த வருடத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கலாம்.*

*வாகன உரிமமும் திறப்பும் இழுவையின் பொழுது கையளிக்கப் படல் வேண்டும்.*

*உரிமையற்ற வாகனங்கள் உந்து உருளிகள் இழுக்கப்படுவதில்லை.*

*இறந்தவரது வாகனம் ஆயின் மரண சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.*

*தண்டப் பணம் நிலுவையிலிருப்பின் உரிமையாளரே செலுத்த வேண்டும்.*

*புகை சிந்தும் சகல வாகனங்களும் மீள் சுழற்சியில் பங்கு பற்ற www.carheaven.ca என்ற இணையத்தில் அல்லது 1 877 798 7701 என்ற தொலை பேசி இலக்கத்தில் தொடர்பை ஏற்படுத்துவதே அதற்கான இறுதிக் கிரியைகளில் முதலாவதாகும்.*

அடுத்ததாக வாகன விபரங்களை இணையத்தில் அல்லது இலக்கத்தில் பதிய வேண்டும்.

வாகன பதிவுப் புத்தகத்தையும் உரிமைச் சான்றையும் தபாலில் பின்னர் அனுப்ப வேண்டும்.

படிவங்கள் கிடைத்த இரு வாரங்களில் இலவசமாக வாகனங்கள் இழுக்கப்படுவதுடன் அடுத்த மூன்று மாதங்களுக்குள் வாகன நன்கொடை களுக்கான சலுகைகளை மோட்சம் வழங்கும்.

சொர்க்க முகவரி:Car Heaven,
134 Langarth Street East
London ON N6C 1Z5

சொர்க்க தொலைபேசி:Car Heaven Callcenter.1 877 798 7701 அல்லது 1 877 773 1996.

இது தொடர்பான பிறிதொரு இணையம்: www.carec.ca.

*இழுவை இயந்திரம் புக முடியா*
*இடத்திலுள்ள வாகனம் எனின்*
*இழுவை நிராகரிப்புக்குள்ளாகும்.*

*தானமாகக் கொடுக்கப்படும்*
*வாகனங்களுக்கு சன்மானமோ*
*வெகுமானமோ கிடையாது.*

*எனினும் தர்மம் கொடுத்ததாக வரி*
*கழிவும் கிடைக்கும்.*

*அவை வாகன வருடத்திற்கும்*
*நிலைமைக்கும் தன்மைக்கும் ஏற்ப*
*வேறுபடும்.*

*பழைய வாகனங்களை நொருக்கு*
*வதற்காக நன் கொடையளிப்பவர்*
*களுக்கு இழுவைச் செலவு இலவசம்.*

*இந்த மண்ணை நரகமாக்கும்*
*வாகனங்களுக்கு இந்த மண்ணிலேயே*
*மோட்சம் உண்டு.*

*Car Heaven - where the old cars come to a good end!*

## பந்தாடிய குகை!

*தாய்லாந்து நாட்டின் சியாங்ராங் மாகாணத்தில் மியான்மார் எல்லையில் உள்ளது தாம் லுவாங் என்ற குகை.*

*தாம் லுவாங் குன் நம் நங் நன் என்பது அதன் முழுப் பெயர்.*

*ஆறு ஒன்றுக்கு பிறப்பிடமாக உள்ள தூங்கும் பெண்ணின் பெருங் குகை என்பது அதன் அர்த்தம்.*

*தாய்லாந்தின் நான்காவது பெரிய குகையான இதன் நீளம் 10.316 மீட்டர்.*

*ஏராளமான நீர் வீழ்ச்சிகளும், அடர் அடவிகளும், சூழ்ந்த பகுதியில்*

*உள்ள, காற்றின் சுதந்திரம் குறைந்த, இயற்கையின் சிக்கலான இக் குகைக்குள் 2018 யூன் மாதம் 23ம் திகதி காட்டுப்பன்றிகள் எனும் பெயருடைய கால்பந்தாட்ட குழுவின் (Wild Boar soccer team) 11 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 12 சிறார்கள் பயிற்சியாளர் எக்காபோல் சந்தாவாங்குடன் சிக்கிக் கொண்டதற்கு திடீர் மழையால் ஏற்பட்ட காட்டு வெள்ளம் குகையின் உற்புற வாசலை 16 அடி உயரத்துக்கு அடைத்தது காரணமானது.*

*வழமையாக பயிற்சி எடுக்கும் மைதானத்திலிருந்து 45 நிமிட சைக்கிள் சவாரியில் அமைந்துள்ள இக்குகைக்கு ஏன் சென்றார்கள் என்பதற்கு சாகச பயணம் மேற்கொண்டனர் என்பதே பரவலாக கூறப்படும் காரணம்.*

*எனினும் இது பயிற்சியின் ஒரு பகுதி அல்லது குழு உறுப்பினர் ஒருவரின் பிறந்த நாளுக்கான இன்ப*

*அதிர்ச்சி அல்லது மழைநாளில் குகைக்குள்அணியினரின் பெயரைப் பொறித்தால் எதிர்காலத்தில் தாய்லாந்தின் தேசிய அணியில் விளையாடலாம் என்ற மூடநம்பிக்கை போன்ற காரணங்களும் கற்பிக்கப்படுகின்றன.*

*இந்தக் குகை டூய் நங் நன் மலையின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது.*

*மலை உச்சியிலிருந்து 800 மீட்டர் ஆழத்தில் சிறார் மாட்டியிருந்தனர்.*

*குகையின் உட்பகுதி சில இடங்களில் 33 அடி உயரமானது. சில இடங்கள் மிகவும் குறுகலானது.*

*உலகை உதறி விட்டு ஒரு மணித்தியாலம் நிற்கலாம் என்று குகைக்குள் சென்ற பந்தாட்டச் சிறாரை யூன் 23 முதல் யூலை 10 வரை இருவாரங்களாக குகை பந்தாடியது – உலகம் பதறி உயிரில் வரவு வைத்த நாட்கள்.*

*யூன் 23 பகல் 11 மணியளவில் 12 சிறுவர்களும் பயிற்சியாளரும் குகைக்குள் புகுந்தனர்.*

*பெருகிப் பாய்ந்த காட்டு வெள்ளம் குகை வாசலை அடைத்த போது மதியம் ஒரு மணி.*

*மாலை மணி 4க்கு உள்ளே சிக்கியவர்களின் அடையாள மாகியது வெளியே அனாதரவாக கிடந்த அவர்களின் சைக்கிள்கள்.*

*நள்ளிரவில் தேடுதல் பணி ஆரம்பிக்கப்பட்டது.*

*உள்ளே சென்றவர்களை வெளியே வரவிடாது வெள்ளம் மிரட்டியது.*

*வெளியே இருந்தவர்களை உள்ளே செல்லவிடாது வெள்ளம் விரட்டியது.*

*தொடரவுள்ள தொடர் மழை காரணமாக அவர்கள் முக்குளிக்க கற்றுக் கொண்டு வெளிவர வேண்டும் அல்லது குகைக்குள் பெருகும் வெள்ளம் வடியும் வரை 4 மாதங்களுக்கு அங்கு*

*தாக்குப்பிடிக்க வேண்டும் என்றது தாய்லாந்து ராணுவம்.*

*வெளியே பார்வையாளர்கள் வீரர்கள் ஆனார்கள்.*

*உள்ளே வீரர்கள் பார்வையாளர்கள் ஆனார்கள்.*

*கைவசம் உள்ளே இருந்த உணவு குறைந்தது.*

*கைவசம் வெளியே உணவு இருந்தும் உண்பது குறைந்தது.*

*வெளியே இருந்தவர்களை ஏக்கம் தாக்கியது.*

*உள்ளே உள்ளவர்களை தாக்கம் ஏங்க வைத்தது.*

*குதுகலம் மறைந்த துயரம் வெளியே.*

*துயரத்தை மறக்க குதுகலம் உள்ளே.*

*கடற் படை வீரர்களும்,பேரிடர் மீட்புப் பணியினரும்,ஆழ்கடல் சுழியோடி களும்,குகைக்குள் தேடுதலை ஆரம்பித்ததும்*

*அவர்களுடன் அமெரிக்க*
*பிரித்தானிய நீரடி ஆய்வு குழுவினர்*
*நால்வருடன் சர்வதேச நீரிடர் மீட்பு*
*நிபுணர்களும் இணைந்ததும்*

*குகைக்குள் உயரும் வெள்ளப்*
*பெருக்கினை குறைக்க பாரிய*
*நீரிறைக்கும் இயந்திரங்களை*
*இயக்கியதும்*

*அவதானிக்க வசதியாக குகைக்கு*
*வெளியே மேற் பரப்பில் ஆங்காங்கே*
*100 துளைகள் தோண்டப்பட்டு*
*குகைக் கூரையில் படக்கருவிகள்*
*பொருத்தப்பட்டதும்*

*அதன் ஊடே கொஞ்சம் காற்றும்*
*அதை விடக் கொஞ்சமாக சூரிய*
*ஒளியும் உட்புகுந்ததும்*

*மீட்பர்களுக்கு வழிகாட்ட வழி நெடுக*
*ஒரு கயிறு போடப்பட்டதும்*

*தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓ*
*சா நிலமையை நேரில்*
*அவதானித்ததும்*

*உள்ளே அதிகதூரம் குகைக்குள்
முன்னேறிய சுழியோடிகள்
செயற்பாட்டு முகாமொன்றை
தற்காலிகமாக அமைத்ததும்*

*சிறார் யோகா,ஆசனம்,தியானம்,மூச்சுப்
பயிற்சி மூலம் மனதை
ஒருமுகப்படுத்தி சோர்வை தவிர்க்க
ஆரம்பித்ததும்*

*அவரகள் உயிருடன் இருப்பதை
முதலில் பிரித்தானிய சுழியோடிகள்
குழு கண்டதும்*

*ஆக்ஸிஜன் உருளைகள
விநியோகித்ததும்*

*ஏசாதீங்கம்மா என்ற வார்த்தை
உள்ளிருந்தும்*

*பசியை தாங்கினாயா என்ற வார்த்தை
வெளியிலிருந்தும் பலமுறை
குகைச்சுவர்களில் எதிரொலித்ததும்*

*மருத்துவர்,தாதி உட்பட ஏழு பேர்
கொண்ட சுழியோடிகள் மருந்து
களுடனும், உணவுகளுடனும் சிறார்
இருந்த பகுதிக்கு சென்று தங்கியதும்*

*மீட்பு மருத்துவ குழுவினர் முகத்தை மூடும் வகையில் மூச்சுக்கவசம் அணியும் பயிற்சியையும் முக்குளிப்புப் பயிற்சியையும் ஆரம்பித்ததும்*

*ஒவ்வொரு சிறுவரோடும் உடன்வரும் இரண்டு சுழியோடி வீரர்களில் ஒருவர் மீட்கப்படும் சிறுவனின் காற்றுக் குடுவையை சுமக்க,அடுத்தவருடன் அவன் கயிற்றால் இணைக்கப்படும் திட்டம் தீட்டியதும்*

*மீட்புப் பணியில் ஈடுபட்ட ஒருவர் உள்ளே உயிரிழந்ததும்*

*சர்வ தேச சுழியோடிகள் 18 பேர் நான்கு சிறாரை பாதுகாப்பாக முதலிலும்,மேலும் நான்கு சிறாரை அடுத்தநாளில் மீட்டதும்*

*அதற்கும் அடுத்த நாளான யூலை 10 ம் திகதி மிகுதி நான்கு சிறாரும் பயிற்சியாளரும் கரை சேர்ந்ததும்*

*மீட்பு பணியாளர்களும் பவுத்திரமாக குகையை விட்டு வெளியேறியதும் -*

*மொத்த உலகமும் திரும்பிப் பார்த்து*

*வாழ்வோடு வரவுவைக்கும் வரலாறானது!*

*தாய்லாந்தின் 10,000 மக்கள், 100க்கும் மேற்பட்ட சுழியோடிகள் , 900 பொலிஸார் ,2000 ராணுவ சிப்பாய்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.*

*10 பொலிஸ் உலங்குவானுர்திகள், 7 பொலிஸாரின் நோயாளர் ஊர்திகள், 700 பிராணவாயு உருளைகள் ,நூறு கோடி லீட்டர் நீரை வெளியேற்றும் இயந்திரங்கள் மீட்பு பணிகளில் இயங்கின.*

*கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா, ரஷ்யா, இந்தியா, ஜப்பான், இஸ்ரேல் , பெல்ஜியம் , செக் குடியரசு, டென்மார்க் , பின்லாந்து, நெதர்லாந்து, லாவோஸ் நாடுகளின் ஆகக் குறைந்தது ஒரு நீரிடர் மீட்பு நிபுணருக்காவது மீட்பு பணியின் வெற்றியில் பெரும் பங்கிருந்தது.*

*இருட்டுக்கு பயம் (Nyctophobia),*

*வெளவால் எச்சங்களால்வரும்*
*நோய் (Histoplasmois),*

*எலிகளின் சிறுநீர் தரும்*
*வியாதி(Leptospirosis),*

*ஈரநிலப் பூஞ்சைகள் மூலம்*
*உருவாகும் பிணி(Melioidois)*

*போன்ற அவர்களுக்கு ஏற்படக்*
*கூடிய உபாதைகளிலிருந்து,*

*ஆண்டவா அவர்களை காப்பாற்று*
*என்பதே உலகின் பிரார்த்தனை!*

## ஆரம்பமானது!

*முடிவு ஆரம்பமானது..*

*ஆரம்பத்திலேயே முடித்து*
*வைக்கப்படும் என்ற எதுவித*
*நம்பிக்கையும் இல்லாமல்!*

*உலகை உலுப்பும் உருக்கொண்ட*
*அசுரனாக ஒரு வைரஸ் ஊழித்*
*தாண்டவம் புரியும் -*

*மக்கள் கூடும் பொது நிகழ்ச்சிகள்*
*கைவிடப்படும் -*

*அங்காடிகள் போன்ற சகல பொது*
*நிறுவனங்களிலும் ஆளுக்காள் இரு*
*மீட்டர் இடை வெளி அமுலாகும் -*

*நோயுற்றோர் உயிர் காக்க*
*உலகெங்கும் போராடும்*
*மருத்துவர்க்கும் தாதியருக்கும்*
*நன்றி கூறுவர் உயிரோடிப்போர் -*

*ஊரடங்கு உத்தரவால் ஆங்காங்கே அடங்கும் உலகு -*

*போன்ற பாரிய நோய் கால அனர்த்தங்களை எதிர்வு கூறியபடி*

*ஆரம்பமானது முடிவு!*

*2019ம் வருடம் டிசம்பர் மாதம் சீனாவில் ஹூபே மாநிலத்தின் முதல் நகரான வுகானில் 61 வயதுடைய ஒரு நோயாளியே கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து சுதாகரிக்காமல் போன முதல் ஆள்.*

*அதிகப்படியான காய்ச்சல், இடை விடாத இருமல், தொல்லை தரும் சுவாசக்கோளாறு, தொடர்ந்த மூச்சுத் திணறல், உடல் சோர்வு, பலவீனம் போன்றன அவருக்கிருந்தது.*

*அதே வைரஸ் விரைவில் தன்னையும் காவு கொள்ளவுள்ளது தெரியாமல் ஆய்வு அறிக்கையை பார்த்தவாறே*

*அது கோவிட் 19 என குறிப்பிடப்படும் வைரஸ் என்றார் பரிசோதித்த மருத்துவர்.*

*கோவிட் 19 என்பது corona virus disease 19 என்ற ஆங்கில பதத்தின் முதலெழுத்துகளாலானது.*

*ஆய்வாளர்கள் ஆரம்பத்தில் அதனை 2019-nCov என 2019 novel Corona Virus என்ற ஆங்கில பதத்தின் முதலெழுத்துகளால் குறித்தனர்.*

கீரிடத்தில் உள்ள முட்கள் போன்ற உருவமைப்பை இந்த வைரஸ் பெரிதும் ஒத்திருந்தமையால் கீரிடத்தின் லத்தீன் சொல்லான கொரானாவிலிருந்து இந்த நோய் பெயர் பெற்றது.

*2002 ல் உலகை முகமூடியுடன் திரிய வைத்த சார்ஸ் வைரஸ் Severe acute respiratory syndrome (SARS)*

*தொற்று வீரிய வரிசையில் 6 ஆவது நிலையில் உள்ளதெனின் இந்த கொரோனா வைரஸ் 7 ஆவது நிலையாகும்.*

*உலகில் உள்ள வைரஸ்கள் அனைத்துமே மூன்று முக்கிய வகைக்குள் நோய் பரப்புவன.*

*முதலாவது மாரி காலத்தில் வேகமாகப் பரவி பிறகு குறைந்து விடும் காய்ச்சல் போன்று குறிப்பிட்ட காலத்தில் பரவும் எபிடமிக் (Epidemic)*

*இரண்டாவது அம்மை, மலேரியா போன்று குறிப்பிட்ட பகுதியில் பரவும் என்டமிக் (Endemic)*

*அடுத்தது குறிப்பிட்ட காலத்திலோ அல்லது குறிப்பிட்ட பகுதியிலோ பரவாது சார்ஸ் வைரஸ்,இபோலா வைரஸ் போன்று வேகமாக*

*உலகெங்கும் பரவும் பாண்டமிக் (Pandemic)*

*மருத்துவரையும் நோயாளரையும் அடுத்த 14 நாட்களுக்குள் பலியெடுத்த பாண்டமிக் வைரஸ் அவர்களுடன் நெருங்கிப்பழகியவர் களையும் அடுத்தடுத்த சில நாட்களில் கொன்று குவித்தது.*

*இவர்கள் அனைவருமே நோயின் ஆரம்ப அறிகுறிகளை அலட்சியம் செய்திருந்தவர்கள்.*

*தொடுகையினால் மட்டுமல்ல, சளி, உமிழ் நீர்,வியர்வை ஆகியவை படுவதாலும் தும்மல், இருமல் மூலம் காற்றினாலும் கிருமிகள் பரவும் வேகம் பேரிடரை விரைந்து விளைவிக்கும் தன்மை கொண்டதாக அறியப்பட்டது.*

*தொண்டையை ஈரலிப்பாக வைத்திருத்தல் தடுப்பு*

*நடவடிக்கையில் முக்கியமான முன்னேற்பாடு ஆகும்.*

*தொண்டையில் உள்ள சவ்வு காய்ந்திருப்பின் பத்து நிமிடங்களுள் கிருமிகள் அங்கு படையெடுத்து படிந்துவிடும்.*

*அடுத்தவருடன் அனாவசியமாக கை குலுக்கலை தவிர். சவர்க்காரத்தால் அடிக்கடி கைகளை கழுவிக்கொள். தேவைக்கேற்ப முகமூடி அணி. வைட்டமின் சி உட்கொள். காரமான உணவை நீக்கு.தொண்டை வறண்டிருப்பதாக உணர்ந்தால் வெதுவெதுப்பான நீரை பருகு. போன்றன பாதுகாப்புக்கு அவசியமான அறிவுறுத்தல்கள்.*

*நோயினால் பலியான பலர் அருகே இருந்த பாரிய வுகான் சந்தையின் வாடிக்கையாளர்களாகவிருந்தனர்.*

*அவர்கள் அனைவரினதும் ஏகோபித்த விருப்பாக வௌவாலும், பாம்பும், எறும்புதின்னியும் அன்றாட உணவாக உயிரிழந்தன.*

*அதனால் கொடூர கிருமிகள் அவற்றிலிருந்தே தொற்றியிருக்கலாம் என முதலில் காரணம் கற்பிக்கப்பட்டது.*

*ஆரம்பத்தில் நோயினால் பீடிக்கப்பட்ட சீனர்கள் எவர்க்கும் வுகான் சந்தைக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை எனவும் இச் சந்தைக்கு 30 கி.மீ.தொலைவில் உள்ள கொடிய வைரஸ் கிருமிகளை கண்டறியும் ஆய்வு கூடத்தில் (Wuhan Institute of Virology) மனிதர்கள் பரிசோதனைக்காக உருவாக்கிய வைரஸ் வெளியே கசிந்ததாலேயே இந்த அனர்த்தம் ஆரம்பமானது எனவும் இங்கிலாந்திலிருந்து*

*வெளிவரும் Lancet என்ற மருத்துவ இதழ் செய்தி வெளியிட்டது.*

*இதனை நிராகரித்த சீன அரசாங்கம் கொரோனா வைரஸ் போன்ற BSL 4 (Bio Safety Level 4) வீரியம் மிக்க அதி பயங்கர வைரஸ் வகையை ஆராய்வதே அதன் பணி என்பதனை ஆமோதித்தது.*

*இதே போன்ற 54 ஆய்வு கூடங்கள் உலகெங்கும் உள.*

ஆயிரம் படுக்கைகளுடன் ஹோவ் ஷென் ஷான் *(Huoshenshan)* மருத்துவ மனையை 2020 ஜனவரி 23 க்கும் பெப்ரவரி 2 க்கும் உட்பட்ட பத்து நாட்களில் புதிதாய் கட்டிய சீனா மேலும் பதினான்கு தற்காலிக மருத்துவ மனைகளை 24 மணி நேரத்தில் உருவாக்கி 12 000 நோயாளர்களை பராமரித்தது.

*கண்ணுக்குத் தெரியாத அந்த நுண்ணுயிர்கள் எத்தனை லட்சம் உயிர்களை காவு கொண்டன என்று கவனச்சிதறலுடன் கணக்குப் பார்க்கும் காலமல்ல இது!*

*ஆனால் கண்ணுக்குத் தெரியாத அந்த நுண்ணுயிர்கள்தான் சீனாவின் பொருளாதாரத்தைப் பாதித்தன.*

*சீன மக்களை கொந்தளிக்க வைத்தன.*

*ஐந்து கோடி பொருட்களுக்கான இறக்குமதி வரியை பாதியாக்கியன.*

*இருபதாயிரம் நோயாளரை கருணை கொலைக்காக ஏங்க வைத்தன.*

*3711 உல்லாசப் பயணிகளை வைர இளவரசி Diamond Princess என்ற ஆடம்பரமான கப்பலுடன் நடுக்கடலில் தவிக்கவைத்தன.சீனக் கப்பல்கள் பலதை ஆங்காங்கே தத்தளிக்க வைத்தன.*

*ஒரு மாதத்துக்குள்ளாகவே 6.5 கோடி மக்களை தனிமைப்படுத்தின.*

*வீட்டுக்கொரு நபர் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வீட்டை விட்டு வெளி வரலாம் என முடக்கின.*

*சீனாக்காரனா- உள்ளே வராதே! கொரோனாவை உள்ளே கொண்டு வராதே! கை குலுக்காதே! என மிரள வைத்தன!*

*கொரோனாவிற்கு 4 வகையான தடுப்பூசிகள் தற்காலிகமாக உள்ளன.*

*நிரந்தர மருந்து கண்டு பிடிக்கப்படலாம் ஆனால் அது பாவனைக்கு வருவதற்கு ஒரு வருடமாவது பிடிக்கும் என்கின்றது உலக சுகாதார மையம்.*

*வைரஸிற்கு தமிழ் இல்லையா என கேட்கிறீர்களா?*

*தீநுண்மி – நச்சுநுண்மம் – நச்சுயிரி!*

## *சுவிஸ் வங்கி.*

*கையில் கொஞ்சம் காசு சேர்ந்தாலே காணும்.*

*மனம் சுவிஸ் வங்கியில் கணக்கு வைக்க ஆரம்பித்துவிடும்.*

*சுமார் 40 000 ஈழத்தமிழர்கள் சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்துள்ளனர் என்றவுடனே அடடா அந்த அளவிற்கு கோடீஸ்வரர்கள் எம்முள் இருக்கின்றார்களா? என கணக்குப் பார்க்கத் தொடங்கிவிடுவதும் அதே மனம்தான்.*

*40 000 ஈழத்தமிழ்க் குடும்பங்கள் சுவிஸில் வசிக்கின்றார்கள் என்ற புள்ளி விபரம் பின்புதான் நினைவில் வரும்.*

*நீங்கள் எத்தனை கோடி பணத்தை சுவிஸ் வங்கிகளில் வைப்பீடு செய்திருந்தாலும் அதனை எந்த வொரு ஜகஜ்ஜால கில்லாடியாலும் கண்டுபிடிக்க முடியாது என்ற*

*அபிப்பிராயம் பலருக்கு உண்டு.*

*கணக்கு வைத்திருப்பவர்களின்
விபரத்தைப் பாதுகாக்கும்
சட்டதிட்டங்கள் உலக நாடுகள்
அனைத்திலும் உள்ள ஒவ்வொரு
வங்கிக்கும் உள்ளது.*

*சுவிஸ் நாட்டின் நாணயம்
உலகளவில் மிகவும் நிலையான
பெறுமதி கொண்டது.*

*அங்கு தங்கத்தின் மதிப்பும்
உயர்ந்தது.*

*எனவே பொருளாதார பலம்
நிரந்தரமானது.*

*1905ம் ஆண்டுக்குப் பின் யுத்தம்
காணாத பூமி.*

*இவைதான் விடயம் அறிந்தவர்கள்
சுவிஸ் வங்கிகளை நாடுவதற்கு
அடிப்படை ஆதாரம்.*

*தனவந்தர்கள் பிரபுகள் சீமான்கள்
என நேர்மையானவர்கள் பலர் தமது*

*உண்மையான பணப்பரிவர்த்தனையை சுவிஸ் வங்கிகளுடாக மேற்கொள் கின்றனர் என்பதனை மறைத்து மிகப் பெரிய பணக்காரர்களும் நிறைய கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களும் தவறான வழியில் சம்பாதித்தவர் களும் அரசியல்வாதிகளும் வில்லன் களும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் போன்றவர்கள்தான் சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கலாம் என்பது ஹாலிவூட் படங்களும் மேடைகளில் தோலுரிக்கும் தமிழ்நாட்டுப் பேச்சாளர்களும் பரப்பிவிட்ட தவறான கருத்து.*

*கணக்கு வைத்திருப்பவர்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாப்பற்காக வென்றே சுவிஸ் வங்கிகளில் அதி தீவிர சட்டதிட்டங்கள் உள்ளதாலும் ரகஸியங்கள் கசிய வாய்ப்பே இல்லை என்ற காரணத்தாலும் பணமுதலைகள் சுவிஸ் வங்கிகளை நோக்கி வாய்பிளக்கின்றன.*

*கழுத்தை வெட்டினாலும் காட்டிக் கொடுக்காத நேர்மை சுவிஸ் வங்கி களுக்கு உண்டு எனச் சொல்வார்கள்.*

*சொந்த நாட்டில் வங்குரோத்து (Bankrupt) நிலைவரினும் சுவிஸ் வங்கிப் பணம் பத்திரமாக இருக்கும்.*

*அரசு பறிமுதல் செய்யும் ஆபத்து இல்லை.*

*எல்லாவற்றிக்கும் மேலாக எதிரி களால் உயிருக்கோ பணத்துக்கோ எவ்வித தொல்லையுமிராது.*

*101 நாடுகள் தற்பொழுது பெருவாரியான பணத்தை சுவிஸ் வங்கிகளில் பதுக்கியுள்ளதாக கருத்துக் கணிப்பீடு தெரிவிக்கிறது.*

*சுவிஸ் வங்கிகள் நடைமுறைப் படுத்தும் எண்களால் ஆன கணக்கு (Numbered Accounts) உலக பிரசித்தமானது.*

*அவை 34 இலக்கங்களை மட்டும் கொண்டிருக்கும்.பெயர் விலாசம் தொலைபேசி எண் போன்ற இதர விபரங்கள் கணக்கில் இருப்பதில்லை.*

*குறிப்பிட்ட அதிகாரிகள் இரண்டொரு வரைத் தவிர வேறு எவருக்கும் வேறு எந்த விபரமும் தெரிவதில்லை.*

*கணக்கு வைத்திருப்பவரின் முன் அனுமதி இல்லாமல் விபரங்களை வெளிப்படுத்துவதை சுவிஸ் சட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.*

*அதனால் அவை ரகஸிய வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.*

*உலகின் சகல வங்கிகளும் வாடிக்கையாளரது பெயருடன் செயல்படுவதிலிருந்து இது வேறுபட்டது.*

*உங்களது சுவிஸ் வங்கி கணக்கை அநாமதேயமானதாக வைத்துக் கொள்ளலாமா? என்ற கேள்வி*

எழுமானால் ஆம்.இல்லை. என்ற இரண்டுமே பதில்களாகும்.

வங்கியின் பாதுகாப்பு பிரத்தியேக சட்டங்களுக்கமைய அது ரகஸிய மானது.

ஆனாலும் வங்கி அதிகாரி களால் உங்கள் பெயர் விலாசம் மற்றும் இதர தனிப்பட்ட அடையாளங்களை யும் அறிய முடிவதால் அது பரகஸியமானது

உள்ளூர் வங்கிகளில் கணக்கு இருந்தாலும் இல்லாவிடினும் பரவாயில்லை.பதினெட்டு வயது நிரம்பியவர்கள் எவரும் சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

சாதாரணமாக வங்கியில் கணக்கு ஆரம்பிக்க என்னென்ன சம்பிரதாயங் கள் உண்டோ அவை அனைத்தும் சுவிஸ் வங்கிகளுக்கும் உண்டு.

*மற்ற வங்கிகள் வழங்கும் சேவைகள் போல சுவிஸ் வங்கிகளும் வழங்கு கின்றன.*

*சேமிப்புக் கணக்கு கூட உள்ளது.*

*எந்த நாட்டு நாணயமாகவும் வைப்பீடு அமையலாம்.*

*கணக்கை ஆரம்பிக்கஆகக் குறைந்த தொகை சுவிஸ் பிராங் SFr· 100 000 ஆகும்.வட்டி வீதம் உயர்வானது. எனினும்SFr 300 பராமரிப்பு செலவாக வருடந் தோறும் அறவிடப்படும்.*

*சுவிஸ் வங்கிகளுக்கு வேறு நாடுகளில் கிளைகள் இல்லை.*

*புதிதாக கணக்கு வைத்துக்கொள்ள விரும்புபவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது இணைய மூலமாகவோ ஆவணஅடையாளங்களுடன் விண்ணப்பிக்கலாம்.*

*The Swiss Credit Bank(Credit Suisse) , The Union Bank of Switzerland( UBS) உட்பட ஐந்து முக்கியமான சுவிஸ் வங்கிகள் உண்டு. இவை தவிர 327 வேறு சிறு சிறு வங்கிகளும் உள்ளன.*

*பத்து வருடங்களுக்குள் வாரிசுதாரர் பணத்தை மீட்காது விடின் பின்பு அதனை எக்காலத்திலும் மீட்க முடியாத வகையில் செயலிழந்து போகும் வாடிக்கையாளரின் கணக்கு.*

*உரிய ஆவணங்களும் தகுந்த அடையாளங்களும் போதிய அத்தாட்சிகளுமின்றி வாரிசுகளால் மீட்க முடியாது முடங்கி விட்ட பணம் கோடிகளின் கோடி என்கின்றது சுவிஸ் வங்கிகளின் பதிவேடு.*

*சுவிஸ் வங்கிகளில் சேமிப்பது புத்திசாலித்தனம்.*

*அந்த சேமிப்பை வாரிசுகளாவது செலவழிக்க ஆவன செய்வது அதைவிட புத்திசாலித்தனம்.*

# *கனடாவில் கல்யாண வைபோகம்.*

***மாங்கல்யம் தந்துநாநேந மமஜீவன ஹேதுநா***
***கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜீவ சரதசதம்....***

*பாக்கியவதியே! நான் சிரஞ்சீவியாக இருப்பதற்கு காரணமாக இந்த மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகின்றேன். நீயும் நூறாண்டு வாழ்வாயாக.*

*இந்து திருமணங்களில் தாலி கட்டும் பொழுது குருக்கள் ஐயா அர்த்தத்துடன் உச்சரிக்கும் மந்திரத்தின் அர்த்தம் இது.*

*ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை முடிக்க வேண்டும் என்றொரு பிழையான தகவலை நமது முன்னோர் எமக்கு சொல்லிச் சென்றிருப்பார்களா?*

*அதுதான் இல்லை!*

*ஆயிரம் முறை போய் சொல்லி ஒரு கல்யாணத்தை முடிக்கவேண்டும் என்பதுதான் பொருத்தமாயிருக்கும். இடையில் வந்த யாரோ அதனைப் பொய்யாக்கியிருக்கலாம்.*

*ஜாதகம் பொருத்தல், பெண் பார்த்தல், நிச்சயதார்த்தத்தில் கலத்தல், அழைப்புக் கொடுத்தல், திருமணம் செய்தல் என ஒவ்வொரு சடங்கிலும் மகிழ்ச்சி நீட்சிமை பெற ஆயிரம் முறை போய் சொல்ல வேண்டுமே தவிர ஆயிரம் பொய் ஒத்துழைக்காது! சுற்றம் சூழவந்து வாழ்த்துவதற்கு ஆயிரம் பொய் சரிப்பட்டுவராது!*

*பாரம்பரிய பழக்க வழக்கங்களில் பற்றுள்ள ஒருசிலர் விவாகத்திற்கு மிகவும் துல்லியமாக நாள் நேரம்*

*பார்ப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.*

*பூர்வீக மக்களின் நீண்ட இணைந்த வாழ்வின் அழகுக்கும் வசீகரதுக்கும் போதிய ஆதாரமாக அமைவது அவர்கள் நாள் நேரம் பார்த்து மணம்புரிந்தமையே என உளப்பூர்வமாக நம்புவது வாழ்க்கை எவ்வளவு பெரியது என்ற வியப்பை அதிகரிக்கின்றது. பரவசத்தைத் தருகின்றது.*

*கிராமங்களில் இருந்த இப்பழக்கம் புதிய மீண்டும் தளிர்ப்பது வாழ்வு குறித்த புதிய நம்பிக்கையை உருவாக்குகின்றது.*

*லட்சக் கணக்கில் செலவழித்து உலகை மிரள வைப்பதில் நாட்டம் ஒரு புறம் அதிகரிக்க இன்னொரு புறம் கல்யாணத்திற்கு நாள் குறிக்கும் பொழுது உன்னிப்பாக*

*கவனிக்க வேண்டிய 11 விதிகளில் அதிக கரிசனை காட்டுகின்றது.*

*1.தை பங்குனி சித்திரை வைகாசி ஆனி ஆவணி ஆகிய ஆறு மாதங்கள் மட்டுமே திருமணத்திற்கு உகந்தது.*

*2.இரண்டு பௌர்ணமி அல்லது இரண்டு அமாவாசை ஒரே மாதத்தில் வருவது மலமாதம் எனப்படுவதால் தவிர்க்க வேண்டும்.*

*3.வளர் பிறை காலத்தில் அதாவது சுக்கில பட்சத்தில் திருமணம் செய்வது ஏற்புடையது.*

*4.புதன் வியாழன் வெள்ளி ஆகிய நாட்கள் சுப ஆதிபத்தியம் உள்ளதால் திருமணத்திற்கு ஏற்ற மிகச் சிறந்த நாட்கள்.*

*5.இடபம் மிதுனம் கடகம் சிம்மம் கன்னி துலாம் தனுசு மீனம் ஆகிய*

*சுபலக்கினங்களில் மட்டுமே தாலி கட்டலாம்.*

*6.மணமக்களின் பிறந்த திகதியில் அல்லது தினத்தில் திருமணம் நிகழக் கூடாது.*

*7.மணமக்களின் சந்திராஷ்டம தினமாக மணநாள் அமைதல் நல்லதல்ல.*

*8.துவிதியை திரிதியை பஞ்சமி ஸப்தமி தசமி திரயோதசி ஆகியவை சுப திதிகள்.ஏனையவை நிராகரிக்க வேண்டியவை.*

*9.அக்கினி நட்சத்திரம் மிருத்யூ பஞ்சகம் கசரயோகங்கள் போன்ற காலத்தில் திருமணம் நடத்தக் கூடாது.*

*10.முகூர்த்த லக்கினத்துக்கு 7ம் இடம் முகூர்த்த நாளன்று சுத்தமாக இருத்தல் வேண்டும்.*

*11.சுக்கிரன் குரு போன்ற சுப கிரகங்கள் மணமக்களின் ஜனன ராசிக்கும் திருமண லக்கினத்துக்கும் எட்டாம் வீட்டில் திருமணத்தின் பொழுது இடம் பெற்றிருக்கக் கூடாது.*

*விவாக முகூர்த்தத்திற்கு மிகவும் உத்தமமான நட்சத்திரங்களாக ரோகினி மிருகசீரிடம் மகம் உத்தரம் அத்தம் சுவாதி அனுஷம் மூலம் உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி ஆகியவை திகழ்கின்றன.*

*அச்சுவினி புனர்பூசம் பூசம் சித்திரை திருவோணம் அவிட்டம் சதயம் ஆகியவை மத்திமமாக கணிக்கப்படுகின்றன.*

*திருவாதிரை ஆயிலியம் பூரம் விசாகம் கேட்டை பூராடம் பூரட்டாதி ஆகியவை முகூர்த்தத்திற்கு அதர்மமானவை யாகும்.*

*பரணியும் கார்த்திகையும் மிக மோசமானவை என்பதால் முகூர்தத்திற்கு புறக்கணிக்கப்படும்.*

*திங்கள் புதன் வியாழன் வெள்ளி ஆகிய நாட்கள் திருமணத்திற்கு மிகச்சிறந்த நாட்களாகும்.*

*ஞாயிற்றுக்கிழமை மத்திமம். சனிக்கிழமையை தவிர்க்கலாம்*

*ஆனால் செவ்வாய் கிழமையோ கூடவே கூடாது.*

*எனவே வார நாட்களில் வரும் சடங்குகளால் சங்கடங்கள் வருவதில்லை.*

*வாழ்வும் வளமாக அமையும்.*

*இந்து திருமணங்களில் தாலி கட்டுவது முகூர்த்த நேரத்தில் நடை பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெற்றோரிடம் காணப்படுவதை*

*அவதானித்திருப்போம்.
அந்தக்கணத்தின் பரபரப்பு
அந்தணரிடமும் வீடியோ புகைப்படம்
எடுப்பவர்களிடமும் எகிறுவதும்
சர்வசாதாரணம்.*

*ஆனால் தாலி கட்டுவதை தொடர்ந்து
ஏழு அடி வைத்தலும் அம்மி
மிதித்தலும் அருந்ததி பார்த்தலும்
அதே முகூர்த்த நேரத்துள் நடை
பெற்றேயாக வேண்டிய
சம்பிரதாயங்கள் என்பதை வளமான
வாழ்வில் அதீத அக்கறை
உள்ளவர்கள் மட்டுமே கவனத்தில்
கொள்கின்றனர்.*

*நெற்றிப்பட்டம், சூளாமணி, சடை
நாகம், தோடு, தொங்கட்டான்,
மூக்குத்தி, சங்கிலி, அட்டியல்,
பதக்கம், கைவளை, காப்பு, மோதிரம்,
ஒட்டியாணம், மேகலை, விரிசிகை,
காற்சங்கிலி போன்ற 'அனைத்து'
தங்க நகைகளுடனும் மணவறைக்கு*

*அசைந்துவரும் மணமகள்,தாலியை மட்டும் மணவறையில் சூட்டப்பெற்று வாழ்க்கை முழுவதற்கும் தனக்கே உரியதென்னும் கம்பீரத்துடன் சுமங்கலியாக அழகு மிளிர வாழும்வரை வாழ விரும்புகின்றாள்.*

*பிள்ளையார் தாலி,கொம்புத்தாலி, அம்மன் தாலி,பிறைத்தாலி, தொப்பைத்தாலி, பட்டைத்தாலி,சிறகு தாலி, சிலுவைத்தாலி, கிண்ணிபொட்டுத்தாலி, கலாசாரத்தாலி, கருகமணித்தாலி,நாமத்தாலி,அன்னம் தாலி, துளசிமாடம் என பலவகை தாலியில் எதுவோ ஒன்று இல்லத்தரசியின் இலக்கணமாகின்றது.*

*இந்தியாவில் இவை அனைத்தும் மத-குலவழக்கிற்கமைய பாவனையிலிருக்க ஈழமக்களின் வாழ்வுடன் வருவது பிள்ளையார்தாலி அல்லது கொம்புத்தாலி அல்லது அம்மன்தாலி மட்டுமே.*

*கிறிஸ்தவருக்கு சிலுவைத்தாலியும் பிறைத்தாலியும் - இஸ்லாமியருக்கு பிறைத்தாலியும் கருகமணித்தாலியும் -வைஷ்ணவருக்கு நாமத்தாலியும் துளசிமாடத்தாலியும் நெஞ்சுக்கு நெருக்கமானவை.*

*சகல வகைத் தாலிகளும் சாஸ்திர,சம்பிரதாயங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவம் பெறும்.*

*வயிறு நிறைந்தபின் மணமக்களை மனம் நிறைய வாழ்த்துவது உரிய முறை மட்டுமல்லாது உயரிய முறையுமாகும்.*

*பட்டினியுடன் மணமேடைக்கு ஓடுபவர்கள் பசி மயக்கத்தில் தயிரும் ஊறுகாயும் போல வாழ்க என வாழ்திடினும் ஆச்சரியமல்ல.*

*அட்சதையை மணமக்களின் தலையில் ஆரம்பிக்க வேண்டும்*

*அடுத்ததாக தோள்களிலும் பின்னர் மடியிலும் தூவ வேண்டும்.*

*தலைதான் வாழ்த்துக்கு உன்னத மானது என்ற உறுதியான அபிப்பிராயத்தை கொண்டிருப்பவர்கள் 'தலைசிறந்தவர்கள்'.*

*வாக்கு செலுத்தும் நிலையங்களில் உள்ளது போன்ற வாக்குப்பெட்டி களை விஷயமறிந்தோர் முன்கூட்டியே தயாரித்து மணமேடைக்கு பின் பக்கத்தில் வைத்து விடுவார்கள்.*

*வாழ்த்து மடல்களையும் அவற்றுடன் இணைந்த காசோலைகளையும் பாதுகாப்பாக சேமிக்கவும் சேகரிக்கவும் அது அனுகூலமாகும்.*

*ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணின் வாழ்விலும் வளமான பங்கு வகிப்பதும் மிக உயர்ந்த மங்களப்பொருளாக மகிமை*

*பெறுவதும் தாலியே என
போற்றுவோர் - பெரியோர்!*

*பல நூறு வகையான தங்க
ஆபரணங்கள் இருந்தாலும் சுமங்கலி
கண்ணில் ஒற்றி வணங்கும்
தாலிதான் மகத்துவம் மிக்க
வாழ்வின் ஆபரணம் என
வாழ்த்துவோர் - நல்லோர்!*

*அட்சய திருதியை தினத்தில்
பொன்னும் பொருளும் புதிதாக
வாங்கினால் வளம் சேர்க்கும் என
யுகம் யுகமாக நம்பப்பட்டிருந்ததாக
புதிய சித்தாந்தம் கடந்த சில
வருடங்களாக பத்தர்களால்
உருக்கி வார்க்கப்பட்டு நம்பிக்கை
இல்லாததிருந்தவர்களிடையேயும்
நம்பப்படும் வார்த்தையாகியது.*

*அதன் பின்புதான் அன்றைய தினம்
தங்கம் வாங்கினால் மேலும் மேலும்
அங்கம் எங்கும் தங்கம் ஜொலிக்கும்
என்பது ஜொலிக்க ஆரம்பித்தது.*

*அமாவாசையின் பின் வரும் மூன்றாவது திதி திருதியை எனப்படும்.*

*வைகாசி மாத வளர்பிறையில் வரும் திருதியை, சிறப்பாக அட்சய திருதியை என அழைக்கப்படுகின்றது.*

*சித்திரையில் இரண்டு அமாவாசை வரும்வேளைகளில் சித்திரை மாதத்திலும் இது வருவதுண்டு.*

*அட்சய திருதியை தினத்தன்று செய்யப்படும் சகல செயல்களும் லட்சுமி கடாட்ஷம் மிகுந்து ஒன்றுக்கு பலவாகப்பலன் அதிகரிக்கும் என்று பவிஷ்யோத்ர புராணம் குறிப்பிடுகின்றதாம்!*

*அட்சய திருதியை தினத்தில் அட்சயம் என்று நாரணன் ஆசியளிப்பதும் அதன் அர்த்தம் புரிந்து பார்கவி தன் பார்வையை பக்தர் மீது பதிப்பதும் மகாலட்சுமியின் பார்வைபடும் இடத்தில் அட்ட ஐஸ்வர்யமும் தேயாமல்*

*வளரும் என்றிருப்பதும் அதே புராணத்தைப் புரட்டிய பத்தரின் கண்களில், ஏதேச்சையாக தென்பட்டிருக்கலாம்.*

*அட்சய திருதியில் பக்தியுள்ளோர்க்கு பஞ்சம் என பரிதவிப்பதும் தஞ்சம் எனத்தவிப்பதும் கொஞ்சங்கூட கிட்ட நெருங்காது என்பதை நினைவில் நிறுத்துகின்றன நகைக்கடைகள்!*

*கிருதயுகத்தில் ஊழிக்குப்பின் உலகம் தோன்றி செழித்து வளர ஆரம்பித்தது, சுந்தரேஸ்வரர் மீனாட்சியை மணம் புரிந்தது, விஷ்ணுவின் ஆறாவது அவதாரமாக பரசுராமர் அவதரித்தது, திரௌபதியின் துகில் வளர்ந்தது, சூரியன் அருளால் பாண்டவர் அட்சய பாத்திரம் பெற்றது, குபேரன் ஐஸ்வர்யத்தினை அடைந்தது, குசேலர் குபேரர் ஆனது போன்ற பல நன்மைகள் அள்ள அள்ளக் குறையாத,என்றும் எதையும் தரக் கூடிய அட்சய திருதியை தினத்திலே நடைபெற்றன என்பது ஐதீகம் .*

*அட்சய திருதியில் தானம் செய்வதால் பாவங்கள் அகன்று புண்ணியம் பல்கிப் பெருகும் என்ற மகத்துவம் காலாகாலமாக இருந்து வந்தது.*

*அதன் அடிப்படையில் ஆடைகளைத் தானம் செய்து உடல் ஆரோக்கியம் பேணினர்.*

*பழங்களை உவந்தளித்து உயர் பதவி அடைந்தனர்.அன்னதானம் செய்து அகால மரணம் தவிர்த்தனர்.*

*தயிரன்னம் தானமளித்து தடைகளைப் போக்கினர்.*

*பானகம் பருகக் கொடுத்து கல்வியில் முன்னேறினர் முன்னிருந்த மூத்த தலைமுறையினர்.*

*மாங்கல்யம்,மங்கல நாண்,மங்கல அணி, சுத்தரி,சுந்துரு போன்றன தாலிக்கு வேறு பெயர்கள்.*

*கி.பி.10ம் நூற்றாண்டின் பின்பே தாலி கட்டும் நாகரீகம் மகளிர் கழுத்தை வருட ஆரம்பித்தது.*

*தாலம் பனை ஓலைகள் அநாதியில் பயன்படுத்தப்பட்டு தாலி என்ற பெயர் பெற்றது. நீடித்த பாவனை கருதி உலோகத்தினாலும்,பெறுமதி காட்டிட பொன்னாலும் பின்பு மாற்றமடைந்தது.*

*புலிப்பல் தாலியும், புலிநகத்தாலியும் பண்டைய மக்களின் வீரதீரத்தை நெஞ்சில் நிரப்பின.*

*சிறாரின் காவல் கருதி பெற்றோரால் அணிவிக்கப்பட்டது ஐம்படைத்தாலி எனப்பட்டது.*

*திருமணத்திற்கும் இந்தத்தாலிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.*

*தாலி என்பது மஞ்சள் பொருள் கட்டிய கயிறு என்பது தொல்*

*அடையாளங்களிலொன்று.*
*விரலிமஞ்சளை இன்னமும் நெஞ்சில் சுமக்கின்றனர் அதன் இன்றைய பிரதிநிதிகள்.*

*தோஷபரிகாரமாக வேம்பு, வாழை, கழுதை,நாய் போன்றவற்றிக்கு தாலிகட்டுவர் அற்ப சந்தோஷிகள்.*

*கிழாரியத்தின் (Feudalism), அல்லது ஆணாதிக்கத்தின் (Male Chauvanism) சின்னமே தாலிச்சரடு என தாலி அணிந்தபடியே சில ஏறுகள் ஏறுமாறாக சரடுவிடுவது மூச்சு முட்டும் ஒரு போராட்டம்.*

*ஏழு அல்லது ஒன்பது அல்லது பதினொரு பவுனில் 22 கரட் தங்கத்தில் தாலிகட்டும் வழமைமீறி 100பவுனில் தாலிகட்டினான் ஒரு கனடாத்தமிழன். நாகரீகம் கட்டிலின் உயரத்துக்காவது எகிறியிருக்குமா?*

*150 நடிகைகளுக்கு நடிப்புக்காக தாலி கட்டினார் நடிகர் சிவகுமார் என்று 'கின்னஸ்' கூறும்.*

*தாலிபற்றிய விபரமான தகவல்கள் எதனையும் காட்டுவதற்கு சங்க இலக்கியங்கள் எவையுமே கழுத்தை நீட்டவிலை.அவற்றில் மிக குறுகிய அளவில் மட்டுமே உவமானமாக காட்டப்பட்டுள்து.*

*அந்த வகையில் சிலப்பதிகாரம்தான் தாலி கட்டிக்கொண்ட முதல் இலக்கியமாகின்றது.*

*கனடாவில் ஒட்டுமொத்தமாக இளைய தலைமுறை சாத்திர சம்பிரதாயங்களுன் லயித்துவிட்டது என்று சொல்ல முடியாது.*

*உலங்கு வானுர்தியில் அல்லது குதிரை வண்டியில் தனது துணை வாராந்தத்தில் அல்லது விடுமுறை*

*நாட்களில் வந்திறங்க ஆடம்பரமான மண்டபங்களில் அமர்களமாக மணம் புரிதல் வேண்டும் என கவர்ச்சி காட்டுபவர்களும்,*

*“பொண்ணு தர மாட்டேன்னு சொல்லிட்டாங்களா? தூக்குடா அந்தப் பெண்ணை...கட்றா தாலியை!”*

*என திரைப்பட வசனங்களில் வாழ நினைப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.*

*அட்சயம் என்றால் என்ன? என்ற கேள்வி சந்தேகத்துக்கிடமின்றி எல்லோரிடமும் உண்டு.*

*வளர்வது குறையாதது என்ற அர்த்தம் அட்சயம் என்ற சொல்லுக்கு உள்ளது.*

*அட்சயம்என்ற சொல்லை அடியவர் துயர் நீக்கி சுபீட்சமளிக்க அனந்த*

*சயனன் பயன் படுத்தியதாக சொல்கிறது விஷ்ணு புராணம்.*

*அதனால் அது ஒரு ஆசிச் சொல்லுமாகின்றது.*




*மகத்தான வளமும் நலமும் வளர வாழ்த்துக்கள்.*

***அட்சயம்!***

